# பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்

முனைவர் செ.சாரதாம்பாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்

முனைவர் செ. சாரதாம்பாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாவது முதன்மைச் சாலை
மையப் பல்தொழில் நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

பெரியார் ஈ.வெ.ரா. நாகம்மை அறக்கட்டளைச் சொற்பொழிவு

அறக்கட்டளை நிறுவியோர் : பெரியார் மகளிர் அணி

வரிசை எண் :1 நாள்: 27-12-05

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Penniya Ulappakuppaivum Pen Eluthum |
| Author | : | Dr. S. Sarathambal<br>Associate Professor<br>Dept. of Comparative Literature<br>Madurai University, Madurai - 21 |
| General Editor | : | Dr. M. Valarmathi<br>Research Assistant<br>International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai 600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Taramani, Chennai - 600 113.<br>Telephone : 22542992 |
| Publication No | : | 557 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2005 |
| Paper Used | : | 18.6 kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 points |
| No. of Pages | : | viii + 120 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.40/- (Rupees Forty only) |
| Printing | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Luz, Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | Feminism |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# அணிந்துரை

இருபதாம் நூற்றாண்டில் அறுபதுகளிலும் எழுபதுகளிலும் மேலை நாடுகளில் ஃபெமினிசம் (Feminism) என்ற கருத்தாக்கம் செல்வாக்குப் பெறத் தொடங்கியது. இது சமுதாய அரசியல் இயக்கமாக, பகுத்தறிவு இயக்கமாகச் செயல்படத் தொடங்கியதால் உலகின் பல நாடுகளில் இக் கருத்தாக்கம் பரவலாயிற்று. இது சமுதாய அளவில் பல மாறுதல்களையும் இலக்கியப் படைப்புகளில் பெரும் தாக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதில் பலவிதமான குழுக்களும், அதற்குரிய ஃபெமினிசம் சிந்தனைகளும் இருந்தபோதிலும் தற்காலத்தில் உலகளாவிய நிலையில் ஓர் இயக்கமாக வளர்ந்து ஆற்றல்மிக்கதாக விளங்குகிறது. தமிழகத்திலும் பெண்ணியம் எனும் இச் சிந்தனை பரவலாகி வருகிறது.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பெண் விடுதலை என்னும் சிந்தனை பெண்ணுலகை விழிப்புணர்ச்சி மிக்கதாக்கி வரும் நிலையில், மேலை நாட்டில் செல்வாக்குப் பெற்ற பெண்ணியம் என்ற இக் கருத்தாக்கம் பெண்ணுலகை முழுமையான விடுதலைநோக்கிச் சிந்திக்க வைத்துள்ளது. இதனால் பெண்ணைப் பற்றிக் காலங்காலமாக எழுதப்பட்டும் பேசப்பட்டும் வந்த மரபார்ந்த சிந்தனைகளை ஆய்வுக்குள்ளாக்கியுள்ளது. பெண்ணுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை, கொடுமைகளைக் கண்டறிந்து அவற்றைப் புறந்தள்ளி விட்டுப் புதிய சமத்துவ உரிமைமிக்க பெண்ணுலகை உருவாக்கும் முயற்சியாகப் பெண்ணியம் என்னும் இச் சிந்தனை உருவெடுத்துள்ளது.

இக்காலத்தில் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பெண்ணியம், பெண்ணியத் திறனாய்வு ஆகியன குறித்த ஆய்வுகள் பேரளவில் நடைபெற்று வருகின்றன. இச் சிந்தனையையொட்டி வருகின்ற புதிய நூல்கள் ஆய்வுலகில் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இச் சிந்தனைக்கு வளமூட்டி வருகின்றது. முனைவர் செ. சாராதாம்பாள் எழுதியுள்ள **'பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்'** எனும் சிறப்புமிக்க இந்நூலும் இவ்வரிசையில் இடம்பெறுவதாகும்.

இந்நூல் பெண்ணியச் சிந்தனை என்பதைத் தொடக்க நிலையில் இருந்து அதன் தற்கால வளர்ச்சி வரை விரிவாக ஆராய்வதாகவும் எளிமையாக எடுத்துரைப்பதாகவும் அமைந்துள்ளது. பண்டைத் தமிழ் இலக்கியக் கூறுகளையும் பெண் படைப்புகளையும் ஆய்வுக்குட்படுத்தி அவற்றின் நிலைப்பாடுகளைப் பெண்ணிய நோக்கில் விளக்கியுள்ளது சிறப்புக்குரியதாகும். இக்காலப் பெண்ணியத் திறனாய்வுகள் மூலம் தந்தை வழிச் சமுதாய மரபில் பெண் விடுதலை பெறுவதற்குத் தடையாக உள்ளவற்றையும் அத் தடைகளை உடைத்தெறிவதற்கான விழிப்புணர்வை வழங்கிவருவதையும் ஆசிரியர் முனைவர் செ. சாராதாம்பாள் உரிய சான்றுகளுடன் எடுத்துக்காட்டியுள்ளார்.

அன்னை நாகம்மையார் பெயரில் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு கி. வீரமணி அவர்கள் நிறுவியுள்ள இவ்வறக்கட்டளையின் முதல் சொற்பொழிவுக்குரிய நூலாகப் பெண்ணியம் குறித்த இந்நூல் வெளிவருவது பெருஞ் சிறப்புக்குரியதாகும். தந்தை பெரியார் பெண் விடுதலை என்பதைத் தமது சுயமரியாதை இயக்கத்தின் முதன்மைத் தத்துவமாக அமைத்து வாழ்நாள் முழுவதும் தொண்டாற்றி வந்ததன் விளைவாக இன்றைய பெண்ணுலகு விழிப்புணர்ச்சிமிக்கதாக விளங்குகின்றது. இந்த ஈடு இணையற்ற தொண்டிற்கு உறுதுணையாக விளங்கியவர் அன்னை நாகம்மையார். அவருடைய பெயரில் அமைந்த இவ்வறக்கட்டளை மூலமாக வெளிவருகின்ற பெண் விடுதலைச் சிந்தனை பற்றிப் பேசும் இந்நூல் அனைவராலும் பாராட்டப்படும்; வரவேற்கப்படும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்நூல் வெளிவரத் துணைநின்ற இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் மு. வளர்மதிக்கு நன்றி உரியது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன், இ.ஆ.ப., அவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
26-12-2005

இயக்குநர்

# ஆசிரியரைப் பற்றி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தமிழியல்புலம், ஒப்பிலக்கியத் துறையில் இணைப்பேராசிரியராகப் பணியாற்றுகின்றார். எம்.ஃபில் பட்டப்படிப்பில் குலச்சட்டங்கள் குறித்து ஆய்வு செய்துள்ளார். சங்க இலக்கியத்தில் செவ்விய;ல் பண்புகள் (சங்க - கிரேக்க இலக்கிய ஒப்பீடு) என்ற தலைப்பில் டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

மொழிபெயர்ப்பில் சான்றிதழ்ப் பட்டமும், வடமொழிக் கல்வியில் மேற்சான்றிதழ்ப் பட்டமும், கணினியில் (Diploma in Computer Application - CDS) பட்டயச் சான்றிதழும் பெற்றுள்ளார். ஒப்பிலக்கியம், சங்க இலக்கியம், பெண்ணியம், உளப்பகுப்பாய்வு ஆகியவற்றைச் சிறப்புத் துறைகளாகக் கொண்டுள்ள இவர் இத்துறைகளில் 65க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

இதுவரை இவரது 1) செவ்வியல் (Classicism), 2) சங்கச் செவ்வியல் (சங்க - கிரேக்க இலக்கிய ஒப்பீடு), 3) அடிக்கருத்தியல் (Thematology), 4) அடிக்கருத்தியல் கொள்கைகளும், திறனாய்வு அணுகுமுறைகளும், 5) இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் (Literature and Psychoanalysis) என்ற ஐந்து நூல்கள் வெளிவந்துள்ளன.

தற்பொழுது, இலக்கியக் கனவுகளை ஃபிராய்டியக் கனவுக் கொள்கையுடன் ஒப்பிட்டு, டி.லிட்(D.Litt) ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்.

இந்திரா காந்தி தேசியத் திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில், தமிழ்ப்பாடம் எழுதுபவருள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு (1986-இல்) தமிழ்ப்பாடங்களைப் புதியமுறையில் எழுதியளித்துள்ளார்.

இவரது மேற்பார்வையின்கீழ் இதுவரை 25க்கும் மேற்பட்ட மாணவர்கள் எம்.ஃபில் ஆய்வுசெய்து பட்டம் பெற்றுள்ளனர்.

முனைவர் பட்ட ஆய்வுக்காகப் பகுதிநேரத்திலும், நேரடியாகவும் ஆய்வு மாணவர்கள் அடிக்கருத்தியல் பெண்ணியம், உளப்பகுப்பாய்வு குறித்து ஆய்வு செய்து வருகின்றனர்.

# முன்னுரை

இன்றைய திறனாய்வுலகில் பரவலாகப் பேசப்படுவது பெண்ணியச் சிந்தனைகளாகும். பெண்மொழி பற்றியும் பெண் எழுத்து குறித்தும் பெண்ணியக் கருத்தரங்குகளில் விவாதங்கள் அலைமோதுகின்றன. பெண் படைப்புக்கள் அதிகம். பெண் படைப்பாளர்கள் புலப்படுத்தும் பெண் மொழி, பெண் உடல் அதில் வரும் வலி பற்றிப் பேசும்போது, அவ்வலி உண்மையானது;எனினும் பெண் மொழி வெளிப்பாடு எத்திசை நோக்கிச் செல்கிறது என்ற வினாவும் உடன் எழுகிறது. இந்நிலையில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், பெண் எழுத்துப் பற்றி எழுதப்பணித்தது. இத்தூண்டுதலும் இத்தலைப்பில் இன்னும் ஆழமாகச் சிந்திக்கப் பேரூக்கமாக இருந்தது. இத்தகு சிந்தனைகளின் விளைவுதான் இந்நூல்.

இந்நூலில் முதல் இயலில் பெண்ணியம் பற்றி ஏற்கெனவே வந்த விளக்கங்களைத் தொகுத்துச் சுருங்கச் சொல்லி இருக்கின்றேன். பெண்ணியத் திறனாய்வு என்பது, பெண்கள் படைப்புக்கள் மட்டுமா? அல்லது பெண்கள் மட்டும் செய்யும் திறனாய்வா? என்பன போன்ற வினாக்களின் விடைதான் பெண்ணியத் திறனாய்வு என்ற இயலாகும்.

பெண்ணிய உளப்பகுப்பாய்வும், பெண்மொழியும் என்பதில், மேலை நாட்டுச் சிந்தனையாளர்களை எடுத்துக்காட்டிப் "பெண்மொழிக்கு" ஒருவரையறை செய்ய முயன்றிருக்கின்றேன்.

பெண்கள் வித்தியாசமாக எழுதுகிறார்களா? என்ற நிலையில் பெண் எழுத்துப் பற்றிக் கருத்துக்களை மிகவும் சுருங்கச் சொல்லி விளக்கி இருக்கின்றேன். இந்நூலின் முற்பகுதி, பெண்ணிய உளப்பகுப்பாய்வாகவும், பெண்மொழி பற்றிய கோட்பாட்டு விளக்கங்களாகவும் அமைந்துள்ளது.

பிற்பகுதியில் சங்க இலக்கியப் பெண்மொழி வெளிப்பாட்டை ஔவையார் பாடல்களோடு ஒப்பிட்டுக் காட்டியிருக்கின்றேன். ஆண்மொழி, பெண்மொழி வேறுபாட்டை ஆண்டாள், திருமங்கையாழ்வார் பாடல்கள் வழி எடுத்துக்காட்ட முயன்றுள்ளேன்.

பெண்ணியக் கோட்பாடுகளில் ஒரு நிறுவனமாகப் பேசப்படும் தாய்மைத்துவக் கோட்பாடும் தனித்து விளக்கப்பட்டுள்ளது. இறுதியாகப் பெண்ணிய உளப்பகுப்பாய்வு நோக்கில் இக்கால இலக்கியங்களில் பெண்மொழியும், பெண் எழுத்தும் வெளிப்படுத்தும் நிலைகள் முறையே வாஸந்தி மற்றும் இக்காலப் பெண் எழுத்தாளர்களின் நாவல்கள், சிறுகதைகளின் வழி விவாதிக்கப்பட்டுள்ளன.

**'பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்'** என்ற இந்நூல் எழுத வாய்ப்பளித்து, ஊக்கமும் அளித்து நல்லமுறையில் வெளிவரப் பெரிதும் துணைநின்ற நிறுவன இயக்குநர் முனைவர் சா. கிருட்டினமூர்த்தி அவர்களுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் மு. வளர்மதி அவர்களுக்கும், பெரியார் நாகம்மை அறக்கட்டளை நிறுவிய நல்ல உள்ளங்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரியது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பெண்ணியம் | 1 |
| 2. | பெண்ணிய இலக்கியத் திறனாய்வு | 7 |
| 3. | பெண் எழுத்து | 15 |
| 4. | பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் மொழியும் | 19 |
| 5. | ஔவையார் பாடல்களில் மனமும் மொழியும் | 37 |
| 6. | ஆண்டாள் ஆழ்வார் பாடல்களில் பெண்ணிய உளப்பகுப்பு - பெண்மொழி ஒப்பிடு | 55 |
| 7. | தாய்மைத்துவம் - பெண்ணியத் திறனாய்வு நோக்கு | 65 |
| 8. | பெண் எழுத்தும் - பெண்ணிய உளப்பகுப்பாய்வும் | 82 |
| 9. | பெண்மொழி நோக்கில் பெண் எழுத்துக்கள் | 100 |

# 1. பெண்ணியம்

இறைவன் படைப்பில் ஆணும் பெண்ணும் இரு சமமான உயிரிகளாகும். இரண்டு உயிரிகளும் மானுடச் சமுதாயத்தை உருவாக்குகின்றன. மானுடத்தின் உயர்ந்த பண்பு மனிதனை மனிதனாக மதிக்கும் மனிதப் பண்பாகும். ஆனால் பெண்ணை உலகம் சக உயிரியாகக் கூட மதிப்பதில்லை.

பொதுவாகச் சமூகவியல் கோட்பாட்டின்படி ஒத்த தகுதியுடைய இரு கூறுகளிடையே எப்பொழுதும் முரண்பாடுகள் தோன்றிக் கொண்டே இருக்கும். இதனால்தான் ஆண், பெண் என்ற இரண்டு உயிரிகளுக்கிடையே அவை தோன்றிய காலம் முதல் போராட்டம் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. பெண்கள் சந்தித்த வாழ்வியல் போராட்டங்களும் சமூகப் பிரச்சினைகளும் சமூக மறுப்புகளும் பெண்ணியச் சிந்தனைகள் தோன்றக் காரணமாயின. அச்சிந்தனைப் போக்குகள் இயக்கமாக உருவெடுத்தன.

பெண்ணிய இயக்கம் மேலை நாடுகளில் தோன்றியது என்றாலும், பெண்ணியச் சிந்தனையின் தடம் இன்று நேற்று தோன்றியது அன்று. புராணங்களிலேயே அதன் வித்து உள்ளது. இதற்குச் சான்றாக, சிவன் பார்வதிக்குத் தன் உடம்பில் பாதியைக் கொடுத்த நிலையைச் சுட்டலாம். அர்த்தநாரீஸ்வரர் உருவம் ஒரு பாதி பெண்ணாகவும் ஒரு பாதி ஆணாகவும் இருக்கும் உருவமாகும். இத்தன்மை ஆணும் பெண்ணும் சமம்; ஆண் பெண்ணுக்குச் சமஉரிமையைக் கொடுக்க வேண்டும் என்பதைக் குறிக்கும் குறியீட்டுப் பொருண்மையாகும் என்று தத்துவவாதிகள் சுட்டுவர். ஆணுக்குச் சமுதாயம் நல்கும் அனைத்து உரிமைகளும் பெண்களுக்கும் கிடைக்கவேண்டும்; சமூக நோக்கில் சமத்துவம் நிறைந்த சமுதாய அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கின் அடிப்படையில்தான் 'பெண்ணியம்' என்ற இயக்கம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந் நோக்கில் பெண்ணியம் என்பது ஓர் இயக்கமாக உலகின் பல இடங்களிலும் தோன்றி வளர்ச்சி பெற்று வருகிறது.

பெண்ணியம் ஒரு சமுதாய இயக்கமாக, பகுத்தறிவு இயக்கமாக மேலை நாடுகளில் தோன்றியது. பெண்ணுக்குரிய சமூக உரிமைகள் மறுக்கப்பட்டன. அச்சமூக உரிமைகளைப் பெறவும், தனது இருப்பின் தன்மைகளைச் சமூகத்திற்கு உணர்த்தவும், தனது இருப்பை நிலைநாட்டிக் கொள்ளவும் ஒரு பேரியக்கமாகப் பெண்ணிய இயக்கம் உலகெங்கும் உருவானது. இந்த இயக்க அலைகள் படைப்புகளிலும் தம் ஆரவாரத்தை ஏற்படுத்தின. அவற்றின் உந்து சக்தியாக இலக்கிய உலகிலும் தம் தடத்தைப் பதித்து, பெண்ணிய இயக்கம் ஓர் இலக்கிய இயக்கமாகவும் உருவெடுத்தது; பரந்துபட்ட ஆய்வுக்களமாகவும் வளர்ச்சியடைந்து வருகிறது. பலநோக்குடைய பெண்ணிய இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைகளை, கோட்பாடுகளைப் பெண்ணிய இலக்கிய இயக்கம் உருவாக்கிக் கொடுத்துள்ளது; அதன் அணுகுமுறைகள் விரிவடைந்து உள்ளன; அத்திறனாய்வு நெறிமுறைகளுள் இன்னும் இலக்கிய ஆய்வுலகில் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று தன் ஆர்வ நோக்கினைப் புலப்படுத்திக்கொண்டு 'பெண்ணிய இலக்கியத் திறனாய்வு' வளர் நிலையில் இருக்கின்றது.

## பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

'உமனிசம்' என்ற சொல்தான் 1889 வரை பெண்களின் உரிமைகளையும் பிரச்சினைகளையும் போராட்டங்களையும் உணர்த்தப் பயன்பட்டது. 1894இல் 'உமனிசம்' என்ற சொல்லின் இடத்தை, 'பெமினிசம்' (Feminism) என்ற சொல் பிடித்துக் கொண்டது.

'பெமினிசம்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'பெமினா' (Femina) என்ற இலத்தீன் சொல் மூலச் சொல்லாகும். 'பெமினிசம்' என்ற இச்சொல் சமூகவியல் நோக்கில் எடுத்தாளப்பட்ட சொல் என்பர். இதனையே கல்வியியலாளர்கள் 'பெண்ணியம்' என்ற சொல்லால் குறிக்கின்றனர். 'பெமினிசம்' என்ற சொல்லுக்கு நேரான தமிழ்ச் சொல்லாகப் பெண் விடுதலை இயக்கங்கள் 'பெண்நிலை வாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றன.

'பெமினிசம்' என்ற சொல் இலக்கிய உலகில் முதலில் பெண்ணின் பாலியல் பண்புகளைக் குறிக்கவும் பெண் உரிமைகளைப் பேசவும் பயன்படுத்தப்பட்டது. 'பெமினிசம்' என்ற சொல்லுக்கு 1) பெண்ணின் தன்மைகள் 2) சமூகத்திலும் அரசியலிலும் ஆண்களுக்கு நிகரான உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கான கோட்பாடு 3) பெண்களின் உரிமைக்காகவும் தேவைகளை நிறைவேற்றவும்

பெண்கள் சார்பாக வாதிடுவது என்று அகராதிகள் பல பொருள் விளக்கங்களைத் தருகின்றன.

மேலும் பெண்ணியம் என்பதற்கு 1) பாலியல் சமத்துவம் 2) பெண் சக உயிரி 3) ஆணுக்கு நிகரானவள் 4) எந்நிலையிலும் எக்காலத்திலும் அவள் அடக்கி வைக்கப்படக் கூடியவள் அல்ல 5) பெண்கள் குடும்பத்திலும் சரி; அலுவலகங்களிலும் சரி; சமூகப் பிரச்சினைகளிலும் சரி நசுக்கி, ஒடுக்கி வைக்கப்படுகிறாள்; அவ்வாறு ஒடுக்கப்படுவதையும், அதிலிருந்து மீள்வதையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துதல் 6) பெண்ணைத் தனிமைப்படுத்தி வைக்கக் கூடாது 7) சார்புநிலைப்படுத்தக் கூடாது 8) பெண்களை, அவர்களின் ஒட்டுமொத்த சமூகத்தை மீட்டெடுப்பது 9) பாலின அடிப்படையில், சமூகத்தில் வழக்கில் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளையும் ஆண் ஆதிக்கத்தையும் அறிந்து அவற்றை மாற்ற முயல்கின்ற தன்மைகளைக் கொண்டது போன்ற பல பொருள் விளக்கங்கள் அனைத்தும், பெண்ணியத் திறனாய்வாளர்கள் தரும் ஒட்டுமொத்தக் கருத்துக்களாகும்.

## பெண்ணியச் சிந்தனையின் தோற்றக் காரணிகள்

பெண்ணியச் சிந்தனைகள் உருவாவதற்குச் சமூக அமைப்பும் அடிப்படைக் காரணியாக அமைகிறது. ஆரியர்கள் வரவுக்கு முன்பே இந்தியச் சமூக அமைப்பில் தாய்வழிச் சமூக அமைப்பே இருந்தது என்பர்[1]. லண்டனில் நிகழ்த்திய ''தாய்வழிச் சமூகஆய்வு மற்றும் மீட்பு நிலை அமைப்பு'' ஒரு காலத்தில் தாய்வழிச் சமூக அமைப்பே இருந்தது என்பதை ஒத்துக்கொள்கிறது.[2] இச்சமூக அமைப்பில் ஆண்களை விடப் பெண்கள் உயர்நிலையில் இருந்தனர். பெண்கள் போற்றப்பட்டனர். அனைத்துத் தொழில்களிலும் பெண்கள் ஈடுபட்டிருந்தனர்.

தாய்வழிச் சமூக அமைப்பில் பெண்கள் குழந்தைப் பேற்றினை முக்கியமான ஒன்றாகக் கருதவில்லை. ஆனால் உடலமைப்பில் பெண் இயற்கையாகவே கட்டுப்படுத்தப் பட்டுள்ளாள். ஏனெனில் தாய்மை அடைந்து அவள் மட்டும் குழந்தைப் பேற்றின் இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலையிலுள்ளாள். எனவே தாய்மைப் பேற்றின் சுமைகளில் தொடர்ந்து ஆணையே சார்ந்து நிற்க வேண்டிய சார்பு நிலை ஏற்பட்டது. நாளடைவில் குழந்தைப் பேற்றில் தனக்குள்ள உரிமையை ஆண்கள் அறியத் தொடங்கினர். இதனால் ஆண்கள் பார்வையில் வாரிசுரிமை, சொத்துரிமை போன்ற உரிமைகள் வளம் பெறத் தொடங்கின.

தாய்வழிச் சமூக அமைப்பில் ஒரு பெண்ணை மணக்க, அப்பெண்ணுக்கு ஆண்மகன் அதிகப் பொருட்கள் கொடுக்க வேண்டி இருந்தது. அதனால் அதிகமாகப் பொருள் கொடுத்துப் பெற்ற மனைவி நிறைய உழைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஆண்மக்களிடம் தோன்றியது. இத்தகைய நிலைகள் தந்தைவழிச் சமூக ஆதிக்கத்திற்குத் தூண்டுகோல்களாக இருந்தன.

தாய்வழிச் சமூக அமைப்பில் பெண்கள் திருமணமான பின்னும் தாய்வீட்டிலேயே இருந்தனர். பெண் பிறந்த வீட்டிற்குரியவள் இல்லை. அவள் தன் கணவன் வீட்டிற்குச் செல்ல வேண்டியவள் என்ற மாற்றம் வேத காலத்தில் துவங்கியது என்பர்.[3] எனவே தந்தைவழிச் சமுதாய அமைப்பில், பெண்கள் திருமணமான பின் கணவன் வீட்டிற்குச் செல்லும் கட்டாய நிலை ஏற்பட்டது. இதனால் பெண்கள், பல நிலைகளில், பல வழிகளில் ஆண்களால் கட்டுப்படுத்தப்பட்டனர். ஆண்களுடைய கட்டுப்பாடுகளினால் பெண்களின் முழு உரிமை மறுக்கப்பட்டது. இதனால் சமுதாயத்தில் பெண்களை ஆணுக்கு இணையாகப் பார்க்கும் சமரச மனப்பான்மை மாறியது.

தாய்வழிச் சமூக அமைப்பில், பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தது. மேலும் மரபு வாரிசுரிமை காணப்பட்டதால், ஆண்கள் தங்கள் சகோதரிகளின் புதல்வர்களையே வாரிசுகளாகக் கொண்டனர். குழுமணமுறை மாறிச் சரியான குடும்ப அமைப்பு தோன்றிய பின் இந்நிலையும் மாறியது. சகோதரிகளின் குழந்தைகளை வாரிசுகளாகக் கொள்ளும் நிலை மாறித் தங்களுடைய வாரிசுகளுக்குச் சொத்துரிமை சென்றது. சொத்துரிமை ஆண்களுக்குச் சென்றதால் பெண்களின் பொருளாதாரச் சுதந்திரம் பறிக்கப்பட்டது. பெண்கள் எல்லாவற்றிற்கும் ஆண்களையே சார்ந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.

1) வாரிசுரிமை

2) அதன் வழி எழுந்த சொத்துரிமை

3) குழந்தைப் பேற்றிற்குப் பின்பு ஆண்களுக்கிணையாக வேலை செய்ய இயலாத நிலை

4) வீட்டின் அருகிலேயே வேலை செய்தல்

5) வீட்டிலேயே முடக்கப்பட்ட நிலை

6) பெண்கள் கணவன் வீட்டிற்குச் செல்லல்

7) ஆண்கள்தான், பிறந்த வீட்டிற்குரியவர்; பெண்கள் அவ்வுரிமையை இழந்த நிலை

8) பொருளாதாரச் சுதந்திரமில்லாத தன்மை

போன்ற காரணிகள் தந்தைவழிச் சமுதாய அமைப்பிற்கு வித்திட்டன. அத்துடன் தந்தைவழிச் சமுதாய மரபில் 1) ஆண்கள் பெற்ற தலைமைத்துவமும் 2) அதிகாரமுறையும் 3) பெண்களை அடக்கி ஆளும் திறனும் பெண்களைப் பல கட்டுப்பாட்டிற்குள் கொணர்ந்தன. இத்தகைய காரணங்களின் பின்னணியில், ஆண்களின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்ற எண்ணம் பெண்ணியச் சிந்தனையின் தோற்றமாக அமைந்தது.

## பெண்ணிய இயக்கத்தின் நோக்கம்

பெண்ணியத் தோற்றச் சிந்தனைகளின் அடிப்படையில் கூறினால், பெண்ணியம் என்பது ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கம்; பகுத்தறிவு இயக்கம்; இவற்றை எல்லாம் உள்ளடக்கிய இலக்கிய இயக்கம் எனலாம்.

ஆணுக்கு நிகராகப் பெண்ணைக் கருதாத சமச்சீரின்மை, பெண்களுக்கே உரிய சமூக ஒடுக்கல், பொருளாதார ஏற்றத் தாழ்வு ஆகிய சமூகப் பிரச்சினைகளை எதிர்த்து நிற்கும் இயக்கம் பெண்ணிய இயக்கமாகும். ''பெண்கள் பாலினப் பாகுபாட்டால் அனுபவிக்கும் பொருளாதாரத் துன்பங்களை எதிர்த்து மேற்கொள்ளும் இயக்கம் பெண்ணிய இயக்கம்''[4] என்றும் குறிப்பிடுவர்.

ஆண் உயர்ந்தவன்; பெண் தாழ்ந்தவள் என்ற ஏற்றத் தாழ்வுகளை நீக்கி ஆணுக்குச் சமமான பொருளாதார அமைப்பை, சமத்துவச் சமுதாயத்தை உருவாக்குவதை இவ் இயக்கம் நோக்கமாகக் கொண்டது.

பெண்கள் அனுபவிக்கும் அனைத்து அடக்குமுறைகளையும் எதிர்ப்பதுடன் நில்லாது, பெண்கள் முன்னேற்றத்துக்குரிய வழி முறைகளை வகுத்துக் கொடுப்பதையும் தனது நோக்கமாகக் கொண்டு விளங்குகிறது.

பெண்ணியம் ஆணுக்கு மறுதலையானது அன்று; தனிப்பட்ட ஓர் ஆணை அல்லது ஆண் சமூகத்தை எதிர்ப்பதோ, வெறுப்புணர்வு கொள்வதோ, கசப்புணர்வை உமிழ்வதோ பெண்ணியத்தின் நோக்கமல்ல.

சமூகக் கட்டமைப்பில் அனைத்துத் தளங்களிலும் ஆண்தான் முதன்மைப்படுத்தப்படுகிறான். சமூகத்தில் மட்டுமல்ல; நம் பண்பாட்டில் மட்டுமல்ல; இலக்கியங்களிலும் ஆண்தான், ஆணின் அதிகார மனப்பான்மை தான் மையப் படுத்தப்பட்டுள்ளது. சமூகத்தில் பெண் பின் தள்ளப்பட்டிருக்கிறாள் என்ற நிலைகளை எடுத்துக் காட்டுவது; அத்துடன் ஆணின் அதிகாரத் தன்மைகளை வரலாற்றியல் வழி வெளிக் கொணர்வது; அவ்வதிகாரத்தின் விளைவாகப் பெண்கள் மீது அடக்குமுறைகளும் ஒடுக்கு முறைகளும் தொடர்வதை ஆராய்வதும் பெண்ணியத்தின் நோக்கங்கள் ஆகும்.

பெண்ணுக்குரிய சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் சமத்துவ மின்மையைச் சுட்டிக் காட்டுவதுடன், அவை பற்றிய விழிப்புணர்வைப் பெண்களுக்கு உணர்த்துவதும், பெண்கள் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டிய அவசியத்தை உணரச் செய்வதும் பெண்ணியத்தின் நோக்கங்களாகக் கொள்ளலாம். ஆண்களும் பெண்களின் நிலைப்பாடுகளைப் புரிந்துகொண்டு செயல்படும்போது தான், பெண்ணியம் என்பது தம் முழுமை நோக்கங்களைப் பெற முடியும் என்று கருத இடமுண்டு.

## குறிப்புகள்

1. பி. எங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், ப.48
2. சு. சண்முகசுந்தரம், பெண்ணியம் (ஆய்வுக் கட்டுரைகள், ப.181)
3. முத்து சிதம்பரம், பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப.29

# 2. பெண்ணிய இலக்கியத் திறனாய்வு

பெண்ணியத் திறனாய்வு, பெண்ணிய இலக்கியத் திறனாய்வு, பெண் நிலை நோக்கு அல்லது பெண் மையத் திறனாய்வு, பெண் நிலைவாதத் திறனாய்வு போன்ற பெண்ணியத் திறனாய்வு குறித்த தொடர்கள் சிந்திக்கத்தக்கன.

முதலில் மேற்குறிப்பிட்ட அனைத்துத் திறனாய்வுகளும், பெண்களின் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. பெண்ணிய இலக்கியத் திறனாய்வு என்பதில் பெண்களின் எழுத்துக்கள் மட்டும்தான் இடம் பெறுமா? பெண்கள் மட்டும்தான் திறனாய்வாளர்களாக அமைவார்களா? என்ற வினாக்கள் இன்று பெண்ணியத் திறனாய்வில் முன் வைக்கப்படுகின்றன. இங்கு ஒன்றை மட்டும் கவனத்தில் நிறுத்த வேண்டும்.

'பெண்ணிய இலக்கியம்' (Feminist literature) என்பது பெண்களின் படைப்புக்களை மட்டும் சுட்டும். ஆனால் பெண்ணியத் திறனாய்வில்,இருபாலாரின் படைப்புக்களும் அடங்கும். பெண்களின் பிரச்சினைகளை ஆண் எழுத்தாளர், பெண் எழுத்தாளர் ஆகிய இருவரின் படைப்புக்களும் சித்திரிக்கின்றன. ஆனால் அவற்றைப் படைத்திருக்கும் நிலையிலுள்ள நுண்மையான வேறுபாடுகளைப் பெண்கள் குறித்த ஆணாதிக்க அரசியலை வெளிக் கொணர்வது பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முக்கிய நோக்கமாக அமையும்.

'சீதையின் சபதம்' என்ற நூல் ஓர் ஆண் படைத்தது. (கருவூர் கன்னல், சீதையின் சபதம்) இது பெண்ணுரிமைப் பாவியம் என்ற வகையிலடங்கும். இதுபோன்று பெண்ணிய நோக்கிலுள்ள ஆண் எழுத்தாளர்களின் அனைவரின் படைப்புக்களும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வில் இடம்பெறும். பெண், ஆண் இருவரும் பெண்ணியத் திறனாய்வுப் பின்புலத்தில் இருபாலாரின் படைப்புக்களையும் திறனாய்வு செய்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தேவதத்தா, முத்து சிதம்பரம், இரா. பிரேமா, சிவகாமி, மீனாட்சி முருகரத்தினம், நிர்மலா ராணி, அரங்கமல்லிகா,

செல்வி திருநிறைச்சந்திரன், எழுத்தாளர் இராஜம் கிருஷ்ணன் போன்றவர்கள் ஆவர். இதுபோன்று பெண்ணிய நோக்கில் ஆண்,பெண் இருவரின் படைப்புகளையும் திறனாய்வு செய்த ஆண் படைப்பாளர்களுள் க. பஞ்சாங்கம், எதிர்வு சிவக்குமார், இரா. சம்பத், பக்தவச்சலம், சண்முகசுந்தரம், சு.வே. போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இருபாலாரின் படைப்புகளிலுள்ள பெண் பற்றிய கருத்தாக்கங்களையும், சொல்லாடல்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலையும் இன்று பெண்ணியத் திறனாய்வில் உருவாகி உள்ளது. எனவே இந்நூலில் மேற்குறிப்பிட்ட அனைத்துக் கருத்துக்களையும் உள்ளடக்கிய வகையில் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு (Feminist Literary Criticism) என்ற தொடரே எடுத்தாளப் படுகிறது.

## பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் நோக்கும் போக்கும்

'பெண்ணைப் பெண்ணாகப் படித்தறிதல்' பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் அடிப்படைச் சிந்தனையாகும். இலக்கியப் படைப்பாளியாகவும் பெண்ணை அணுகிச் செய்கிற ஆய்வு; பெண் படைப்பாளர்களின் நோக்கினையும் போக்கினையும் ஆய்வு செய்வது பெண்ணிய இலக்கியத் திறனாய்வாகும். அவ்வாறு ஆய்வு செய்யும் பொழுது பெண் எழுத்து எப்படி உள்ளது; எவ்வாறு பெண்கள் எழுதுகிறார்கள்; எவ்வாறு எழுத வேண்டும்; அவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் யாவை; பெண் மன அனுபவங்கள் எங்ஙனம் வெளிப்படுத்தப்படுகின்றன என்ற பல கோணங்களில் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு கவனம் செலுத்துகிறது.

பெண்ணிய இலக்கியத் திறனாய்வு, பெண் விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. 1960களில் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு அமெரிக்கா, பிரான்சு, இங்கிலாந்து நாடுகளில் தோற்றம் பெற்றது.

இலக்கியங்கள் விரித்துரைக்கும் பெண்களின் சமூகப் பிரச்சினைகள், குடும்பம் சார்ந்த பிரச்சினைகள், பெண்களுக்கு உரிய தனிப்பட்ட பிரச்சினைகள் என்று பெண்ணியப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டது பெண்ணிய இலக்கியத் திறனாய்வாகும். பெண்ணியச் சிந்தனைகளை, பெண்கள் பற்றிய கருத்தாக்கங்களை முன்னிலைப்படுத்துவதும் பெண் இலக்கியத் திறனாய்வின் பாற்படும்.

பெண் படைப்புக்களிலுள்ள பெண் பற்றிய சொல்லாடல்கள், கருத்தாக்கங்கள் பெண்களின் எழுத்து வடிவம், நடையமைதி, கருத்து வெளிப்படும் திறன் போன்றவற்றையும் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு ஆராயும் போக்கினைக் கொண்டுள்ளது. ''இலக்கியத்தில் பெண்களை மையப் பொருளாக வைத்துத் தொலைநோக்கு செய்வது. பெண்ணிய இலக்கியத் திறனாய்வுப் போக்காகும் என்று மேக்கியும் எடுத்துக்காட்டுகின்றார். பெண் படைப்பாளர்களின் இலக்கிய மரபினை ஆராய்வதும், பெண்ணிய எழுத்துக்களின் போக்கினை ஆராய்வதும்'' பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முதன்மைப் போக்காகும்[1] என்பர்.

பெண்ணிய இலக்கியத் திறனாய்வு,தந்தை வழிச் சமூகத்தின் பாரம்பரியக் கூறுகளை, ஆணாதிக்கக் குரலை விரித்துரைக்கிறது. அச்சமூகத்தில் அவர்களின் ஆதிக்க உணர்விற்குப் பெண்கள் ஆளாக்கப்பட்டிருக்கும் நிலையை, ஒடுக்கப்பட்டிருக்கும் தன்மைகளை எடுத்துக்காட்டுகிறது. பாலியல் சார்ந்த பிரச்சினைகளில் பெண்களின் பாலியல் பலாத்காரம் பற்றிய சித்திரவதைகளை முன் வைப்பதில் மிகுந்த கவனம் செலுத்துகிறது. இத்துடன் பாலியல் கொள்கை பெண்களின் மீது திணிக்கப்பட்டிருக்கும் நிலையினை எடுத்துக்காட்டுகிறது. அரசியலிலும் பெண்கள் நசுக்கப்பட்டிருப்பதையும் வெளிப்படுத்திக் காட்டுவது போன்ற பல்வேறு நோக்கங்களைக் கொண்டது பெண்ணிய இலக்கியத் திறனாய்வாகும்.

மரபு வழியைப் பின்பற்றி, காலம் காலமாக இலக்கியங்கள் எடுத்துக்காட்டும் பெண் பற்றிய அடக்கு முறையை வெளிப்படுத்துதல்; பல காலமாக ஒடுக்கப்பட்டு வந்த பெண்களுக்குப் புதிய வரலாற்றில் இடம்; ஒரே மாதிரியாகப் படைக்கப்பட்டிருக்கும் ஆணாதிக்க அரசியல் தனத்தை வெளிக் கொணர்தல்; ஆண் படைத்த இலக்கியக் கொள்கைகள், இலக்கிய மரபுகள், மொழிகள், கருத்தாக்கங்கள் ஆகியவற்றிலுள்ள ஆண்களின் சொல்லாடலை (Discourse) மறுபார்வைக்குட் படுத்துதல், பழைய இலக்கியப் படைப்புக்களை மறுபார்வைக்குட் படுத்துதல், பழைய இலக்கியப் படைப்புகளைப் பெண்நிலைத் திறனாய்வு நோக்கில் ஒப்பிட்டு அணுகுதல் போன்றவை பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் இன்றியமையாத தன்மைகளாகும். இத்தகைய பெண்ணிய இலக்கியத் திறனாய்வு, வாசகரை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது. ஆதலால் பெண்ணிய

இலக்கியத் திறனாய்வு ஆண்,பெண் வேறுபாடின்றி, இருபாலரும் இருவரின் படைப்புக்களிலும் நிகழ்த்துவதற்குரிய ஆய்வாகும். பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் இன்றியமையாப்போக்கு இலக்கியங்களின் வடிவமைதியை விட, இலக்கியப் பொருளமைதியில் கவனம் செலுத்தும் தன்மையாகும். பெண்ணிய இலக்கியத் திறனாய்வு மானுடவியல், தத்துவம், உளப்பகுப்பாய்வு, வரலாற்றியல், சமூகவியல், மருத்துவஇயல், வகைமையியல், கலையியல் என்று பரந்துபட்ட பல களங்களைத் தன்னகத்தே கொண்டதாகும். சுருங்கக் கூறின்,பெண்ணிய இலக்கியத் திறனாய்வு

1. தனக்கென்று ஒரு தனித்துவத்தை நிறுவ முனைகிறது.

2. ஆண் படைப்புகளிலிருந்து பெண் படைப்புக்களை வேறுபடுத்திக் காட்ட் முயலுகிறது.

3. முதலில் ஆணாதிக்க இலக்கிய மரபு எனும் பிடியிலிருந்து விடுபட விரும்புகிறது.

4. அவ்வாறு எழுதும்போது, அங்கு எழும் திறனாய்வு மதிப்பீடுகளை,திறனாய்வின் ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படை யாகக் காட்ட முயலுகிறது.

5. ஆணாதிக்க நிலைவாதத்திற்கு எதிரான ஒரு மாற்றுப் பனுவலைக் கொணர இது செயல்படுகிறது.

6. அந்த மாற்றுப்பிரதியாக இலக்கிய மாதிரிகளை உருவாக்க முனைகிறது.

7. இதுவரை எழுத்துலகம் அறியாது, மறைந்த பெண் படைப்புக்கான, பெண்எழுத்தாளர்களை வெளிக்கொணரும் ஆர்வத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

8. அவ்வாறு வெளிக்கொணர்வதுடன், அவற்றைப் பதிப்பித்து வெளியிடும் பதிப்புத்துறையிலும் கவனம் செலுத்துகிறது.

9. இலக்கிய வரலாறும், தந்தைவழிச் சமுதாயத்தின் அடிச்சுவட்டில் அமைந்துள்ளது. என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே இத்தன்மைகளை எல்லாம் வெளிப்படுத்தும் நிலையிலும்,பெண்ணிய நோக்கிலும் ஒரு புதிய இலக்கிய வரலாறு எழுதப்பட வேண்டும் என்பது பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும்.

10. அத்துடன் நில்லாது பெண் எழுத்தாளர்கள் தம் படைப்புக்களை உருவாக்கத் தூண்டியதற்கான பின்புலங்கள், அனுபவ உண்மைகள், காரணங்கள் முதலியவற்றை வெளிப்படுத்துதல் வேண்டும்.

11. அவ்வாறு செய்தால் தான் பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களில் படிந்திருக்கும் பெண்ணியப் படைப்புக்களின் தோற்றத்தின் உண்மைத் தன்மையை இன்னும் அணுகி ஆராய வழிவகை கிடைக்கும்.

1975 க்கு மேல் மேலை நாடுகளில் பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடு பல்வேறு கோணங்களில் வளர்ச்சி பெற்றது. அவற்றுள் குறிப்பிடத்தக்க புதிய போக்குகளாகப் பெண் மையத் திறனாய்வையும், பெண்ணிய உளப்பகுப்புத் திறனாய்வையும் சுட்டலாம்.

இக்காலக் கட்டங்களில் புதிய போக்கு பெண்களுடைய இலக்கியப் படைப்புக்களை ஆராய்வது ஆகும்.இதன் நோக்கங்கள் பெண் படைப்புக்களிலுள்ள பெண்களின் இலக்கிய மரபினை எடுத்துக் காட்டுவதும் ஆகும். இவ் ஆய்வின் தொடர்ச்சியாகப் பெண் எழுத்துக்களின் மீதும் இத்திறனாய்வு கவனம் செலுத்தியது. இதனைத் தொடர்ந்து பெண்ணிய உளப்பகுப்புக் கோட்பாடும் பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வாளர்களிடை வளர்ச்சி பெற்றது.

## பெண் மையத்திறனாய்வு: (Gyno Criticism)

பெண்களுக்கே உரிய மாதவிடாய், மகப்பேறு போன்ற பிரச்சினைகளைப் பார்ப்பதற்குரிய மருத்துவர் 'மகப்பேறு மருத்துவர்' என்பதுபோல, பெண்களின் படைப்புக்களை பெண்ணியத் திறனாய்வு நோக்கில் பெண்களே திறனாய்வு செய்வது பெண் மையத் திறனாய்வாகும்.

'கைனோ கிரிட்டிசிசம் என்பதற்குப் பெண் மையத் திறனாய்வு, பெண்நிலை வாதத் திறனாய்வு, பெண்நிலை நோக்குத் திறனாய்வு என்ற பல மொழி பெயர்ப்புகள் ஒரே பொருளில் திறனாய்வாளர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றுள் பெண் மையத் திறனாய்வு என்ற சொல்லாட்சியே இங்கு எடுத்தாளப்படுகிறது.

'பெண் மையத்' திறனாய்வில், பெண்களின் படைப்புக்கள் மட்டுமே அடங்கும். பெண்களே திறனாய்வாளர்களாக அமைவர்.

இத்திறனாய்வில் பெண்களின் எழுத்துக்கள் பெண்ணிய நோக்கில் ஆராயப்படுகின்றன. அதிலும் பெண்களின் மன அனுபவங்களை, எழுத்துக்களை, வெளிப்படுத்தும் பெண் பற்றிய சொல்லாடல்களின் ஆழத்தைப் பெண்கள் திறனாய்வு செய்கிறபொழுது அத்திறனாய்வுப் போக்கு, அனுபவ உண்மையின் வெளிப்பாடாகவும், நம்பகத் தன்மையுடையதாகவும் இருக்கும் என்று பெண் மையத் திறனாய்வு கருதுகிறது.

பெண் மையத் திறனாய்வில் குறிப்பிடத்தக்கவர் அமெரிக்கப் பெண் திறனாய்வாளரான எலைன் ஷோவால்டர் (Elaine Showalter) ஆவார். இவர் எழுதிய 'பெண்ணியக் கவிதையியல் நோக்கு' (Towards Feminist Poetics) என்ற கட்டுரை பெண் மையத் திறனாய்வின் நோக்கினைச் சுட்டுகிறது.[2] இக்கட்டுரையில் இவர் பெண் எழுதிய எழுத்துக்களையும் பெண் பற்றிய எழுத்துக்களையும் (women writing and writing about women) பற்றி மதிப்பீடு செய்கிறார். பெண்ணிய விமர்சனமாக முதல்பகுதி அமைகிறது. இரண்டாம் பகுதி பெண் மையத் திறனாய்வாளர்களும் பெண்களின் பண்பாடும் (Gynocritics and Female Culture) என்ற தலைப்பில் அமைகிறது. இதில்தான் ஷோவால்டர் 'கைனோ கிரிட்டிக்ஸ்' என்ற தொடரை நேரடியாகப் பயன்படுத்துகின்றார்.

பெண் எழுத்தாளர்களை இங்கு மையப்படுத்திப் பேசுகிறார். பெண்களின் இலக்கியங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு முதலில் ஒரு பெண்ணியப் பொது மாதிரிகளை (Secular Framework) உருவாக்குதல்.

பெண்ணிய நோக்கில் திறனாய்வு செய்ய ஒரு திட்டத்தை (Programme) அமைத்தல்.

முன்புள்ள பழைய இலக்கியக் கொள்கைகளையும் ஆண்களின் பெண் விமரிசனம் குறித்த பெண் மாதிரிகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடாது; பெண்களின் அனுபவங்களைக் கற்று அறிந்து ஆய்வு செய்யப் புதிய பெண் மாதிரிகளை உருவாக்குதல் போன்றவற்றை பெண் மையத் திறனாய்வின் அடிப்படைச் சிந்தனைகளாகக் குறிப்பிடுகின்றார்.

இதுவரை ஆண்கள் படைத்து வந்த ஆண் இலக்கிய வரலாற்றின் விளிம்பு நிலையிலிருந்து விடுபட வேண்டும். இந்த சிந்தனைத் தடத்தில் தான் 'பெண் மையநோக்கு' என்பதே தொடங்குகிறது என்கிறார்.

ஆண்களின் இலக்கிய மரபில் தன்னையறியாது தன்னகப் படுத்திக் கொள்ளும் முயற்சியைப் பெண் எழுத்துக்கள் நிறுத்த வேண்டும். ஆண்களின் இலக்கிய மரபில் ஈடுபடுவதற்குப் பதிலாக, பெண்களின் பண்பாட்டமைப்பில், புதிய கோணங்களை, புதிய பார்வைகளை உருவாக்க வேண்டும்.

மேலும் இப்பெண்நிலை மையத்திறனாய்வு, சமூகவியல், உளவியல், மானுடவியல், வரலாற்றியல் போன்ற துறைகளுடன் பெண்ணிய ஆராய்ச்சியும் தொடர்புடையது என்கிறார்.

பெண் எழுத்தாளர்களை மட்டும் கவனத்தில் கொள்வதுடன், வரலாறு, அடிக்கருத்துக்கள், வகைமைகள், அமைப்புக்கள் முதலானவை பெண்களின் எழுத்துக்களில் எப்படி உள்ளன என ஆய்தலும் பெண் படைப்பாக்கத்தில் உள இயங்கியல் பற்றிப் பேசுதலும் பெண் மையத் திறனாய்வின் முக்கிய அணுகுமுறை களாக உள்ளன.

''பெண் மையத் திறனாய்வு இலக்கியங்களைப் பகுத்தாராய ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்குதல் புதிய மாதிரிகளை வடிவமைப்பது, பெண்களைப்பற்றிப் பெண்களே திறனாய்வு செய்தல், பெண் எழுத்துக்களைக் கண்டெடுத்து மீட்டெடுப்பதில் கவனம் செலுத்துதல், பெண் எழுத்துக்களில் வரலாறு, நடை, கரு, வகை, அமைப்பு, பெண்ணின் படைப்பு, உளவியல் ஆகியவற்றை உள்ளடக்கியது'' என்று விளக்குகிறார் பஞ்சாங்கம். மேலும் இவர் பெண்நிலை நோக்குத் திறனாய்வு ''ஒரு மொழியை வடிவமைப்பதில் குவிமையம் கொள்ளுகின்றன. ஆண்களின் மொழியோடு போட்டி போடுகிறது என்பது மட்டுமல்ல; இலக்கியம் மற்றும் திறனாய்வுத் தளங்களை நிலையாகவே மாற்றிப் போட முயலுகிறது''[3] எனவும் கருதப்படுகிறது என்று ஷோவால்டரின் பெண் மையத் திறனாய்வின் போக்கினையும் எடுத்துக் காட்டுகிறார்.

இங்கு ஷோவால்டரைத் தொடர்ந்து 'மீராஜெலன்' தமது,'ஆர்க்கிமிடிஸும் பெண்ணியத் திறனாய்வுப் புதிரும்' என்ற கட்டுரையில் எழுதிய மறுப்புக் கருத்துக்கள் குறிப்பிடத் தக்கன.

இவர் ஸ்பேக்ஸ்,மோயர்ஸ், ஷோவால்டர், கில்பர்ட், குபார் போன்ற சில எழுத்தாளர்களின் பெண் நோக்கு குறித்து கருத்துக்களை வைத்துக் கொண்டு, இலக்கியங்களை சுட்டும் பெண்களின் மரபினை எடுத்துக்காட்டுவது பெண்ணியத் திறனாய்வு ஆகாது; இத்தகைய

பார்வை ஆண்கள் மனத்தில் பெண் என்று தனித்து வேலி போட்டுவிடும்; ஆண், பெண் என்ற பால் வேறுபாடின்றி அனைத்திலக்கியங்களையும் பெண்ணியத் திறனாய்வுப்பார்வை கொண்டு ஆராய்வதே சிறந்த திறனாய்வுப் பார்வை என்று கருதப்படுகிறது.[4] இதற்கு மறுப்புரையாக ஷோவால்டர், பெண் எழுத்துக்களை மட்டும் பெண்நிலை நோக்கு கொண்டு ஆராய்வது பெண்ணைத் தனித்துவப்படுத்துவது ஆகாது; மாறாகப் பெண்ணின் மரபுநிலையை ஆராய்வது அரசியல் நிலையில் இன்றியமையாத தன்மை வாய்ந்தது; தந்தைவழிச் சமுதாயத்தில் பெண், தான் ஒரு பெண் என்பதற்காகவே அடிமைப்படுத்தப்பட்டுள்ளாள். பெண் மையத் திறனாய்வில் தான், பெண் மதிப்பிற்குள்ளாகும் நிலை வெளிப்படுத்தப் படுகிறது என்கிறார்.

இவ்வாறு பெண் மையத் திறனாய்வுப் போக்கு 1975/க்கு மேல் பெண்ணியத் திறனாய்வாளர்களிடையே முழு வளர்ச்சி பெற்றது; பெண்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் விதத்தில் பெண்கள் தனக்கென்று தனிவடிவங்களை இலக்கியப் பிரதிகளைக் கொண்டு வரவேண்டும் என்ற முயற்சி முன்னிறுத்தப்பட்டது. இம்முயற்சி பெண்களின் எழுத்துக்கும் மொழிக்கும் இட்டுச் சென்றது. பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் கையில் பெண் மொழியானது மொழியியல், உளப்பகுப்பாய்வு அடிப்படையில் கோட்பாடாக வளர்ச்சி பெற்றது. இந்நிலையில் பெண் எழுத்தாளர் குறித்த சிந்தனைகளும் பிரெஞ்சுப்பெண்ணியத் திறனாய்வாளர்களின் பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் மொழியும்' பற்றிய கருத்துக்களும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கன.

## குறிப்புகள்

1. இரா. பிரேமா, பெண்ணியம், ப.142
2. Mary Eagleton, Feminist Literary theory, A Reader, pp 88-91
3. சு.பஞ்சாங்கம், பெண், மொழி, புனைவு, பக் 76-77
4. இரா. பிரேமா, பெண்ணியம், ப. 143

# 3. பெண் எழுத்து

பெண்ணிய எழுத்துக்களைப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்யவேண்டும் என்ற சூழலின் எதிரொலிதான் பெண் எழுத்து பற்றிய எழுச்சியாகும். இதனால் பெண்ணியத் திறனாய்வு ஆணின் படைப்பு வெளிப்பாட்டிற்கு எதிராகச் செயல்பட ஆரம்பித்தது. எது பெண்ணிய எழுத்து என்ற கேள்வி எழுந்தது. பெண்ணின் எழுத்துக்களில் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு கவனம் செலுத்தியது.

மேலை நாட்டுப் பெண்ணியத் திறனாய்வில் பெண்ணிய எழுத்துக்களின் விளக்கம் (Towards Definition of Feminist writing) பெண்கள் வித்தியாசமாக எழுதுகிறார்களா? (Do women write Differently) என்ற இரண்டு முக்கிய நோக்குகளில் பெண் எழுத்துக்கள் ஆய்வு செய்யப்பட்டன.

இவற்றுள் மைக்கேல் பாரத்தின் (Feminism, Culture, and Politics), பெண்ணியமும் பண்பாட்டு அரசியலும், எலிசபெத் வில்சனின் கண்ணாடி எழுத்துக்களும் - சுயவிமரிசனமும் (Mirror writing An Autobiography), கோரா காப்லானின் பேச்சு, எழுத்து, பெண்ணியம் (Speaking/Writing/Feminism), டொரில் மாய் பெண்ணிய இலக்கியக் கொள்கைகள் (Sexual/Textual Politics; Feminist Literary theory) என்பவரின் பெண் பற்றிய சிந்தனை மேரி எல்மான் (Thinking about women) போன்ற கட்டுரைகள் பெண்ணிய எழுத்துக்கள் எவ்வாறு இருக்கின்றன, எவ்வாறு இருக்கவேண்டும் என்று விவாதிக்கின்றன.[1]

தமிழ்ப் பெண்ணியத் திறனாய்வாளர்களுள் க. பஞ்சாங்கமும், எதிர்வு சிவக்குமாரும் 1994 லும், இரா.பிரேமா 2000-த்திலும் மேலை நாட்டுப் பெண்ணிய எழுத்துக்களைப் பற்றித் தமது பெண்ணியத் திறனாய்வுக் கட்டுரைகளில் குறிப்பிடுகின்றனர். இக்கருத்துக்களையும் உள்வாங்கிக் கொண்டு பின்னணியில், பெண் எழுத்துக்கள் பற்றிய கருத்துக்கள் இவண் சுருங்கக் குறிப்பிடத்தக்கன.

தான் பெண் என்ற நனவிலி மன உணர்வுடன் பெண் அனுபவங்களை மறைக்காது, எழுதுவது; தன் தனித்தன்மைகளை நிலைநிறுத்தும் தன்மை கொண்டது பெண் எழுத்து ஆகும்.

முதலில் பெண், தான் எதிர்நோக்கும் துன்பங்களுக்கெல்லாம் காரணம் ஆண்கள் தான் என்ற கேள்வி பெண் எழுத்தில் ஒலிக்கக் கூடாது; பெண் என்றாலே, துன்பப்படுவதற்குப் பிறந்தவள்; சரிசமமாகச் சமூகத்தில் நடத்தப்படுவதில்லை என்ற உணர்வு அடிமன நிலையிலிருந்து விடுபட வேண்டும்.

அதேநேரம் துன்பங்களைத் துடைப்பவர்களும் துன்பங்களுக்கு வடிகாலாக அமைபவர்களும் ஆண்கள் தான் என்று கண்மூடித்தனமாக நம்பக்கூடாது. பெண்கள் படும் சமூக ஒடுக்கல்களுக்கெல்லாம் காரணம் தந்தை வழிச் சமுதாய அமைப்பாகும். ஆதலால் அச்சமூக அமைப்பு ஏற்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து, தெளிந்து, அவற்றிலுள்ள குறைகளைக் கண்டறிந்து, களையும் நோக்கினைக் கொண்டதாகப் பெண் எழுத்துக்கள் அமைய வேண்டும் என்று மேலை நாட்டுத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர்.

பெண்களின் பிரச்சினைகள் சரிபாதி மானிடத்தின் பிரச்சினை என்ற சமநிலையுடன் எழுத வேண்டும்.

மரபு சார்ந்த நிலையில் தங்களைப் பிணித்த தடைகள், ஒடுக்கல்கள், மனக்குமுறல்கள் முதலியவற்றிலிருந்து விடுபட்டு அவற்றிலிருந்து மீண்டுவரும் எழுச்சி காணும் நோக்கைத் தங்களுக்குத் தங்களே உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்ற போக்கினைப் பெண் எழுத்தாளர்கள் வலியுறுத்தவேண்டும்.

வழி வழி வந்திருக்கும் தந்தைவழிச் சமுதாய மரபு நிலையில் ஆணைஉயர்ந்த இடத்தில் வைத்து, பெண் அவனை வணங்கி வழிபடும் தன்மை கொண்ட இரண்டாந்தர நிலையைக் காட்டுவதைப் பின்பற்றக் கூடாது; அதில் கவனம் செலுத்துதலும் கூடாது. ஆணும் பெண்ணும் சரிசமம் என்பதை உணர்த்துவதாய்ப் பெண் எழுத்துக்கள் அமைய வேண்டும்.

பெண்ணை அடிமையாய்க் காணும் மனோபாவத்தை அகற்ற வேண்டும். அதே நேரம் பெண்களின்போக்குகளைத் தவறெனச்

சுட்டிக்காட்டும் தன்மையினையும் பெண் எழுத்துக்கள் பின்பற்ற வேண்டும். ஆணும் பெண்ணும் நட்புணர்வுடன் ஒருவரைஒருவர் புரிந்து கொள்ளும் தன்மையுடனும், நண்பர்கள் சகோதரன், சகோதரிகளாவதை இயல்பான முறையில் எடுத்துக் காட்டுதல் வேண்டும். அதாவது பெண்களின் மனத்தில் சகோதரித்துவத்தை (Sisterhood) வலுப்படுத்துவதாய் எழுத்துக்கள் எழுதப்படுதல் நன்று.

பெண்கள் அனைவரும் தாம் ஓரினம் என்ற ஒற்றுமை மனப்பான்மையை வலியுறுத்த வேண்டும். மேலும் பெண்களின் எழுத்துக்கள் தம் ஆளுமை வளர்ச்சி நிலையைப் புலப்படுத்துவதாய் அமைதல் வேண்டும். அத்துடன் பெண்கள் தந்தைவழிச் சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்ட வரலாற்றைக் கூறுவதுடன், அவற்றிலிருந்து விடுபடும் விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதாய் அமைதல் வேண்டும். பெண்களுக்குத் தன்னிறைவாக்கம் (Self Actualization) என்ற மனநிறைவைத் தூண்டுவதாய்ப் பெண் எழுத்துக்கள் அமைய வேண்டும்.[2]

பெண் எழுத்து, ஆண் எழுத்தின் மீது தேவையற்ற கண்டனக் கனைகளை ஏவுதல் கூடாது; பெண்ணியம் என்ற நோய் பிடித்த மாயப் போக்கிலிருந்து மீட்கும் எழுத்துக்களாகப் பெண் எழுத்து எழுதப்படல் சிறப்பு.

பெண் எழுத்து ஆணின் எழுத்து மரபு என்ற வட்டத்திற்குள் தானும் ஒடுங்கித் தன்னையறியாது எழுதும் பிடியிலிருந்து விடுபடவேண்டும். அவ்வாறு எழுதும்போதும், அப்பெண் வெளிப்படையாகத் தன் அனுபவங்களைக் காட்டவேண்டும்.

பெண் எழுச்சியும் விழிப்புணர்ச்சியும் எதிர்ப்புக் குரலும் தன்னம்பிக்கை கொண்ட பெண்எழுத்துக்களில் இலக்கிய உலகில் உண்டு. எனினும் இன்னும் பெண் சமுதாயத்திற்கு அனைத்து வகையிலும் தீவிரத் தன்மை கொண்ட எழுச்சி மிக்க பெண் எழுத்துக்கள் எழுதப்பட வேண்டும் என்ற சிந்தனைகள் மேலை நாட்டுப் பெண்ணியத் திறனாய்வாளர்களின் ஒட்டுமொத்தக் கருத்துக்களாகும். சுருங்கக் கூறின் பெண் எழுத்து தனக்கென ஒரு வடிவத்தைத் தேர்ந்தெடுக்க முயலுகிறது. அம்முயற்சியின் வழி ஆண்நிலை வாதத்திற்கு எதிரான ஒரு மாற்றுப் பிரதியைக் கொணரப் பெண் எழுத்துக்கள் முயலுகின்றன.

பன்முகவாசிப்பிற்கு இடமளிப்பதாய்ப் பெண் எழுத்துக்கள் அமைய வேண்டும்.

பெண்மையின் உண்மையை மறைக்காது எழுதவேண்டும்.

பெண்ணியம், முழுமைபெறாத ஆணே பெண் என்ற பரிணாமக் கருத்தை மறுக்கிறது. ஆண்குறிப் பொறாமை உடையவள் பெண் என்ற ஃப்ராய்டியக் கருத்துக்களை மறுக்கிறது. பெண்ணுக்கு மட்டும் பிள்ளை பெறும் தகுதி இருப்பது ஆணுக்கு இல்லாத ஒன்று - இதனால் ஆண் தான், தனக்கு அப்பேறு இல்லையே என்று பொறாமை கொள்ள வேண்டும். மாறாகப் பெண்ணல்ல என்று பெண்ணைக் குறைவுபடுத்தும் அறிஞர்கள் கருத்துக்களை மறுப்பதுடன் பெண்மையின் உண்மைத் தன்மையைச் சுட்டுவதாய்ப் பெண்படைப்புக்கள் அமைய வேண்டும் என்று பெண் எழுத்து வற்புறுத்துகிறது.

## குறிப்புக்கள்

1. Mary Eagleton (Edi) Feminist Literary theory: A Reader, pp. 149 - 194
2. American Feminist Literary criticism, A Bibliographical Introduction, pp.169-170

# 4. பெண்ணிய உளப்பகுப்பும் பெண்மொழியும்

## பெண்ணிய உளப்பகுப்பு

பெண்ணிய உளப்பகுப்பாய்வில் முதலில் நினைவில் நிறுத்தத் தக்கது ஃபிராய்டு சுட்டிய 'பிறப்புறுப்புப் பயச் சிக்கல்' ஆகும். இதைக் காயடிப்புச் சிக்கல் என்றும் கூறுவர். ஒரு பெண்குழந்தை வளர வளர ஆண் குழந்தையின் பிறப்புறுப்பைப் பார்த்து அது தனக்கு இல்லையே என்று ஆணுறுப்பின் மேல் பொறாமை கொள்கிறது. தனக்குத் தானே துன்பமுறுகிறது. அந்த ஆண் உறுப்பு இன்மையால் அது தன்னையே பெண் என்று அடையாளம் கண்டு கொள்கிறது. பொறாமைக் குணம் உலகப் பொதுவானது. எனினும் பெண்ணிடம் அமைந்த இப்பொறாமைக்குணம் பிறப்புறுப்பு இழப்புணர்வுச் சிக்கலுக்குக் காரணமாகிறது என்கிறார் ஃபிராய்டு. ஃபிராய்டின் இந்தப் பார்வையை முதன்முதல் எர்னஸ்ட் ஜோன்ஸ் என்பவர்தான் 'பேலோ சென்டர்' என்றழைத்தார். 'பேலோ சென்டர்' என்பதைத் தான் பெண்ணியத் திறனாய்வாளர்கள் 'லிங்கமைய வாதம்' என்ற பொருளில் பெண்ணிய உளப்பகுப்பாய்வில் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கப் பயன்படுத்து கின்றனர்.

ஃபிராய்டின் நனவிலி மன ஆய்வு பற்றிய கண்டுபிடிப்புகள் பெண்ணியத் திறனாய்வாளர்களுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன. எனினும், 'பிறப்புறுப்புப் பயச்சிக்கல்' பெண் குழந்தைக்கு மட்டும் ஏற்படல், ஆண்குறிப்பொறாமை போன்ற ஃபிராய்டின் கருத்துக்களை வன்மையாக மறுத்தனர்.

'காயடிப்புச் சிக்கல்' என்ற கோட்பாடு, ஆண்குறி என்பதை அடிப்படையாகக் கொண்டு, ஆண், பெண் இருபாலரது உடற் கூறு வேறுபாட்டை விளக்குகிறது. எனினும் ஃபிராய்டு காயடிப்புச் சிக்கல் என்பதை உலகப் பொதுமை வாய்ந்து என்பதாகக் கூறவில்லை. ஃபிராய்டு ஆண்குறி என்பதற்கு முதன்மை தந்து, இருபாலரது

காயடிப்புச் சிக்கல் தன்மோக உணர்வோடு மறைவான நிலையில் தொடர்புடையது என்கிறார்.''[1]

ஃபிராய்டைத் தொடர்ந்து, லக்கான் லிங்க மைய வாதம், நனவிலி மனம் பற்றிய கருத்துக்களை மொழியியல் நோக்கில் மீண்டும் அலசி ஆராய்ந்தார். லக்கான் மேற்குறிப்பிட்ட ஃபிராய்டின் கொள்கையைப் பின்வருமாறு மறுக்கிறார்.

'லிங்கம்' என்ற சொல்லாட்சி, அது ஒரு மொழியின் கூறு. குறியீட்டுக் குணம் கொண்டது. குறியீடாகக் கொள்ளப்படும் போது அதற்கு வேறு ஒன்றும் எதிராக ஆளப்படுவதில்லை. லிங்க உருவகம் முழுமையாக எங்கும் நிறைந்ததைக் குறிப்பதற்கான ஒரு குறிப்பான்; உயிர் உறுப்பை இழந்து விடுவோம் என்ற பய உணர்வு உருவாவதற்கு உலகம் முழுவதும் இச்சொல் மூல ஊற்றாக விளங்குகிறது. மேலும் லக்கான் லிங்கம் என்ற சொல்லைத் 'தந்தையின் பெயர்' என்ற பெயரில் குறிப்பிடுகின்றார். லிங்கம் என்பது தந்தையின் பெயர், வளமையைக் குறிப்பது என்ற பொருண்மையை அடிப்படைக் குணமாகக் கொண்டுள்ளது என்கிறார்.

மேலும் இருபாலாரிடமும் உள்ள குறிகளின் தன்மை அவரவர் உடலுக்கு ஏற்றபடி வேறு வேறாக இருக்கின்றன. எனினும் ஆணுக்குச் சமூக முக்கியத்துவம் தந்து லக்கான் பெண்ணின் பய உணர்வுச் சிக்கலை ஆணின் மற்றவை என்கிறார். இங்கு 'மற்றவை' (others) என்பது பெண்ணைக் குறிக்கிறது.

'லிங்கம்' மூலம் ஆண் எங்கும் நிறைந்தவனாக முதன்மையானவனாக உருப்படுத்தப்படுகிறான். பெண்ணின் தேவையைப் பூர்த்தி செய்பவனாக மாற்றப்படுகிறான். இது தான் சமூகத்தில் தந்தை உரிமைச் சமூகத்தை வடிவமைக்கக் காரணி யாகிறது என்கிறார் அரங்கமல்லிகா.[2]

இந்த லிங்க உருவம் எங்கும் முழுமையாக நிறைந்திருப்பதற்கான ஒரு குறிப்பானாகப் பயன்படுகிது. இது ஓர் உறுப்பு அன்று; எனினும் இக்குறிப்பான் சக்தி வாய்ந்த ஒன்றாக விளங்குவதால், உயிர் உறுப்பை இழந்து விடுவோம் என்ற பயச் சிக்கலை ஏற்படுத்தி, ஆண், பெண் இருவரையும் பயமுறுத்தி விடுகிறது.

மேலும் ஒரு குழந்தை முதலில் தன்னைத் தாயுடன் இணைத்து அடையாளம் காண்கிறது. பின் தந்தையுடன் இணைத்து அடையாளம் காண்கிறது. இந்த அடையாளம் தன்னைப்போலவே தந்தை லிங்கமுள்ள தன்மையைப் பெற்றிருப்பதால் அல்ல; தன்னை அடையாளம் காணும் உணர்வைக் குழந்தை, மொழி உலகிற்கு நுழைந்த பின்தான் பெறுகிறது. ஏனெனில் நனவிலி மனமும் மொழியும் ஒரு கட்டமைப்புத் தன்மை உடையது. இதுபோன்று பிறப்புறுப்பு பயச்சிக்கலும் ஓர் அமைப்பாகி விட்டது என்கிறார் லக்கான்.

லக்கானின் பார்வை லிங்கமைய வாதத்தை உலகப் பொதுவாக்கி விரிவாக விளக்குகிறது. ஆனால், மற்றவை என்பதைப் பெண் என்ற பொருண்மையில் ஆளும்போது, ஆண் முதன்மைத்துவம் நிறைந்தவனாகக் கருத இடம் தருகிறது. மேலும் இவர் ''பெண்கள் திரவத் தன்மை உடையவர்கள்; எங்கும் நிலையாக நிற்க இயலாதவர்கள்'' என்று ஃபிராய்டு கூறும் வினாவிற்கு விடை இருக்காது தவிர்த்து விடுகின்றார்''[3] இருபாலாருக்கும் சமநிலை நல்கவில்லை என்று பெண்ணிய இலக்கியத் திறனாய்வாளர்கள் லக்கானை மறுக்கின்றனர்.

ஆண்பிறப்புறுப்புப் பொறாமை, சுயகாதல் மேற்கொள்ளுதல், கீழ்ப்படிந்து போதல், தன்னைத் துன்புறுத்தும் தன்மையில் இன்பம் காணுதல் ஆகிய குணங்களை இயல்பாகக் கொண்டவர்கள் என்பதற்கு எதிராக இயங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இக்குறைகள் எல்லாம் பெண்களுக்குச் சுயமாக அமையவில்லை; ஆண்களின் அதிகாரக் கட்டமைப்பு தான் இத்தகைய குணங்களை உருவாக்கி இருக்கின்றன என்று வன்மையாக எதிர்த்தனர். இதனால் தனக்கு என்று ஒரு மொழியை இலக்கிய வகைமையை உருவாக்கப் பெண்ணிய வாதிகள் முனைந்தனர்.

லக்கானின் லிங்கமைய வாதத்தை எதிர்த்தாலும், இவரின் நனவிலி மனமும் மொழியும் பற்றிய கட்டமைப்புக் கோட்பாடு, பெண்ணிவாதிகளுக்குப் புதிய பரிமாணங்களைத் தந்தது.

லக்கான் , மொழிதான் மாந்தரைப் பண்பாட்டுப் பாலியல் கொண்ட ஆண், பெண் என்று கட்டமைக்கிறது. ஆண்மை, பெண்மை

என்பது உயிரியல் மொழியில் உருவானவை அல்ல. சமூகப் பண்பாட்டில் மொழி வகையில் எழுந்த ஒரு மாயை என்றார். அதாவது ஆண்மை, பெண்மை என்பதற்குரிய பொருண்மைக் கட்டமைப்புக்கள் பண்பாட்டில் கட்டமைக்கப் பட்டவை''[4] என்கிறார்.

லக்கானைத் தொடர்ந்து தெரிதா, ஆண்மை, பெண்மை பற்றிய கருத்து வாதங்களைக் கட்டவிழ்த்தல், பின்னை அமைப்பியல் என்ற நிலைகளில் வைத்துப் பேசினார். தெரிதாவின் கருத்துக்களையும் பெண்ணியவாதிகள் ஏற்றுக் கொண்டனர். இச்சூழலில் பெண்ணிய உளப்பகுப்புக் கோட்பாடு பெண்ணிய இலக்கியத் திறனாய்வில் புத்தெழுச்சி பெற்றது.

பெண்ணிய உளப்பகுப்புக் கோட்பாடுகள் பெண்களின் நனவிலி மனநிலையிலிருந்து உருவாக்கப்பட வேண்டும். ஆணாதிக்க நிலையில் வகுத்த பெண் பற்றிய கோட்பாடுகளை அப்படியே ஏற்கக் கூடாது. பெண் பற்றிய கற்பிதங்களை உடைத்தெறியப் பெண்கள் தனக்கென்று ஒரு மொழியை உருவாக்க வேண்டும் என்று உளப்பகுப்புத் திறனாய்வாளர்கள் சுட்டினர். இவர்களுள் ஹெலன் சிக்ஸிஸ் லூஸி இரிகரே, ஜுலியட் மிச்செல், ஜுலியா கிறிஸ்தெவா போன்ற புதிய பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வாளர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

## பெண்மொழி

பெண்களை அடிமைப்படுத்திய அமைப்புக்களுள் 1) தந்தை வழிச் சமுதாய அமைப்பில் பெண் பற்றிய வரையறைகள் 2) மொழி என்ற இரண்டு அமைப்புக்களும் குறிப்பிடத்தக்கன.

தந்தைவழிச் சமுதாய அமைப்பில், பெண்கள் உடலியல் கூறு,பாலியல் பண்பு என்ற அடிப்படைகளில் ஒரு வரையறைச் சட்டகத்திற்குள்அடக்கி வைக்கப்பட்டனர். பெண்களுக்கு இயற்கையாக அமைந்த உடலியல் கூறுகளைக் காரணம் காட்டி, பெண் தாய்மை அடைவதற்குரியவள்; அவளின் இன்றியமையாப் பண்பு கணவனுக்குகந்தவளாக நடப்பது; அவனுக்குரிய தேவைகளை மனமுவந்து செய்வதினால், பாராட்டுதற்குரியவள் என்று ஆணை முதன்மைப்படுத்திப் பெண்ணை இரண்டாந்தர நிலையில் சமுதாயம் வைத்தது.

இங்கு 'கேட் மில்லட்டின்' கருத்துக்கள் குறிப்பிடத்தக்கன. இவர் தம் 'பாலுணர்வு அரசியல்' (Sexual politics) என்ற நூலில் சமூகவியல் துறை சார்ந்த ஆண், பெண் பண்பாடுகளைக் கூறுகிறார். ஆண், பெண் என்ற பால்பாகுபாட்டிற்கும், ஆண்மை, பெண்மை என்ற சமூகப் பகுப்பிற்கும் வேறுபாடுள்ளது. முன்னது உயிரியல் அடிப்படையில் இயற்கையாக அமைந்த ஒன்று. பின்னது சமூகச் சூழலில், பண்பாட்டுப் பின்னணியில் நடத்தைகளை மையமாகக் கொண்டு கற்பிக்கப்பட்டது என்கிறார். இப்பகுப்பு முறை உளப்பகுப்பாய்விலும் தலைமைப் பண்புடையதாகக் கருதப்பட்டது.

ஆண்மை, பெண்மை என்ற பாலியல் பகுப்பில் முறையே ஆணுக்குரிய நடத்தைகளும், பெண்ணுக்குரிய நடத்தைகளும் ஆணால் வரையறை செய்யப்பட்டன. இந்த அமைப்பின் பண்புகள் தான் மொழிவழி இலக்கியங்களிலும் ஏற்றப்பட்டன. ஏனெனில் மொழி செய்பவன் ஆண்தான். இத்தகைய நடத்தைப் பண்புகள் சிறுவயதிலிருந்தே மொழிவழியாகச் சமுதாயத்தில் ஆண், பெண் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்பட்டன. எனவே தான் பெண்ணியவாதிகள் மொழியும் தமக்கு எதிராக உருவாக்கப் பட்டுள்ளது என்று ஆண்மொழிக்கு எதிரான பெண் மொழி ஒன்றை உருவாக்க விழைந்தனர்.

மேலை நாட்டுப் பெண்ணியத் திறனாய்வில் தொடக்கத்தில் மொழி என்பது ஒன்றுதான். ஆணுக்குள் பெண்ணும், பெண்ணுக்குள் ஆணும் இருந்து படைப்பு உருவாகிறது. இதில் ஆண்மொழி, பெண் மொழி என்று பாகுபடுத்த முடியாது என்ற கருத்தும் நிலவியது. பெண்களின் மொழியைப் பெண்மொழி என்று வரையறைச் சட்டகத்தில் அடக்குவதும் ஆணின்தனம் என்றனர்.

'ராபின் லாக்கேப்' (Robin Locab) என்ற மொழியில் அறிஞர், பெண்ணின் மொழி அதிகாரத் தொனி அற்றது; ஓரத்து வாழ்வைத் தான் எதிரொலிக்கிறது. தீவிர அக்கறை உணர்வற்றது. விளையாட்டுத் தனமானது. இன்பநாட்டம் கொண்டது. தனிப்பட்ட உணர்ச்சிகளுக்கு அதிக இடமளிப்பது. எனவே ஆண்களின் மொழியை விடப் பெண்களின் மொழி தாழ்ந்தது. எனவே ஆண்களின் மொழியைப் பெண்கள் தனதாக்கிக் கொள்ளவேண்டும் என்றார்.

எவ்வாறாயினும் மொழி ஆணால் உருவாக்கப்பட்டது. தந்தைவழிச் சமுதாய அமைப்பில் பெண்கள் எப்படி இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்களோ, அப்படியே படைத்திருக்கிறார்கள். லிங்கமைய அமைப்பும் பெண்ணைக் குறையுடையவளாகவே காட்டுகிறது. இந்த லிங்கமைய அமைப்பிலிருந்து விடுபடப் பெண் புதிய நோக்கில் தங்களுக் கென்று புதுப்பிரதிகளை, புதிய வரலாறுகளை எழுதவேண்டும். அவற்றில் தன்னுடைய நனவிலி மன அனுபவங்களை மறைக்காது தீவிர ஆற்றலுடன் வெளிப்படுத்த வேண்டும் என்று விரும்பினர். அப்பொழுது தான் மொழிக்குள் இருக்கும் பாலியல் வேறுபாடுகளை வெளிக்கொணர இயலும் என்று நம்புகின்றனர். இப்பின்னணியில் மலர்ந்ததே 'பெண்மொழி' என்ற புதிய உருவாக்கமாகும்.

ஆண் செய்த இலக்கியங்கள் எல்லாம் ஆணின் ஆதிக்கத்தை உணர்த்துகின்றன. ஆனால் பெண்ணின் மொழி ஆதிக்க மொழியன்று. ஆணின் ஆதிக்க உணர்வில் எழுந்த பெண் பற்றிய வரையறைச் சட்டங்களை, பண்பாட்டமைதியில் எழுந்த பாலியல் ஒடுக்குமுறைகளைத் தகர்த்து எறிய விழைகிறது பெண்மொழி. ஆணாதிக்கச் சொல்லாடலை எதிர்த்து அமைவதுதான் பெண்மொழி.

தந்தைவழிச் சமுதாய அமைப்பில் பெண்ணுக்குக் கிடைத்துள்ள அடையாளங்கள், ஆணாதிக்க மொழியின் புனைவாகும். ஆணாதிக்கம் கற்பித்த விலங்கு நிலை; விலக்கு நிலை; அடிமை நிலை முதலியவற்றை நீக்கப் புதிய அர்த்தங்களில் பெண்ணின் மொழியைப் புனைய வேண்டும்.

பாலியல் வேறுபாட்டிலிருந்து பெண்ணிய உளப்பகுப்பாய்வு தொடங்குகிறது. பண்பாட்டு வரையறைக்குள் அடக்கப்பட்டிருக்கிற பாலியல் பகுப்பு சார்ந்த கற்பிதங்களை எதிர்த்துத் தனக்கென்று ஒரு புதிய மொழியை உருவாக்கும் நோக்கில், பெண் மொழி உருவாகிறது.

ஆண் கற்பித்த ஆதிக்க நெறிகளைத் தகர்த்து எறிவது தான் இதன் முக்கிய நோக்கமாகும். அவ்வாறு தகர்க்க முயலும் பொழுது, தனது பாலியல் அனுபவங்களைத் தணிக்கை செய்யாது எழுத வேண்டும். சமூக விமர்சனங்களுக்கு அஞ்சக்கூடாது. ஏனெனில் பாலியல் அனுபவமும் படைப்பாக்க அனுபவமும் ஒன்றற்கொன்று

தொடர்புடையது. பெண்ணின் பாலியல் உணர்வு பன்முகப் பட்டது. ஆதலால் பெண்ணின் படைப்பும் பன்முக நோக்கமும் கொண்டதாக, தீவிர ஆற்றலுடன் வெளிப்படும் தன்மையுடையது. இந்த ஆற்றலுடன் ஆணின் மையத்தை உடைக்க, ஆணின் மொழிக்குள் அகப்படாது, வெளியில் நின்று பெண் மொழி செயல்பட வேண்டும்.

மேலும் லக்கான் கூறுவது போல, நனவிலி மன வெளிப்பாடும் மொழியும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவாகும். மொழிக்கும் நனவிலி மனத்திற்கும் இடையிலுள்ள உறவுகள் பெண் மொழியில் மையப் படுத்தப்பட்டன. பெண்மொழி இத்தகைய நோக்கில் உளப்பகுப்பாய்வுடனும் உட்படுத்தப்பட்டது.

## வெர்ஜீனியா உல்ப் (Virginia Woolf)

வெர்ஜீனியா உல்ப் நவீனப் பெண்ணியத் திறனாய்வின் முன்னோடியாவார். இவர் பெண் எழுத்தாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் தீவிரக் கவனம் செலுத்தினார். இவரது 'பெண்களுக்கான பணிகள், என்ற கட்டுரையில் தம் சொந்த அனுபவங்களையே எடுத்துக்காட்டுகிறார்.

பெண்கள் தங்கள் உணர்ச்சிப் பெருக்குகளை அப்படியே வெளிப்படுத்த முடியாதபடி, சமூகத்தடைகள் உள்ளதை ஒத்துக் கொண்டார். இதற்குக் காரணம் தன் வாழ்விலும் படைப்பிலும் தடைகளை இவர் மீறவில்லை என்பர். இதுபோல நனவிலி உலகம் பற்றிய நம்பிக்கையும் இவருக்கு இல்லை. எனினும் பெண்கள் வலுவான சிந்தனை ஆற்றல் உடையவள் என்று நம்பினார்.

எனினும் பெண்களின் எழுத்துக்கள் ஆண்களின் எழுத்துக்களிலிருந்து வேறுபடுகின்றன. ஏனெனில் ஆண்களிலிருந்து பெண்கள் வேறுபட்ட உளவியல் கூறுகொண்டவர். இவர்களின் சமூக அனுபவமும் வேறுபட்டது. ஆதலால் பெண்கள் தம் அனுபவங்களைச் சுயசிந்தனையுடனும் விழிப்புணர்வுடனும் வெளிப்படுத்த வேண்டும் என்கிறார். பெண்கள் தங்கள் எழுத்தில் தங்களைப் பற்றிய சுயவிமர்சனங்களைச் சொல்வதற்குத் தக்க இடம் ஒதுக்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார்.

பெண்கள் ஓர் எல்லைக்குள் நிற்கும் தங்கள் வாழ்க்கை முறையை விளக்குவதற்கு, தனியான மொழி வழிமுறைகளைக் கண்டுபிடிப்பது இவருடைய நோக்கமாக இருந்தது. மேலும் ஆண் தன்மையுடைய மனத்துடன் மட்டும் மொழியைப் படைக்க முடியாது. அதே நேரம் பெண் தன்மையுடைய மனத்தினால் மட்டும் இலக்கியத்தைப் படைக்க முடியாது. ஒரு பெண்ணுக்குள் ஆணும் ஓர் ஆணுக்குள் பெண்ணும் இருப்பது இயல்பு என்கிறார்.

இவர் பெண் எழுத்தில் விழிப்புணர்ச்சி அமைய வேண்டும்; பெண் தீவிரச் சிந்தனையாற்றலுடையவள் என்ற கருத்துக்களை வற்புறுத்தினாலும், ஆண், பெண் ஆகிய இருபாலார்க்கும் இடையில் ஒரு நிலையான பாலியல் வாதத்தை வற்புறுத்த விரும்பினார் என்று இவரது திறனாய்வுப் பார்வையைச் சுட்டுவர்.[4] இந்த நடுநிலையான செயல்பாட்டைத் தான் பிரெஞ்சு புதுப் பெண்ணியத் திறனாய்வாளரான ஹெலன் சிக்ஸஸ் தீவிரமாக எதிர்த்தார். பிரெஞ்சு பெண்ணியத் திறனாய்வாளர்கள் மொழியியல் பின்னணியில் ஆண்மொழிச் சிதைவாக்கத்தை அணுகி, பெண் மொழியை உருவாக்குவதில் தீவிரமாகச் செயல்பட்டனர்.

## பிரெஞ்சுப் புதிய பெண்ணியத் திறனாய்வாளர்கள்:

பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வு என்பது 1950-களில் சைமன் -டி-பெ வாயரின் கோட்பாடுகளுடன் தொடங்குகிறது. இவர் பெண் என்பவள் அரசியல், சமூகம், பண்பாட்டு அடிப்படையில் பிறப்பதில்லை; உருவாக்கப்படுகிறாள். (One is not born as women; one becomes one) என்று பெண் என்பதற்குச் சமூகச் சூழலின் பின்னணியில் விளக்கம் தருகிறார்.

## ஹெலன் சிக்ஸஸ் (Helen Cixous)

பெண் எழுத்து பற்றிய இவருடைய ‘மேடுசாவின் புன்னகை - நவீனப் பிரெஞ்சுப் பெண்ணியம்’ 'The laugh of Medusa New French Feminism) என்ற கட்டுரை குறிப்பிடத் தக்கது.[5]

இவரது கட்டுரை 1975களில் நவீனப் பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வாளர்களிடையே கொள்கைச் சாசனமாகக் கருதப்பட்டது. மேலும் பிரான்சில் பத்தொன்பதுகளில் அரசியல்

உளப்பகுப்பாய்வுக் குழு என்ற ஒரு தனிக்குழுவையே உருவாக்கின என்றும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் விளக்குவர்.

இக்கட்டுரையில் ஹெலனின் பெண் எழுத்து பற்றிய திறனாய்வுப் பார்வையை பெண்களின் எழுத்தும் நனவிலி மன உணர்வும், பெண் உடலை எழுதுதல், பரவச எழுச்சி என்ற நிலைகளில் பகுத்துக் காண முடிகிறது. இவர் பெண் எழுத்துக்களின் பல பரிமாணங்களை நனவிலி மன உணர்வுடன் இணைத்து விளக்குகிறார்.

## பெண்களின் எழுத்தும் நனவிலி மன உணர்வும்

பெண் படைப்புலகிற்கு அவளை முழுமையாகக் கொண்டுவர வேண்டும். பெண் அவளையே எழுத வேண்டும். அவள் உடம்பைக் காரணம் காட்டி எவ்வளவுக்கெவ்வளவு சமுதாயத்தில் விரட்டியடிக்கப்பட்டோமோ, அவ்வளவுக்கவ்வளவு வலிமையுடன் அவளது அனுபவங்களை எழுதவேண்டும். உலகிலும் வரலாற்றிலும் இருக்கிற நிகழ்வுகளைப் பெண்கள் தங்கள் பிரதியில் கொண்டுவர வேண்டும். தம் சொந்த அனுபவங்களை எழுத வேண்டும்.

அதே நேரம் கடந்த காலத்தில் நாம் இப்படி இருந்தோம் என்று மறுபடியும் கூறியதையே வலிமைப்படுத்தி எழுதுவதை நான் மறுக்கிறேன். எதிர்பார்ப்புகள் என்பது தவிர்க்க முடியாததுதான். (Anticipation is imperative). நம்மைச் சுற்றியுள்ள வரையறைச் சட்டத்தை உடைத்து எறிய வேண்டும். பழைய மரபுகளிலிருந்து வெளியே வரவேண்டும்.

பெண்கள் அனைவரும் தம்மகத்தே பொதுப்பண்புகள் கொண்டவர்கள் அல்லர். ஒவ்வொருவரும் தனிப்பட்ட பண்புகளைக் கொண்டிருக்கிறார்கள். அப்பண்புகளே அவரவர்களுடைய தனிப்பட்ட அமைப்பாகவும் திகழ்கிறது. அவ்வமைப்புக்கள் முடிவில்லாதன; செழுமை வாய்ந்தன; பெண்கள், பெண்களின் பாலியல் கூறு, பெண்கள் பெருமைக்குரியவர்கள், பெண்களை ஒரே மாதிரிகளாகப் பகுத்தல் என்ற நிலைகளையே பெண்கள் தம் படைப்புக்களில் எழுதக்கூடாது.

பெண்களின் கற்பனையானது, இசை, ஓவியம் வரைதல், எழுதுதல் போல எடுக்க எடுக்கக் குறையாத வற்றாத வளமுடையது; பெண்களின் கற்பனைத் தன்மை ஒரு நீரோட்டம் போன்றது;

வியக்கத்தக்கது. (Women's imagery is in exhaustible; like music, painting, writing, their stream of Phantasams is incredible)

நான் இன்றும் புதிய புதிய நோக்குகள் என்னுள் எழுவதைக் கண்டுபிடித்திருக்கின்றேன். என்னுடைய உடம்பு கேட்கப்படாத பாட்டுக்களை அறிகிறது. இருளிலும் ஒளிவீசுகின்ற மின்னலைகளின் (Luminants Torrents) வீச்சுக்களை நான் உணர்கிறேன்.

நான் முன்பு வெட்கப்பட்டேன். அஞ்சினேன்; ஆனால் இப்பொழுது எனது பயத்தையும் வெட்கத்தையும் விழுங்கி விட்டேன். ஏனெனில், பெண்கள் ஒவ்வொருவரும் தங்கள் எழுத்தில் இத்தகு உணர்வுகளுடன்தான் செயல்பட வேண்டும்.

நீங்கள் ஏன் உங்களுக்காக எழுதக்கூடாது; உங்களுக்காக எழுதுங்கள்; உங்களுக்காகவே நீங்கள் இருக்கிறீர்கள். நீங்கள் ஏன் இருபத்தேழு வயதிற்கு முந்தியுள்ளதை எழுதவில்லை என்று வினவுகிறார். ஏனெனில் எழுத்து என்பது ஒரு சமயம் உயர்ந்த கருத்துக்களைச் சேமித்து வைக்கும் களஞ்சியமாகவும் இருக்கும். பெரிய மனிதர்களுக்காகவும் எழுதப்படும். சில்லறைத் தனமாகவும் (Silly) இருக்கும். இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்து எழுதுங்கள். அவை இரகசியங்களாகவும் இருக்கும். உங்களின் மூல வளங்கள்; மூலஊற்றுக்களை எழுதுங்கள் என்றார்.

பெண்களின் நனவிலி மனம் முற்றிலும் ஆண்களின் அனுபவங்களிலிருந்து வேறுபட்டது. பெண்களின் புதிய சொல்லாடல்களை உருவாக்க, அவர்களின் பன்முகப்பட்ட உளப் பகுப்பு உடலியல் கூறுதான் (Psycho-Sexuality) வலிமை தருகிறது.

பெண் எழுத்தில் கூறத்தக்கது இது; கூறத்தகாதது இது என்று எதையும் தணிக்கை செய்யாது, உடம்பின் ஒவ்வொரு சிறு அனுபவங்களையும் மறைக்காது எழுத வேண்டும் என்பது ஹெலன் வலியுறுத்தும் பெண் எழுத்து பற்றிய கருத்துக்களாகும். ஒட்டு மொத்தமாக ஆண் மையச் சொல்லாடல்களைச் சிதைக்க வேண்டும். அதற்குப் பெண்கள் எவ்வாறு எழுத வேண்டும்; புதிய பிரதிகளை எந்நோக்கில் உருவாக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

## பெண்ணுடலை எழுதுதல்

இவர் உடலை எழுதுதல் என்பதை 'L' Ecriture Feminine' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

பெண் உடலையும் பெண் வித்தியாசங்களையும் பிரதியில் எழுதுவதுதான் பெண்ணுடலை எழுதுதலாகும். இவர் பெண்கள் தம் படைப்பில் பெண்ணுடலையும், பெண் விருப்பங்களையும் (the female body and the desire) மறைக்காது எழுதவேண்டும் என்கிறார்.

பெண் மொழியைப் பற்றிப் பேசும்பொழுது ஆண் எழுத்துக்களிலுள்ள பெண்பற்றிய ஒழுங்குமுறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடவும், லிங்க மைய வாதத்தை உடைக்கவும் பெண் தன் உடம்பை எழுதவேண்டும்.

ஏனெனில் பெண்ணின் பாலியல் பன்முகப்பட்டது. அதுபோல் பெண்ணின் எழுத்தும் தீவிர உணர்வாழம் வாய்ந்தது. ஆதலால் பெண்ணின் எழுத்துக்களை ஒரு வட்டம் அல்லது ஒரு கோட்பாட்டிற்குள் அடக்க முடியாது. அவ்வாறு அடக்க முயலுவது கூட ஆணின் தனமாகும். மேலும் தம் நனவிலி மனத்தில் ஓடும் சிந்தனைகளை எல்லாம் வெளிப்படுத்துவதற்குரிய ஒரே களம் படைப்புக்களம்தான். அதிலும் கவிதைக்களம்தான் உணர்வுகளின் ஒட்டுமொத்தக் குவியலை வெளிப்படுத்துவதற்கும், பகுத்தாராய் வதற்கும் உரிய சிறந்த களம் என்பது இவரது கருத்தாகும். பெண்கள் தம் எழுத்துக்களில் இன்னும் ஆண் வகுத்த, லிங்க மைய வாதம் கற்பித்த பெண்களுக்குரிய வரையறைகளைத் தூக்கி எறியாது இருப்பது மிகவும் வருந்தத்தக்க வெட்கப்படக்கூடிய செயலாகும் என்றும் குறிப்பிடுகின்றார்.

''பெண் தன் உடம்பை எழுதும்போது அவளுக்கே உரிய பொருட்களையும் அவளுக்கே உரிய உறுப்புக்களையும், அவளது உடம்பு சார்ந்த மிகப் பெரிய ஆட்சிப் பரப்பையும் எந்தவிதத் தணிக்கை உணர்வின்றி அப்படியே தம் எழுத்தில் வெளிப்படுத்த வேண்டும்'' என்று பஞ்சாங்கம் ஹெலனின் பெண்ணுடலை எழுதும் முறையை எடுத்துக் காட்டுகிறார்.

இவர் ஒரு பெண்ணின் உடம்பு தன்னுடைய ஆயிரக்கணக்கான உணர்ச்சி வெப்பத்தை மூல நெருப்பாகக் கொண்டு பலப்பல மொழிகளை ஒலி அதிர்வுகளை உருவாக்கிவிடக் கூடிய தனிச் சிறப்பு மிக்க, தாய்மொழி என்னும் மூலமொழியை உருவாக்கும் தன்மையுடையது என்கிறார்.

## பரவசம்

பெண்களின் பரவச உணர்வு என்பது பன்முகப்பட்டது. பெண்களின் பாலியல் கூறு ஒன்றல்ல. பல உறுப்புக்களால் சம்பந்தப்பட்டிருப்பதால், அவள் பரவச உணர்வும் முடிவற்றது; பன்முகப்பட்டது. ஆனால் ஆணின் பாலியல் கூறு ஒருமுகப்பட்டது. லிங்கத்தோடு தொடர்புடையது.

''பெண்ணின் பாலியல் பன்முகப்பட்டதாக இருப்பதின் விளைவாக, உருவாகும் பெண்ணின் மொழிகூடப் பழக்கமான ஆணாதிக்கத் தாக்கத்தின் விதிகளுக்குள்ளேயே பல முகமாக, சுய இன்ப எழுச்சியாக பரந்துபட்டதாக வரையறுக்க முடியாததாக இருக்கும்'' என்கிறார்.[6]

எங்கே இருக்கிறாள் அவள்? என்ற கட்டுரையில் இயற்கையிலுள்ள இரட்டை எதிர்வுகளின் அமைப்பினை ஹெலன் எடுத்துக்காட்டுகிறார். சான்றாக சூரியன்- சந்திரன், இரவு - பகல், தந்தை-தாய், அறிவு-உள்ளம், சொல்-உணர்வு என்பனவற்றைக் குறிப்பிடுகின்றார். இந்த ஒவ்வொர் இரட்டைப் பண்புகளிலும், ஆண் வரிசை உயர்ந்ததாகவும், பெண் வரிசை தாழ்ந்ததாகவும் உள்ளது. ஒன்றிற்கொன்று தொடர்பில்லாத இரட்டைப் பொருட்கள் இராது. மேலும் இரட்டைப் பொருட்கள் ஒவ்வொன்றிலும் பன்முகத் தன்மை உள்ளது. ஆனால் ஒரு சொல் முழுமையான அர்த்தத்தைப் பெற வேண்டுமானால், ஒன்றை அழித்துத்தான் ஆக வேண்டும். ஒன்றின் அழிவில்தான் இன்னொன்று ஆக்கம் பெறும்[7] எனவே ஆண்மையச் சொல்லாடல்களாய் அமைந்துள்ள இருமைச் சொல்லாடல்களைத் தகர்க்க வேண்டும் என்பது ஹெலனின் அடிப்படை நோக்காகும்.

## லூஸி இரிகரே

இவரும் ஹெலன் போல, இருபாலருடைய பிறப்புறுப்புக்களை வைத்துப் பார்க்கும்போது, பெண்ணின் மொழி என்பது

பன்முகப்பட்டது. பல பக்கங்களிலும் பரவக் கூடியது. ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தானே தனது படைப்பில் தொட்டுக் கொண்டிருக்கிறாள். ஆணின் தர்க்கத்திற்குள் பிடிபடாது என்கிறார்.

## ஜூலியட் மிச்செல் (Juliet Mitchell):

பெண்மொழி சார்ந்த பெண்ணிய உளப்பகுப்புக் கோட்பாட்டில் ஜூலியட் மிச்செல்லும் குறிப்பிடத்தக்கவர். இவர் பெண் ஒரு பெரும் புரட்சி' என்ற தம் கட்டுரையில் ஃபிராய்டின் லிங்கமைய பார்வைக்குக் காரணம் கற்பிக்கின்றார். ஃபிராய்டு தந்தைவழிச் சமுதாயத்திலுள்ள ஆணாதிக்க அதிகாரத்தைப் பகுத்தாராய்கின்றார். உண்மையில் ஃபிராய்டு அக்காலச் சமுதாயத்தின் மனவெளிப்பாட்டைத்தான் முதன்மைப்படுத்துகின்றார் என்கிறார். ஜூலியட்டின் இக்கூற்று ஃபிராய்டின் கருத்துக்களைப் பரிந்துரை செய்கின்றன என்று பெண்ணியத் திறனாய்வாளர்கள் மிச்செல் மீது குற்றம் சாட்டினர்.

இவர் ஒரு பக்கம் ஃபிராய்டின் கருத்துக்களை மறுபரிசீலனை செய்தாலும், மறுபக்கம் தொடக்க காலப் பிரெஞ்சு நாவல்களில் பெண்களின் நிலையினை, பெண்களின் எழுத்துக்களை மதிப்பீடு செய்வதும் குறிப்பிடத்தக்கது. பிரெஞ்சில் 17ஆம் நூற்றாண்டில் நாவல் சுய சரிதைகளாகத் தொடங்கின. தொடக்க காலத்தில் ஆண் படைப்பாளிகள் அதிகம் இருந்ததைப் போல, பெண் படைப்பாளி களும் அதிகம் இருந்துள்ளனர். இக்கால கட்டத்தில் பெண்கள் தம்மை, 'தன்னிலையாக்கல்' (Self Actulaization) முறையில் நிலைநிறுத்த முயன்றனர்.

புதிய தந்தைவழிச் சமுதாயத்தில் பெண்களாக உருவாக்கப் பட்டிருக்கும் நிலையிலிருந்து அல்லது ஒடுக்கப்பட்டிருக்கும் நிலையிலிருந்து தொடங்கி வரலாற்றைப் படைக்க விரும்பினர். முக்கியமாகத் தந்தைவழிச் சமுதாயத்தில் பெண்கள் தங்களுடைய வாழ்க்கை உருவாக்கத்தை எழுதினர்; இவ்வாறு பெண்களாக உருவாக்கப்படுதற்குரிய வழிமுறைகளின் பின்னணியில் யார் இருந்தார்கள் என்பதை எழுதினார்கள். இத்தகு தன்மைகள் கொண்ட பெண்களின் தொடக்ககால நாவல் எழுத்துக்கள் எல்லாம் 'ஜூலியா கிறிஸ்துவா' சொல்வதுபோல, ஹிஸ்டீரியாக்களின் சொல்லாடல்களாக (Discourse of hysteric) உள்ளன.

இத்தன்மை தந்தைவழிச் சமுதாயத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பாலியல் கட்டமைப்பை, பாலியல் கூறு என்ற நிறுவனத்தை ஒரே சமயத்தில் ஏற்பதும், ஏற்க மறுப்பதும் ஆகும். பெண்கள் ஒரே நேரத்தில் பெண்மைத் தன்மையுடையவர்களாக இருப்பதும் அதே நேரம் பெண்மைத் தன்மையை மறுப்பதும் ஆகிய இரண்டு நிலைகளும் இங்கு ஒன்றாக வெளிப்படுகின்றன. இத்தன்மையில் வெளிப்படும் குரல் உண்மையான பெண் குரலன்று. முன்பு ஆண்கள் சொன்னதை, அதே போலச் சொல்லும் ஹிஸ்டீரியாக்களின் குரலாகும். அதாவது லிங்க மையச் சமுதாயத்திலிருந்து ஆண் தன்மையுடன் பெண்களின் அனுபவங்களைப் பேசுவதை ஆண் தன்மை சார்ந்த பெண்மொழி (Woman's Masculine Language) என்கிறார். இந்த அமைப்பிலிருந்து விடுபட, புதிய சமுதாய அமைப்பில், பெண்கள், பெண்களாகத் தங்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு உருவாவதற்குரிய வழிமுறைகள் யாவை? நாம் இப்பொழுது தந்தைவழிச் சமுதாயத்தில் என்னவாக உருவாக்கப்பட்டிருக்கின்றோம் என்பது தான் அடிப்படை வினா. இதற்கு விடை, நாம் வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவேண்டும். புதிய வரலாற்றை எழுத வேண்டும். அதில் நாம் எவ்வாறு இருக்கிறோம் என்ற தன்மைகளைச் சுட்டவேண்டும் என்கிறார்.[7]

## ஜூலியா கிறிஸ்தெவா (Juliet Kristava)

ஜூலியா கிறிஸ்தெவா மொழியியல் அடிப்படையில் மொழியில் அமைந்துள்ள ஆண், பெண் பால்வேறுபாடுகளை எடுத்துரைக்கின்றார். மரபு வழிவந்த மொழி ஆணைநோக்கி அமைந்துள்ளது என்கிறார். மொழியைப் பயன்படுத்துவதில் ஆணுக்கும், பெண்ணுக்கும் வேறுபாடு உள்ளது என்கிறார்.

இவர் விளிம்புநிலை (Marginality), தலைகீழ் மாற்றம், ஒத்துப்போகாமை ஆகிய தன்மைகளை விவாதிக்கின்றார். இதனடிப்படையில் பார்த்தால் பெண்கள் லிங்க மையச் சொல்லாடலில் ஆணாதிக்கச் சமுதாயத்தில் விளிம்பு நிலையில் தான் நிறுத்தப்பட்டுள்ளார்கள். ஆண்கள் தான் இலக்கியத்தில் மையப்படுத்தப்பட்டுள்ளனர். அந்த மையத்தை உடைத்தெறியப் பெண்ணின் பாலியல் சார்ந்த கோட்பாடுகளை ஆணின் அதிகார அமைப்பிற்கு வெளியே உருவாக்க வேண்டும்.

ஒரு புதிய சொல்லாடல்களை உருவாக்குவதுடன், பெண்கள் தங்களை வரையறைக்குள் நிறுத்தும் சொல்லாடல்களைக் கேள்விக் குட்படுத்த வேண்டும் என்கிறார். பாலியலிலிருந்து தங்கள் எழுத்துக்களைத் தொடங்க வேண்டும் என்கிறார்.

இவர் பெண்ணின் பாலியல் (Feminine Gender) உணர்வுப் பெருக்கத்தைக் கவிதை உற்பத்தியுடன் தொடர்புபடுத்துகின்றார். ஏனெனில் கவிதைதான் பெண்ணை, பெண்ணின் நனவிலி மன உணர்வுகளைப் பகுத்து ஆராய ஒரு சிறந்த களமாக உள்ளது. ஏனெனில் கவிதை தான், உணர்வுகளுக்கு அப்பாலும் இழுத்துச் செல்லும் ஆற்றல் கொண்டது. ஆசை, பயம் என்ற எண்ணற்ற உணர்வுகள் குவிவதற்குரிய இடமாக, திறந்த களமாகக் கவிதை உள்ளது என்கிறார். பெண்ணின் பாலியல் உணர்வு வெளிப்பாடும் பன்முக உணர்வுக் குவியலின் இருப்பிடமாகத் திகழ்வதால், கவிதை உற்பத்தியுடன் நேரடித் தொடர்பு கொண்டது என்று வலியுறுத்துகின்றார்.

இந்தப் படைப்பாக்கக் குணம் தான் ஆண்களின் லிங்க மைய வாதத்தை, ஆணாதிக்கச் சொல்லாடலை வேரோடு தகர்த்தெறிய முனைகிறது. குழந்தையின் ஈடிபஸ் சிக்கலுக்கு முந்திய காலகட்டம் ஆண், பெண் என்ற பாலியல் வேறுபாடற்ற தன்மை கொண்ட காலமாகும். ஆதலால் பெண்ணின் குறியியல் பயமும் பார்வையும் பெண்ணுக்குரியதாக, நெருக்கமாக உள்ளது என்பது ஐயத்திற் கிடமானது.

மேலும் சொல்லாடலுக்கு அல்லது மொழிக்கு வழிகாட்டிய நனவிலி மனத்தின் மௌனம்தான் பெண். நான்- நீ - மற்றவை என்ற உறவாக்கத்தில் தான் பெண் மற்றவை என்ற இடத்தை வகிக்கிறாள். இவ்வாறு கட்டுப்படாத வெளியில் நின்று கொண்டு காரண காரியத்திற்குட்பட்டு இயங்கும் சொல்லாடலைச் சிதறடிப்பேன் என்ற நோக்கத்துடன் செயல்படுகிறார்.

இவ்வாறு கிறிஸ்துவாவின் திறனாய்வுப் பார்வையை எடுத்துக் காட்டும் பஞ்சு, ''கிறிஸ்துவா பெண்ணாக இருப்பதால், பெண்களின் சார்பாக; அமுக்கப்படாத, தன்னிச்சையாகப் பொங்கி நிறைகின்ற சுதந்திரமான சக்தியைப் பெண்களுக்குரியதாக உரிமை கொண்டாடுகிறார்''என்கிறார். பஞ்சாங்கத்தின் பார்வையில்

தன்னிச்சையாகப் பொங்கி எழும் படைப்பாற்றலை அப்படியே வெளிப்படுத்தும் உணர்வு ஆண், பெண் ஆகிய இரு படைப்பாளிகளுக்கும் உள்ளது என்பது ஏற்புக்குரிய கருத்தாகும். எனினும் பெண்ணின் எழுத்துக்கள் தமது நனவிலி மன அனுபவங்களை எழுதும்போது, உணர்வுக்குவியலின் தீவிர ஓட்டம் கொண்டதாகத் திகழும்; ஆணின் நடையிலிருந்து வேறுபாடு கொண்டது என்பதும் ஒப்புக் கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களைத் தொகுத்து, பெண்ணிய உளப்பகுப்பு, பெண்மொழி போன்றவற்றைப் பின்வருமாறு வரையறை செய்யலாம்.

1. பெண்ணிய உளப்பகுப்பும் பெண்மொழியும் ஒன்றற்கொன்று தொடர்புடையது.

2. பெண்ணிய உளப்பகுப்பாய்வாளர்கள் மொழியியல் வட்டத்தின் பின்னணியில் நின்று பெண் மொழியைப் பெண்ணின் நனவிலி வெளிப்பாட்டை ஆராய்ந்தனர்.

3. பெண்ணிய உளப்பகுப்பாய்வில் நனவிலி மனத்திற்கும் மொழி வெளிப்பாட்டிற்கும் இடையிலுள்ள உறவுகள் ஆராயப்படுகின்றன.

4. பெண்ணின் கனவுகள், சொல்லாடல்கள், குறிப்பு மொழிகள் போன்றவற்றை எடுத்து ஆராயும் போக்கு வற்புறுத்தப்பட்டது.

5. பெண்ணிய உளப்பகுப்பாய்வு பெண்மொழியைப் பகுத்து ஆராயும் வழிமுறைகளைக் கூறுகிறது.

6. பெண்மொழி உருவாக்கத்திற்கு ஆண், பெண் என்ற பாற்பகுப்பும் (Sex) ஆண்மை, பெண்மை (Gender) என்ற பண்பாட்டமைப்பில் எழுந்த வரையறைகளும் அடிப்படைக் காரணங்களாக அமைந்தன.

7. பெண்மொழி ஃபிராய்டின் லிங்க மைய வாதத்திற்கு எதிரானது.

8. ஆணால் வரையறை செய்யப்பட்ட லிங்கமையச் சொல்லாடலைச் சிதைத்தல்.

9. ஆண் மையத்திற்கு வெளியே நின்று பெண்ணியச் சொல்லாடலை, பெண் மொழியை உருவாக்குதல்.

10. ஆணின் அதிகாரப் பார்வையில் எழுந்த பெண் பற்றிய சொல்லாடல்களைக் கேள்விக்குட்படுத்துதல் போன்றவற்றை அடிப்படை நோக்கங்களாகக் கொண்டுள்ளன.

11. இயற்கையாக அமைந்த உடலியல் கூறு (Sex) களைக் காரணம் காட்டி ஆண் சமுதாயம் பெண்களை அடிமைப்படுத்தியது. அக்காரணங்களுக்கு அடிப்படையாய் அமைந்த பெண்ணின் பாலியல் கூறுகள் பன்முகப்பட்டன.

12. பெண்களின் நனவிலி மன உணர்வு ஆண்களின் அனுபவத்திலிருந்து வேறுபட்டது.

13. பெண்களின் பன்முகப்பட்ட பாலியல் உளப்பகுப்பு இயங்கு தன்மைதான் ஆண்களுக்கு எதிரான சொல்லாடலை, பனுவலைப் படைக்கப் புதிய நோக்கில் உருவாக்க ஆற்றல் தருகிறது.

14. பெண்ணின் உடம்பிலிருந்து எழும் மூலவளங்களின் ஆற்றல் தீவிரத்தன்மை வாய்ந்தது. இத்தகு தீவிர ஆற்றல் ஆண் மொழிக்கு எதிராகப் புதுப்பிரதிகளை உருவாக்க வேண்டும் என்ற உந்துசக்தியாகச் செயல்படுகிறது.

15. அதில் பெண்ணின் உடலை எழுதுதல் வேண்டும். பெண்ணின் உடலில் தோன்றும் வித்தியாசங்களையும், மெல்லிய உணர்வுகளையும் மறைக்காது எவ்விதத் தணிக்கை உணர்வுமின்றி எழுதவேண்டும் என்ற கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டன.

16. தன் உடம்பின் அதிர்வுகளுக்கு வன்மையானவர்களாக இருந்து பெண் எழுத்தாளர்கள் செயல்பட வேண்டும்.

17. பெண் தனக்கே உரிய ஆற்றலுடன் நுழையும்போது, தனக்கு விதிக்கப்பட்ட விலக்குகள், சமூகத் தடைகளின் மீது தீவிரமான ஆர்வத்துடன் ஈடுபட வேண்டும்.

18. பெண் எழுத்து பெண் உடல் பற்றிய விமர்சனங்களுக்கு அஞ்சுதல் கூடாது.

19. பெண் எழுத்துக்களைப் பெண்மொழிதான் மதிப்பீடு செய்கிறது.

20. பெண் எழுத்துக்களில் நாங்கள் இப்படி இருக்கிறோம் என்று சொல்லாடுவது ஹிஸ்டீரியாக்கல் ஆகும். அது ஆணின் சார்புபட்ட மொழியின் குரலாகும். இக்குரலைப் பெண்மொழியில் மாற்ற வேண்டும்; அடியோடு நீக்க வேண்டும்; மரபார்ந்த முறையில், ஆண்களால் அடிமைப்படுத்திய கதை சொல்லும் வடிவங்களை உடைத்தெறிய வேண்டும்.

21. உலகிலுள்ள இயற்கையான இரட்டை எதிர்வுகள் எல்லாம் ஏற்றத்தாழ்வுகள் உடையனவாக ஆணின் பார்வையில் அர்த்தம் செய்யப்பட்டுள்ளன. அதை மாற்ற வேண்டும். ஒன்றை மாற்ற ஒன்றை அழிப்பதில் தவறில்லை. ஒன்றின் அழிவில் தான் இன்னொன்று ஆக்கம் பெறும். அந்த ஆக்கம் பெண்மொழியாக இருக்க வேண்டும்.

22. மொழியில் செயல்படும் ஆணாதிக்க உணர்வின் அர்த்தங்களைச் சிதைவாக்கம் செய்வது பெண்மொழி.

23. ஆனால் பெண்ணின் மொழி ஆதிக்கமொழியன்று. ஆதிக்க உணர்வைத் தகர்க்கும் மொழி பெண்மொழி.

## குறிப்புக்கள்

1. அரங்க நலங்கிள்ளி, கலை இலக்கிய உளப்பகுப்பாய்வு, ப.102
2. அரங்கமல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், ப.158
3. சண்முக சுந்தரம், பெண்ணியம், 'எதிர்வு சிவக்குமார், பெண்மை(ய) எழுத்துக்களும் பெண்ணுடலை எழுதுதலும்; பக்.160-162
4. சண்முக சுந்தரம், மு.நூ., பக்.144
5. Mary Eagleton (Ed.), Feminist Literary theory, Reader, pp.225-227
6. சண்முக சுந்தரம், மு.நூ., 'பஞ்சு, பெண்ணியத் திறனாய்வு', பக்.131-132
7. Mary Eagleton (Ed.) loc. cit; 'Juliet Mitchell, Feminity, Narrative and Psychoanalysis; pp.100-103

# 5. ஔவையார் பாடல்களில் மனமும்மொழியும்

## - பெண்ணிய உளப்பகுப்பு நோக்கு

பெண்களின் நனவிலி மன அனுபவங்களை வெளிக் கொணர்வதும் சமுதாயம் பெண்ணுக்குரியதாக இதுவரை கற்பித்து வந்த கற்பிதங்களை உடைத்தெறிவதும், 'பெண்ணிய உளப்பகுப்பின்' முக்கிய நோக்கங்களாகும். பெண்ணிய உளப்பகுப்புத் திறனாய்வாளர்கள், 'நனவிலி மனமும் மொழியும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது' என்ற லக்கானின் கருத்தைப் பின்பற்றிப் பெண்மொழி உருவாக்கத்திலும் அதிகக் கவனம் செலுத்தினர்.

பெண்கள் தனது நனவிலி மன அனுபவங்களை மறைக்காது எழுத வேண்டும்; உடம்பின் ஒவ்வொரு மெல்லிய அதிர்வுகளின் குரலை வெளிப்படுத்த வேண்டும்; பெண் தனக்கென்று ஒரு மொழியை உருவாக்கினால் தான், பெண்ணைப் பற்றிக் கற்பித்து வந்த ஆணின் அதிகார மொழியிலிருந்து விடுபட முடியும் என்று பெண்ணிய உளப்பகுப்புத் திறனாய்வாளர்கள் விரும்பினர்.

சங்கப் பாடல்கள் மரபிற்கு உட்பட்டன. தந்தைவழிச் சமுதாயத்தின் தலைமைத்துவமே சங்க இலக்கியங்களில் அமைந்துள்ளது. எனினும் பெண்களின் நனவிலி மன உணர்வுகளே தன்னுணர்வுக் கூற்றுக்களாக, பெண் புலவர்களின் பாடல்களில் பதிவாகியுள்ளன. அந்நனவிலி மன உணர்வின் குரலே பெண்ணின் மொழியாகவும் வெளிப்பட்டிருக்கிறது. இப்பின்னணியில் சங்க அகப்பாடல்களில் பதிவாகியுள்ள ஔவையின் நனவிலிமன அனுபவங்களும் நனவிலி உணர்வுவழிப் புலனாகும் ஔவையின் பெண்மொழி வெளிப்பாடும் இங்குக் கோடிட்டுக் காட்டப்படுகின்றன. மேலும் இதனுடன் தொடர்புடைய ஆண்பாற் புலவர் பாடல்களில் வெளிப்படும் ஆண்மொழிப் புலப்பாடும் ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது

நற்றிணை (371, 381, 390,394), குறுந்தொகை (15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388), அகநானூறு

(11, 147,273, 303) ஆகியவற்றிலுள்ள ஔவையாரின் அகப் பாடல்கள் மட்டும் இவண் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இப்பாடல்கள் 1) அறத்தொடு நிற்றல், 2) பிரிவிடை மெலிந்து கூறியது, 3) பிரிவிடை ஆற்றாது கூறியது, 4) நெஞ்சுக்குக் கூறுதல் , 5) குறியிடம் தவிர்த்தல், 6) வரைவு கடாஅயது, 7) பருவம் கண்டு ஆற்றாத நிலை 8) பரத்தையிற் பிரிவின் பொழுது ஆகிய சூழல்களில் அமைந்துள்ளன. தலைவி, தலைவன், தோழி, பரத்தை ஆகிய கூற்றுக்களில் ஔவையின் பாடல்கள் அமைந்துள்ளன. இவற்றைப் பின்வரும் பட்டியல் விளக்குகிறது.

இத்தகு சூழல்கள் தான் அகமன உணர்வுகளை வெளிக் கொணர-உதவும் வாயில்கள் ஆகும். இவையே மொழி உருவாக்கத்திற்கும் தூண்டுகோல்களாக அமைகின்றன என்பதை மனத்தில் கொள்ள வேண்டும். காதல் உறவினால் உடம்பில் எழும் மெல்லிய உணர்வு, மெல்லிய உணர்வினால் உடம்பில் எழும் மாற்றம், அம்மாற்றத்தினால் ஏற்படும் நனவிலி மன வருத்தம், வருத்தத்தின் வடிகாலான ஆழ்மன விருப்பங்களை வெளிப்படுத்தும் முறை என்ற நிலைகளில் ஔவையாரின் நனவிலி மன அனுபவங்களைப் பாடல்களில் உணர முடிகிறது.

## மெல்லிய காமத்தின் இயல்பும் உணர்வு வெளிப்பாடும்:

மலரின் மெல்லிது காமம் என்பர். மெல்லியலார் தம் காமத்தியல்பை, உள்ளத்து வேட்கையை வெளிப்படையாகச் சொல்லக் கூடாது என்பது சங்க மரபு. ஆனால் ஔவையார் அவ்வாறு காதல் உணர்வை வெளியே கூற இயலாது. மறைத்து வைத்ததினால் எழும் உணர்வின் திறத்தை, காமத்து மிகுதியை

*'நுண்ணிதின் இயைந்த காமம்'* (அகம். 303)

என்கிறார். தலைவனைத் தலைவி[1] என்றும், எந்நிலையிலும் குறைத்துச் சொல்ல மாட்டாள். தலைவன் தன்னை விட்டுப் பிரிய மாட்டார் என்று கூற மனம் வராது. நின்ற சொல்லர்; நீடுதோறு இனியர்... என்றும் என் தோள் பிரிவு அறியலரே (நற்.1) என்று தான் தலைவனின் வாய்மைப் பண்பைக் கூறுவாள். ஔவையார் பாடலில், தலைவிக்கு நிகழ்ந்த தலைவனின் பிரிவு; காம நோயின் அழுத்தம் இவற்றைத் தாங்க முடியாத தலைவி தன்னை விரும்பியவர் சான்றோர் அல்லர் என்று கூறுகிறாள். காமம் தன்னை வருத்தும் நிலையினை,

| வரிசை எண். | பாடல்எண்/ இலக்கியம் | திணை | கூற்று நிகழ்த்துபவர் | கூற்று நிகழும் சூழல் | வெளிப்படும் உணர்வு |
|---|---|---|---|---|---|
| 1. | 15-குறுந்தொகை | பாலை | செவிலி/ | அறத்தொடு நிற்றல் | மடந்தை நட்பும் அலரும் |
| 2. | 23-குறுந்தொகை | குறிஞ்சி | தோழி | அறத்தொடு நிற்றல் | களவு வெளிப்படுதல் |
| 3. | 28-குறுந்தொகை | பாலை | தலைவி | வரைவிடைஆற்றாது உரைத்தல் | தன்னைத் தானே வருத்திக் கொள்ளுதல் |
| 4. | 29- குறுந்தொகை | குறிஞ்சி | தலைமகன் | நெஞ்சுக்குக் கூறுதல் | தலைவியைக் காணவந்து இரவுக்குறி மறுக்கப்பட்டு வருந்தும் நிலை |
| 5. | 39- குறுந்தொகை | பாலை | தலைவி | பிரிவிடை ஆற்றாது கூறுதல் | தலைவன் பிரிவிற்காக வருந்தும் நிலை |
| 6. | 43-குறுந்தொகை | பாலை | தலைவி | பிரிவிடை மெலிந்து கூறுதல் | அல்லல் நெஞ்சம் வருந்தும் நிலை |
| 7. | 80- குறுந்தொகை | மருதம் | பரத்தை | தலைமகனைப் பிரிந்த பரத்தை கூறுதல் | தனக்கே உரியவனாகத் தலைவனைக் காத்துக் கொள்ளும் உணர்வு வெளிப்படல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | 91-குறுந்தொகை | மருதம் | தலைவி | பரத்தை மாட்டு வந்த தலைவனைக் கூறியது | தலைவன் பிரிவிற்காகத் தன் நெஞ்சை இடித்துக் கூறித் தனக்குத்தானே வருந்தும் நிலை. |
| 9. | 99-குறுந்தொகை | முல்லை | தலைவி | பொருளீட்டுச் சென்ற தலைமகன் நம்மை நினைத்திருப்பாரோ என்று வருந்தும் நிலை | காமத்து மிகுதி கூறல். |
| 10. | 102-குறுந்தொகை | நெய்தல் | தலைவி | பிரிவிடை ஆற்றாது உரைத்தல் | காமத்து மிகுதி கூறல் |
| 11. | 158-குறுந்தொகை | குறிஞ்சி | தலைவி | தலைவன் இரவுக்குறி வந்துழிக் கூறியது | துணையிலாப் பெண்டிரின் நிலை |
| 12. | 183- குறுந்தொகை | முல்லை | தலைவி | பருவ வரவின் ஆற்றாது உரைத்தல் | பாலை வழியில் மானைப் பார்த்து நம்மை நினைப்பாரோ என்று தன் நிலைக்குத் தானே வருந்திக் கூறுதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | 200-குறுந்தொகை | நெய்தல் | தலைவி | பருவ வரவின் ஆற்றாது | குறித்த பருவத்தில் வாராது நம்மை மறந்தாலும் நாம் மறக்க மாட்டோம் என்று தனக்குத் தானே வருந்திக் கூறியது. |
| 14. | 364- குறுந்தொகை | மருதம் | பரத்தை | இற்பரத்தைக் கூற்று | பெண்களுக்குள்ளேயே ஒரு பரத்தை இன்னொரு பரத்தையைப் புறம் கூறும் நிலை |
| 15. | 388-குறுந்தொகை | பாலை | தோழி | செலவழுங்குவித்தல் | தலைவனுடன் இருப்பது தான் தலைவிக்கு இன்பம் |
| 16. | 371-நற்றிணை | முல்லை | தலைவன் | வினைமுற்றி மீளும் நிலையில் சொல்லியது | பருவம் வந்தவிடத்து தலைவி வருந்துவாள் என்று அவளைப் பார்க்க விரைந்து வரும் மனநிலை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 17. | 381-நற்றிணை | முல்லை | தலைவி | பருவ வரவின் கண் ஆற்றாளாகிய தலைவி கூறியது | கார்காலம் வந்தும் தலைவன் வாராததினால் நடுங்கல் ஆனா நெஞ்சம் எப்படித் தாங்கும் என்றது. |
| 18. | 390-நற்றிணை | மருதம் | தலைவி | தலைவி தோழிக்குச் சொல்லியது போல வாயிலாகப் புக்க, தலைவனுக்குச் சொல்லியது | விழாக்காலத்து ஒருத்தி புனைந்து தலைவனைக் காண வருகிறாள். அவளை விட்டால், என் நலன் அழியும். ஆதலால் தலைவனைக் காக்க வேண்டும் என்ற உணர்வு வெளிப்படல். |
| 19. | 394-நற்றிணை | குறிஞ்சி | தோழி | வன்சொல்லால் குறை நயப்பித்த தோழி தனித்துக் கூறியது. | |
| 20. | 11/ அகம் | பாலை | தலைவி | தலைமகன் தலைவியைப் பிரிந்த இடத்து ஆற்றுவான் என்று கூறியது | தலைவன் பொருள் வயிற் பிரிந்தபொழுது தலைவனை எதிர்பார்த்து ஆற்றி இருத்தல். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 21. | 147 அகம் | பாலை | தலைவன் | செலவு உணர்த்திய தோழிக்குத் தலைவன் சொல்லியது | பிரிந்தோர் பிரிவுக்கு உண்ணா உயக்கமொடு மருந்து பிறிதில்லை என்று வருந்திக்கூறல். |
| 22. | 277/ அகம் | பாலை | தலைவி | பிரிவின்கண் தலைமகன் அறிவு மயங்கிச் சொல்லியது | நம் மனத்தின் மென்மை அறிவாரா-அலர் தூற்றவும் இன்னும் வரவில்லை என்று தலைவி வருந்தும் நிலை |
| 23. | 303 அகம் | பாலை | தலைவி | பிரிவிடை வேட்கை மீதுற்றுத் தலைவி தன் நெஞ்சுக்குச் சொல்லியது | பருவம் வந்தவிடத்தும் வராத தலைவன் எதிர் நோக்கி இருக்கும் மட நெஞ்சே, யானும் அவர் சென்ற வழியிடைச் செல்லத் துணிந்து விட்டேன் என்று ஆற்றாமை மீதுற்ற நிலையில் வருந்துவது. |

*'உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது*
*இருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி*
*வான்தோய்வற்றே காமம்'* (குறுந். 102)

என்கிறார். மறைத்து வைத்ததினால் அவ்வுணர்வு பெருகியதே அன்றிக் குறையவில்லை. அத்துடன் அது அலராகப் பெருகியது; ஒரு பெண் தன் உள்ளத்து உணர்வுகளைப் பொத்தி வைக்க முடியாது என்று ஔவையார் சொல்லாமலே சொல்லி விடுகிறார். காமம் பெருகினால் அடக்க முடியாத நெஞ்சத்து உணர்வுகளை மெய்ம்மலி காமம் வான்தோய்வற்றே காமம் (குறுந். 102) அனைப்பெருங் காமம் (குறுந். 99) என்று நெஞ்சத்தின் உள்ளே உறைந்து கிடக்கும் உணர்வுகளைக் கோடிட்டுக் காட்டி விடுகிறார்.

தனது உள்ளத்து வேட்கை உணர்வுகளை வெளிப்படையாகப் பெண்கள் சொல்லக் கூடாது. ஆனால் ஔவையார் இங்கு மரபை மீறிச் சொல்லும் திறன் உணரத்தக்கது. உள்ளத்து உணர்வின் உண்மை நிலையானது உணர்ந்தவாறு அப்படியே இங்குக் கூறப்பட்டுள்ளது.

## ஆண்பாற் புலவர் பாடல்களில் காமம் பற்றிய குறிப்பு

குறுந்தொகையில் பரணர் பாடிய 16 பாடல்களில் ஒரு பாடலில் தான் (குறுந். 120) காமம் பற்றிய குறிப்பு வருகிறது. அதுவும் பொருளில்லாதவன், பொருளை விரும்பினது போன்று தலைவியிடம் இன்பம் துய்த்தலை விரும்பியது.

*'இல்லோன் இன்பம் காமுற்றாங்கு*
*அரிது வேட்டனையால் நெஞ்சே'* (குறுந். 20)

என்று தலைவன் தன் நெஞ்சுக்கு வருந்திக் கூறுகின்றான்.

நற்றிணையிலும் பரணர் பாடலில், தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறும்போது, இடி மின்னலுடன் கூடிய மழை வரும் இரவுப் பொழுதில்,

*'ஆராக் காமம் அடூஉ நின் றலைப்ப'* (அகம். 322)

மலையிலிருந்து வீழ்ந்திறப்பார் போல் நடுங்கி, கோலால் அடிக்கப்பட்ட பாம்பு போல, துணையின்றி வாடுகின்றனையே என்று கூறும் நிலை உள்ளது. பரணர் பாடலில் ஆராக்காமம் என்று 'காமத்தின் வேட்கை' கூறப்பட்டுள்ளது. ஆனால் ஔவையார் பாடல்களில் தலைவி

கூற்றுக்களாக வரும் மெய்ம்மலி காமம், வான்தோய்வற்றே காமம், உள்ளின் உள்ளம் வேமே என்று காமத்தின் மிகுதியைச் சொல்லும் இடங்களில் 'காமத்தினால் எழுந்த உள்ள ஆழ்மனம் வருத்தம்' விஞ்சி நிற்கின்றது.

## காதல் உணர்வும் உடல் மாற்றமும்

ஔவையார் தம் பாடல்களில் பெண்களின் உள்ளத்து எழும் காதல் உணர்வின் தன்மை சொல்லப்படுகிறது. அத்துடன் நில்லாது அக்காதல் உணர்வு எழும் சூழல் உடலில் எழும் பசலை நோயின் தன்மை உடல் உறுப்புக்களின் மாற்றம் முதலியவையும் கூறப்பட்டுள்ளன. இங்கு பெண்ணியவாதிகள் பெண்ணெழுத்துக் களைப் பற்றிச் சொல்லும் பொழுது ''**தம் உடம்பில் உழும் மெல்லிய உணர்வுகளுக்கும் செவி சாய்க்க வேண்டும். உடம்பில் வெளிப்படும் மெல்லிய அதிர்வுகளையும், மறைக்காது, எவ்விதத் தணிக்கை உணர்வுமின்றி, வெளிப்படுத்தும் வண்ணம் அமைய வேண்டும்**'' என்று கூற்று ஒப்பிடத்தக்கது. ஔவையார் தன்நிலை மயங்கிக் கூறும் கூற்றில் தலைவனைப் பிரிந்த வருத்தமும் பருவ வரவின் கண் எழும் உள்ளத்து உணர்வுகளுக்குமிடையில் உடல் மாற்றம் அடைந்த நிலையினை,

*'சென்ற நாட்ட கொன்றைஅம் பசுவீ*
*நம்போல் பசக்கும் காலை'* (குறுந். 183) என்றும்

*'முதிர்ந்த சிலம்பின் எரிந்த வள்ளியின்*
*புறனழிந்து ஒலிவரும் தாழிருங் கூந்தல்'*
*(நற். 295)* என்றும்,

*'தோளும் தொல்கவின் தொலைய நாளும்*
*பிரிந்தோர் பெயர்வுக்கு இரங்கி'* *(அகம். 148)*

என்றும் வருந்திக் கூறுகின்றார். தலைவன் பிரிவால் தன் உடம்பில் தோன்றிய நோயின் இயல்பை

*'முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுலை'*
(அகம். 273)

என்கிறார். ஆண்டாளின் பேச்சு இங்கு ஒப்பு நோக்கற்பாலது.

*'அவரைப் பிராயம் தொடங்கி எழும்*
*ஆர்த்தெழுந்த என் தடமுலைகள்*
*கண்ணீர்கள் முலைக்குவட்டில துளிவரச் சேர்வேனை*
*பெண்ணீர்மை யீடழிக்கும் இது ஓர் பெருமையே'*
(திருவாய்)

என்ற ஆண்டாளின் பேச்சு, மரபு மீறிய பெண்ணின் முதல் பேச்சு என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்.

*'அலமரல் அசைவளி அலைப்பயென்*
*உய்வுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே'* (குறுந். 28)

என்று ஔவையார் வருத்தத்திற்கும்,

*'காமத்தீயுள் புகுந்து கதுவப்பட்டு இடைக்காங்குல்*
*;மத்தோர் தென்றலுக்கு இலக்காய் நானிருப்பேனே'*
(திருவாய்)

என்ற ஆண்டாளின் வருத்தத்திற்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. ஆண்டாளின் பாடல்களில் அகப்பொருள் மரபுகள் படிந்து கிடக்கின்றன என்று சொல்லப்படுகின்றது. 'ஆண்டாளின் மரபு மீறிய பேச்சுக்களைப்போல் ஔவையாரும் தன் பாலியல் உணர்வுத் தளத்தில்' நின்று பேசி மீறியுள்ளார்; ஆண்டாளின் பேச்சுக்கு இது வித்தாக உள்ளது என்று இங்கு எண்ண இடமுண்டு.

ஆண்பாற் புலவர் பாடல்களிலும் பெண்களின் உடல் உறுப்பு பற்றிய குறிப்புகள் மிகுதியாக உள்ளன. மகட்போக்கிய தாய் சொல்லிய சூழலில், குடவாயிற் கீரத்தனார்,

*'கூழையுங் குறுநெறிக் கொண்டன முலையும்*
*சூழிமென்முகஞ் செப்புடன் எதிரின*
*பெண்டுனை சான்றனள்'* (அகம் . 315)

என்று பெண் உறுப்புக்களின் உருத்தோற்றமும் சுட்டப் பட்டுள்ளது. செலவுணர்த்திய தலைமகற்குத் தோழி செலவழுங்கச் சொல்லிய தாயங்கண்ணனார்,

*'பொன்வீ வேங்கைப் புதுமலர் புரைய*
*நன்னிறத் தெழுந்த சுணங்கணி வனமுலை'* (அகம். 319)

என்றும்

*'தெறித்த, கூந்தல், ஆகத்தரும்பிய சுணங்கு,*
*அம்புவிடக் கண்ணுருத் தெழுதருமுலை'* (அகம் . 150)

என்று ஆண்பாற் புலவர் பாடல்களில் பெண்களின் உறுப்புக்கள் பற்றிய வருணனை குறிப்பாக இருக்கிறது. ஓர் ஆணுக்கு அவனை ஈர்த்து மிகுதியான வருத்தத்தைக் கொடுத்த பெண்ணின் உறுப்பு வர்ணனை தனிப்பட இருப்பதை ஆண்பாற் புலவர் பாடல்களில் உணர முடிகிறது. ஆனால் பெண்பாற் புலவர் பாடல்களில், குறிப்பான வர்ணனையை விட பிரிவின் வருத்தத்தால் அவ்வுணர்வின் எதிரொலியாக அமையும் உடல் மாற்றத்தைச் சுட்டும் உறுப்பு வர்ணனை மிகுதியாக உள்ளது என்று சொல்ல இடமுள்ளது. காம உணர்வில் உடல் மெலிந்தநிலைதான் ஔவையார் பாடல்களில் மிகுதியாகப் பேசப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் ஆண், பெண் புலவர்களின் உடல் பற்றிய எழுத்துக்கள் எச்சூழலில் எப்படி வெளிப்படுகின்றன என்ற ஒப்பீட்டு நிலையில் முழுமையாக ஆராயும்போது தான் ஆண்- பெண் உடல் எழுத்து குறித்து ஒரு முடிவுக்கு வர இயலும்.

பெண்களின் கண்கள் குளிர்ச்சி பொருந்தியதுதான். ஆனால் ஔவையார், பார்வைக்கு அழுததினால் கண்கள் நீர்வார் நிகர் மலர் கடுப்ப (அகம். 11) போலாகியது என்கிறார். பொதுவாகப் பெண்களின் அழகான கண்களைவிட அழுத கண்கள், நீர் நிறைந்த கண்கள், இமை தீய்ப்பன்ன கண்ணீர் தாங்கிய கண்களைப் பற்றிய குறிப்புகள் இருபாற் புலவர் பாடல்களிலும் உள்ளன. இது சமுதாயத்தில் பெண்கள் ஒருவித வாழ்க்கை எதிர்பார்ப்புடன் இருந்த நிலையைத் தான் உணர்த்துகிறது.

## வருத்தத்தின் மிகுதியும் மரபுவழிப்பட்ட பெண்ணின் மன உணர்வும்:

ஔவையார் பாடல்களில் நனவிலி மன உணர்வின் வருத்தங்கள் மிகுதியும் வெளிப்படுகின்றன. இவ்வருத்தங்கள் குவிந்த இடமான நெஞ்சின் இயல்பினை ஔவையாரின் பல பாடல்களில் உணர முடிகின்றது. ஔவைக்கு உவமையும் உருவகமும் வருத்தத்தின் மிகுதியைப் புலப்படுத்த ஓடிவரும் மொழித் திறன்களாகும். நனவிலி மன உணர்வின் வருத்தங்களை உவமை உருவகம் மூலம் கூறல், முரண்

சொற்களில் அமைத்தல், ஆண், பெண் மன வேறுபாடுகளைக் கூறல் தன்னிலைக்குத் தானிரங்கும் நிலை, தன்னையே வருத்திக் கொள்ளுதல் போன்ற நிலைகளில் வெளிப்படுத்தும் பொழுது இன்னும் சிறக்கிறது.

## உவமை உருவகமும் நெஞ்சத்து வருத்தத்தின் மிகுதியும்:

ஔவையார் பாடிய அகப்பாடல்கள் மொத்தம் 23 ஆகும். இவற்றுள் உவமைகள் எடுத்தாளப்படும் இடங்கள் பதின்மூன்றாகும். இரண்டு உவமைகள் மழை வரும் இயல்பைச் சுட்டுகின்றன. வரலாற்று உவமைகள் இரண்டு இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்றில் தலைவன் இயல்பு சொல்லப்படுகிறது. மற்றுமொன்றில்

*'நல்லூர்க் கோசர் நன்மொழி போல*
*வாயாகின்றே தோழி'* (குறுந்.15)

என்று தலைவியின் அலரச்சம் வெளிப்படுகிறது. எஞ்சிய ஒன்பது உவமைகளும் பெண் பேச்சாக, பெண்ணின் மனக்குரலாக அமைகின்றன. இவற்றில் தலைவியின் மனவருத்தம் தம்மையும் மீறி வெளிப்படும் நிலையினை உணர முடிகிறது.

'சென்ற நாட்ட கொன்றையம் பசுவீ
நம்போல பசக்கும்' (குறுந். 102)

என்று குறித்த பருவத்திலும் தலைவன் வராத நிலையையும், தன் எதிர்பார்ப்புத் தன்மையையும் பிரிவினால் கொன்றையும் பூ ப் போல மேனி பசலை பாய்ந்த தன்மையினையும் ஔவையார் வருத்தத்துடன் குறிப்பிடுகின்றார்.

*'பொழுதுபடப்*
*படர்கொள் மாலை படர்ந்தாங்கு*
*வருவர் என்றுணர்ந்த மடங்கெழு நெஞ்சம்'* (அகம்.300)

*'வேர்கிளர் மாஅத்து அம்தளிர்போல*
*நடுங்கல் ஆனா நெஞ்சமொடு'* (நற்.381)

*'கடும் பகட்டியானை நெடுந்தோர் அஞ்சிக்*
*கொன்முனை இரவூர் போல*
*சிலவாகுக நீ துஞ்சு நாளே'* (குறுந். 91)

என்ற உவமைகளில் தலைவன் வரவை எதிர்நோக்கி எதிர்நோக்கி வராததினால் ஏமாற்றம் அடைந்திருக்கும் நெஞ்சத்தின் இயல்பைத் தான் நடுங்கும் நெஞ்சம், மடங்கெழு நெஞ்சம் என்கிறார். இறுதியில் வருத்தம் மீக்கூரப்பெற்று, குருவிகள் எல்லாம் காலையில் சென்று இரைதேடித் துன்பம் தரும் மாலைப்பொழுதில் வந்ததுபோல் தலைவனும் வருவான் என்று எண்ணினாள். ஆனால் வரவில்லை. ஆதலால் அறியாமை பொருந்திய நெஞ்சே! நீ ஒன்றை உணர வேண்டும். நானும் அவரைத் தேடி, அவர் சென்ற வழியிலேயே செல்ல மனம் உறுதிப்பட்டு விட்டேன் என்கிறார். இதே நிலையைத் தான் இன்னுமொரு பாடலில்,

*'நெடுபடு கவலை நிரம்பி நீளிடை*
*வெள்ளி வீதியைப் போல நானும்*
*செலவு அயர்ந்திசினால் யானே'* (அகம் . 147)

என்று, தானும் வெள்ளி வீதியாரைப் போல வெளியே தேடிச் செல்லத் துணிந்துவிட்டேன் என்று குறிப்பிடுகின்றார்.

தன்மேனி வருத்தத்தைச் சொன்னவர், தன் இளம் பருவ மேனியின் ஆற்றலை, தோழியின் கூற்றாக,

*'களிமடைக் கள்ளின் சாடி அன்னஎம்*
*இளநலம் இற்கடை ஒழியச்*
*சேறும் வாழியோ முதிர்கம் யாமே'* (நற். 295)

என்கிறார். கள்மயக்குவது போன்று, மயக்கம் தரும் தன் இளமை நலத்தைக் குறிப்பிட்டவர். அடுத்த அடியிலேயே ''சேறும் வாழியோ! முதிர்கம் யாமே!'' என்று இளமை நலம் முதிர்ந்தாலும் யாம் சாவோம் தவிரப் பிறிதொரு பேச்சுக்கு உடன்படோம் என்று முரண்பட்ட சொற்களின் அமைப்பின் மூலம் பெண்ணின் மன உறுதியைக் குறிப்பிடுகின்றார். ஆடவன் தன்னிலையிலிருந்து எவ்வளவு தான் பிறழ்ந்து சென்றாலும், அவனை அப்படியே ஏற்றுக் கொண்டு தன் மனத்திலிருந்து நீங்காது அவனுக்காகவே வாழும் மரபுவழிப்பட்ட பெண்ணின் மனப்பதிவுகளை இங்கு உணர முடிகிறது.

## அன்பின் உண்மையும் நடுங்கும் நெஞ்சமும் - செயல்முரண்

பிரிவிடை ஆற்றாத தலைவியின் துயரை, ஔவையார் அருந்துயர் உழத்தல் (நற்.381) என்கிறார். பிரிவினால் சாகாது ஏன்

இருக்கிறேன் என்றால், தலைவன் மீதுள்ள அன்பினால் ஆகும் என்று சொன்னவர், உடனே கேட்கிறார்; அவ்வாறு தலைவனை விட்டுப் பிரிந்து வாழ மனஉறுதி உள்ளது. ஆனால்,

*'கரைபொழுது இழிதரும் கான்யாற்று இடுகரை*
*வேர்கிளர் மாஅத்து அம்தளிர் போல*
*நடுங்கல் ஆனா நெஞ்சம்'* (நற்.381)

கலங்குகிறதே. யான் எங்ஙனம் தாங்குவேன். தலைவன் மீதுள்ள அன்பும், பிரிவுத்துயரும் இங்கு அழுத்த மனம் தாளாது, துயருகிறதே; என் செய; என்று வருந்துகிறார். இவ்வாறு ஔவையார், உடன்பாடு - எதிர்மறை, என்ற நிலையில், பாடலில் செயல்களின் நிகழ்வுகளை முரண்பட வைத்தும் தன் நெஞ்சத்து வருத்தத்தை ஆழ்மன இயல்புகளை அழகாக எடுத்துக் காட்டுகிறார். தன் அறிவுக்குக் கட்டுப்படாத நெஞ்சின் இயல்பினை 'மடங்கெழு நெஞ்சம்' (அகம். 147) என்று சொல்லித் தனக்குத் தானே வருந்துகிறார். 'அருந்துயர் உழத்தல்' (நற்.381) 'உண்ணா உயவு நோய்' (நற்.390) 'நடுங்கல் ஆனா நெஞ்சம் (அகம் 273) 'அசைவற்ற நெஞ்சத்து உயவுநோய்' (303) என்ற தொடர்கள், தலைவனைப் பிரிந்த தலைவியின் கடுந்துயரைப் புலப்படுத்தும் நிலையில் குறிப்பிடத்தக்கன.

## தன்நிலைக்குத் தானே இரங்குதலும் தன்னைத் தானே வருத்திக் கொள்ளுதலும்:

தன் ஆழ்மன விருப்பத்தை வெளிப்படுத்தும் இடங்களில், மரபையும் மீறிவிடத் துடிக்கும் உள்மன உணர்வுகளையும், தன் நிலைக்குத் தானே இரங்கும் நிலையினையும் ஔவையார் பாடல்களில் உணரமுடிகிறது. முற்றிலும் மனமும் மரமும் இணைந்த உருவக அமைப்பிலேயே தன் நிலையைச் சொல்லி வருந்தும் இடம்' (அகம். 273) இவண் குறிப்பிடத்தக்கது.

மரத்தில் தளிர் பரவுவது போன்று மனத்தில் ஆராக்காதல் பரவப் புலவர் சொன்ன நாணம் எல்லாம் கடந்த நிலையில் மரமாகி, நெஞ்சமெல்லாம் நாணம் மறையக் காதல் மறைந்தது; மரக்கிளைகள் போன்று அம்பல் ஊரில் பரவியது; அரும்புகள் போன்று அலர் பரவ, பனிபடு நாளில் நலம்கவர் பசலை நலிய, நம்துயர் அறியார் கொல்லோ;

என்று வருந்துகிறார். காதலால் நாணம் இழந்த நிலையை நாணிய பெருமரம் என்கிறார். ''துயரம் தீர்ப்பவர் யார்கொல்'' 'அளியதாமே என் நெஞ்சு'' என்றும் 'கொல்' என்ற அசைச் சொற்களின் வழி மனத்தவிப்பினைச் சொல்லித் தன் நிலைக்குத் தானே வருந்துகிறார்.

*'நம்மனத்து அன்ன மென்மை இன்மையின்*
*நம்முடை உலகம் உள்ளார்கொல்லோ*
*யாங்கு என உணர்கோ, யானே'* (அகம். 273)

என்று '**மென்மை தவிர்ந்த ஆண்மனம்**', '**மென்மை நிறைந்த பெண் மனம்**' என்று இரண்டு மனநிலைகளை ஒப்பிட்டு, அனைத்துப் பெண்களின் சார்பாக, பெண்கள் உலகை ஆண்கள் அறியாரோ! என்று தவிக்கின்றார்.

*'தலைவனைப் பிரிந்த நிலையில் ஆற்றாமை மீதூர,*
*உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்'* (குறுந்.42)

என்று அப்பொழுதாவது நம் நினைவு அவருக்கு வராதா என்றும் அல்லல் நெஞ்சம் அலமலக்குறும் (குறுந். 43) தன் வருத்தத்தின் மிகுதியைக் கூறும் இடத்திலும் தன் நிலைக்குத் தானே வருந்தும் தன்மையினை, தன் துயரினை வெளிப்படுத்துகின்றார்.

*'கார்ப்பருவம் வந்தவிடத்தும் தலைவன் வராதிருக்க*
*ஆற்றாமை மீதுற்ற நிலையில், இழிதரு*
*புனலும் வாரார், தோழி; நம்மை மறந்திருந்தாலும்*
*மறந்தோர் மன்ற; மறவாம் நாமே*
*முன்வரல் ஏமம் செய்து'* (குறுந். 200)

என்று நம்மை விட்டு அகன்றாரை நாம் மறக்கமாட்டோம் என்றும்

'பலவாகுக நெஞ்சில் படரே
. . . . . . . . . . . . . . . . . . . . .
*சிலவாகுக நீ துஞ்சு நாளே'* (குறுந்.91)

என்று தன்னைத் தானே வருத்திக் கொள்ளும் பெண்மன இயல்புகளைச் சுட்டுகிறார். குடும்பத்திற்காகவோ, அல்லது அன்பு நிறை உள்ளம் கொண்ட ஒருவருக்காகவோ துன்பத்தை ஏற்றுக் கொண்டு தன்னைத்

தானே வருத்திக் கொள்ளுதல் பெண் இயல்பு என்று ஆண் சமுதாயம் வரையறுத்த வரையறைச் சட்டத்திலேயே நின்று ஔவையார் தன்னைத்தானே வருத்திக் கொள்ளும் நிலையினையும் இங்கு உணர முடிகிறது.

இவற்றிற்கு எல்லாம் உச்சகட்டமாக, இவரது பாடல்கள் அனைத்திலும் தொனிக்கும் ஒலி

*'துணையிலர் அளியர், பெண்டிர்' (குறுந். 158)*

என்று துணையின்றித் தவிக்கும் பெண்ணின் மனக்குமுறலே ஆகும். துணையின்றித் தனித்து நின்று தவிக்கும் பெண்ணின் உருவத்தைத் தான் ஔவையாரின் உருவகமாக இவரது பாடல்களில் உணர முடிகிறது.

## நனவிலி மனவிருப்ப வெளிப்பாடும் நனவிலி மனச் செயல்பாடும்

ஒவ்வொரு பெண்ணிற்கும் தன் காதலனுடன் சேர வேண்டும். தன் கணவனுடன் சேர்ந்து இன்பமுடன் வாழ்தல் வேண்டும் என்பதே ஆழ்மன விருப்பமாகும். அவ்வாறு எழும் மன உணர்வுகளைத் தலைவி, தலைவன் முன் வெளிப்படையாகச் சொல்லுதல் தலைவிக்கு இல்லை என்பதைத் தொல்காப்பியம்

*'தன்னுறு வேட்கை தலைவன் முன் கிளத்தல்*
*எண்ணுங்காலைக் கிழத்திக்கு இல்லை' (களவி. 1064)*

என்று தலைவி கூற்றாகச் சொல்கிறது. ஆனால் இங்கு ஔவையார், தலைவி கூற்றாக, தன் ஆழ்மன விருப்பத்தை வெளிப்படுத்தும் முறை மனத்தில் நிறுத்தத்தக்கது. தலைவன் பொருள் வயிற் பிரிந்த விடத்து எவ்வாறு ஆற்றுவாய் என்பதற்கு, எவ்வாறாகினும் நான் ஆற்றி இருப்பேன் என்று பதிலிறுக்கிறார். அவ்வாறு பதிலிறுத்தாலும் வேகமாக எழும் தன் மன உணர்வினைச் சொல்ல வருபவர்,

*'மெய் புகுவ அன்ன கை கவர் முயக்கம்*
*அவரும் பெறுகுவர் மன்னே' (அகம். 11)*

என்று ஆற்றி இருத்தலின் எதிர்பார்ப்பைச் சொல்லி விடுகிறார். இங்குத் தன் விருப்பத்தை வெளிப்படையாகச் சொல்ல இயலாது, ஆணின் மரபு

சார்ந்த போர்வைக்குள் ஔவையும் பதுங்கிக் கொள்ள நேரிடுகிறது. ஆழ்மன விருப்பத்தைச் சொல்வதின் வழித் தன் பிரிவுத்துயருக்கு வடிகால் தேடும் இடமாக இது உள்ளது.

'யாணர் ஊரன்' என்றால் புதுவருவாய் உடைய ஊரினை உடையவன் என்று பொருள். இங்கு ஔவை இல்பொருளை உள்ளடக்கி, தலைவனின் புதுவருவாய் போன்று இளமை பொருந்திய புதுப்பெண்களைத் தலைவன் கண்டால்

*'யாணர் ஊரன் காணுநன் ஆயின்*
*வரையாமையோ அரிதே'* (நற்.390)

வரைவதில் வல்லவன் என்று ஆணின் இயல்பினைச் சொல்கிறார். எவ்வாறாகினும் தலைவனிடம் கோபம் கொள்ளாது அவனைத் தன்னகத்தே தக்க வைத்துக் கொள்ளவேண்டும்; இல்லாவிடில் அளியதோழி, தொலையுந பலவே என்று வருந்தி வார்த்தையாடுகின்றார். இது பரத்தையர் கூற்றாக இருந்தாலும் அதுவும் ஒரு பெண்ணின் மனக்குரலே ஆகும். இங்கும் மங்கலக் காரியங்கள் உட்பட்ட அனைத்து நலன்களும் தலைவனில்லாவிடில் பெண்களுக்குச் சமுதாயத்தில் மதிப்பு இல்லை என்று ஒலிக்கும் ஒரே மாதிரியான தவிப்புக் குரலை, நோய்க்குரலையே இங்கு உணரமுடிகிறது. தந்தைவழிச் சமுதாய அமைப்பிற்குள் இருந்து பேசும் பெண்குரலாக ஔவை மொழி இருப்பதால், ஜூலியட் மிச்சல எடுத்துக் காட்டுவதுபோல், இம்மொழி வெளிப்பாட்டை ஆண்மரபு சார்ந்த பெண்மொழி[1] (Woman's Masculine Language)எனலாம்.

## முடிபுகள்

தலைவன் பிரிவால் வருந்தி இருக்கும் ஆற்றாமை மீதுற்ற தலைவியின் மனநிலையே பாடல்களில் விஞ்சி நிற்பதையே உணர முடிகிறது.

ஆண்பாற் புலவர் பாடல்களில் தலைவியின் உறுப்புநல வர்ணனை, குறிப்பாகச் சுட்டப்படுகிறது. பெண்பாற் புலவர் பாடல்களில் தலைவியின் உறுப்பு நல வர்ணனையில் தலைவன் பிரிவால் தலைவியின் உடம்பில் நிகழும் உடல்நல மாற்றமே சுட்டப்பட்டுள்ளது.

ஆண்பாற் புலவர் பாடல்களில் காம உணர்வின் வேட்கை மிஞ்சி நிற்கிறது. பெண்பாற் புலவர் பாடல்களில் காம உணர்வின் வேட்கையுடன் மன வருத்தத்தின் மிகுதியும் சுட்டப்பட்டுள்ளன.

ஔவையார் தன்னுடைய காம உணர்வுகளை அதனால் உடலில் எழும் மாற்றங்களை வெளிப்படையாகச் சொல்கின்ற பொழுது, மரபை மீறும் தொனி காணப்படுகிறது. எனினும், துயரங்களை எல்லாம் தன் மீது ஏற்றிக்கொண்டு தன்னைத்தானே வருத்திக் கொள்ளும் நிலை, நம்மை மறந்தாலும் நாம் அவரை மறக்கமாட்டோம் என்று தவிக்கும் நிலை, இளமை நலம் முடிந்து முதிர்நிலை வந்தாலும் காதல் உணர்வின் மாறா நிலைப்பாடு என்ற குரல் எல்லாம் ஆண் சமுதாய மரபிற்குள் நின்று சொன்னதையே சொல்லும் நோய்க்குரலாகவே அமைகிறது.

பாடலில் வெளிப்படும் நனவிலி மன வருத்தங்கள், விருப்பங்கள், உடல் மாற்றங்கள் போன்றவை ஔவையின் நனவிலி மன அனுபவங்களாகக் கொள்ளத்தகும்.

பாடல்களின் மொழிப்பதிவின் வழி இளமையில் துணையின்றித் தனித்துத் தவித்து நிற்கும் ஔவையின் உருவத்தை மனத்தில் உணர முடிகிறது.

அத்துடன் இளமை நலம் சான்ற ஔவையாரை, முதியோர் நிலையில் வைத்துப் பார்க்கும் அவலநிலையும் மனத்தில் தொனிக்கிறது.

## குறிப்புகள்

1. Juliet Mitchell, Feminity, Narrative and Psychoca analysis, pp. 100-103

# 6. ஆண்டாள் ஆழ்வார் பாடல்களில் பெண்ணிய உளப்பகுப்பு - பெண்மொழி ஒப்பீடு

பெண்ணின் ஆழ்மன உணர்வுகளை வெளிப்படுத்தும் பெண்ணின் பேச்சையும் நடத்தையையும் பகுத்தாய்ந்து பெண்ணின் அனுபவங்களை வெளிக்கொணர்வது பெண்ணிய உளப்பகுப்பாய் வாகும். இத்திறனாய்வின் முக்கியநோக்கம், சமுதாயம் இதுவரை மரபுவழி உருவாக்கியிருக்கும் பெண்பற்றிய கற்பிதங்களை உடைத்தெறிவதும் அவற்றை அவள் மீறிவர உதவுவதுமாகும். பெண்ணிய உளப்பகுப்பு பெண்ணின் மன அனுபவங்களை வெளிக் கொணர்வதன் வழி பெண்மொழி பற்றிய புரிதல்களை வெளிக் கொணர்வதிலும் அதிகக் கவனம் செலுத்துகிறது. பெண் தான் யார் என்பதை அடையாளம் காட்ட மரபுவழிப்பட்ட கற்பிதங்களை உடைத்து எறிவதற்குப் புதிய சொல்லாடல்களை உருவாக்க வேண்டும். அதற்குத் தன்னைத் தானே தணிக்கை செய்வதிலிருந்து விடுபடவேண்டும். தன் உடம்பை, உடம்பில் எழும் சிறு மாற்றங்களைக் கூட ஒளிவு மறைவின்றி எழுதவேண்டும் என்ற கருத்துக்களை மேலைநாட்டுப் பெண்ணியத் திறனாய்வாள்கள் முன் வைத்துள்ளனர்.

ஆண்டாள் பாடல்களை ஆராய்ந்த பெண்ணியத் திறனாய்வாளர்கள் பலரும் ''தனி ஒருவராக நின்று தான் விரும்பிய நோக்கினை அடையப் புரட்சி செய்த ஆன்மீகப் பெண்ணியவாதி''[1] என்று சுட்டுகின்றனர்; மரபுகளை மீறிப் பெண்ணின் ஆழ்மன உணர்வுகளை அப்படியே வெளிப்படுத்திய பெண்ணின் முதல் பேச்சு[2] ஆண்டாளின் பேச்சு; பக்தி என்ற உணர்வின் வழி அவளது அகமன உணர்வுகள் மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆழ்வார் பாடல்களின் பேச்சமைதியினை அதன் உட்பொருளை விளக்கும்'ஆச்சார்ய ஹ்ருதயம்,

*'ஆண்பேச்சு ஞானத்தின் பேச்சு*
*பெண்பேச்சு பிரேமையின் பேச்சு'*

என்கிறது. அதாவது இயல்பான தன்மையில் ஆழ்வார் ஞானமொழியில் பேசுவதாகவும், விரகதாபத்தில் பேசும்பொழுது பெண்ணாக மாறிப் பேசுவதாகவும் அமையும் என்கிறார் இராமானுஜர். இப்பெண் பேச்சும் 1) காதல் வயப்பட்ட பெண் 2) பெண்ணின் தாய் 3) தோழி என்ற மூன்று நிலைகளில் பேசுவதாக அமையும் என்பர். அதாவது ஆண்பேச்சு அறிவு சார்ந்ததாகவும், பெண் பேச்சு அன்பும் காதலும் சார்ந்ததாகவும் உள்ளது என்பது, சமுதாயம் அமைத்த, எதிர்பார்த்த கற்பிதங்களாகும். ஆண்டாள் பேச்சு இங்குக் காதல் வயப்பட்ட பெண் விரகதாபத்தில் பேசுவதாக அமைந்துள்ளது. திருமங்கை யாழ்வாரின் திருமடல்கள் இறைக்காமத்தைச் சுட்டுகின்றன. இவற்றையெல்லாம் உள்வாங்கிக் கொண்டு பெண்ணிய உளப்பகுப்புத் திறனாய்வாளர்களின் கருத்துக்களின் பின்னணியில் ஆண்டாள், திருமங்கையாழ்வார் பாடல்களின் மொழி வெளிப்பாட்டை ஆராயலாம். பெண்ணின் நனவிலி மன உணர்விற்கும் அவளது மொழி வெளிப்பாட்டிற்கும் இடையிலுள்ள உறவுநிலை வெளிப்பாடானது, ஆணின் (திருமங்கையாழ்வாரின்) படைப்பிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது என்பதையும் காணலாம்.

## ஆண்டாள் பாடல்களின் நோக்கமும் மனத்தின் உறுதிப்பாடும்

ஆண்டாள்தம் திருப்பாவையில், குழுவாக நின்று கண்ணன் காதலும் கைங்கர்யமும் நிறைவேற வேண்டும் என்று வேண்டுகிறாள். வழிபாட்டு முறையைக் கூறுகிறாள். ஆனால் நாச்சியார் திருமொழியில் தான், குழுவாக இருந்த நிலை மறைந்து, ஆண்டாளின் தனித்த மன உணர்வுப் புலம்பல்கள் பதிவாகியுள்ளன. 'மானிடர்க்கென்று பேச்சுப்படின் வாழ்கிலேன்' என்ற நாச்சியார் மொழிப்பதிவு அவளது ஆழ்மன விருப்பத்தின் உறுதிப்பாட்டினையே சுட்டுகிறது. திருவரங்கத்தானை எவ்வாறாகினும் அடையவேண்டும் என்ற நோக்கமும் அவள் உள்மனத்தில் எழுந்த காமவேட்கையும் பக்தியின்

வழி மடைமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சிறுவயதில் தொடங்கிய கண்ணன் பற்றிய வழிபாடு பக்தி வைராக்கியக் காதலாக மலர்ந்து, காமம் மீக்கூர்ந்த கழிபடர் கிளவிகளாக வெளிப்படுகின்றன. நாச்சியார் திருமொழியில் தான், தனது உள்ளத்து வேட்கைகளையெல்லாம் வெளிப்படுத்த இயலா நிலையில் மனமும்மொழியும் ஒன்றிணைய, ஆண்டாளின் தன்னுணர்வு - பாலியல் வேட்கை புலம்பலாகவும் இரங்கலாகவும் வெளிப்படுகிறது. பெண்ணின் மொழிக்கும் நனவிலி மனத்திற்கும் இடையிலுள்ள உறவுகளின் வெளிப்பாடுகளை ஆண்டாள் பாடல்களில் உணரமுடிகிறது.

## திருமங்கையாழ்வார் பாடல்களின் நோக்கமும் மனவெளிப் பாடும்:

திருமங்கையாழ்வார் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் விடக் காம இன்பமே சிறந்தது என்கிறார். அக்காம இன்பத்திலும் இறைக்காமம் பெரிது என்று வலியுறுத்துகின்றார். இறைவன் மீது தலைவி கொண்டது இறைக்காமமேயானாலும் தலைவியின் காமம் மிக்க நிலைதான் இங்கு வெளிப்படுகிறது. எனவே திருமடல்களிலும் வெளிப்படும் பேச்சு, காமம் மிக்க நிலையில் காமம் மீதுற்ற நிலையில் பேசும் பேச்சுக்களேயாகும்.

திருமடல்களில் வெளிப்படும் பேச்சுக்கள் பெண் பேச்சுக்களாக இருந்தாலும், அது ஆணின் படைப்பு வெளிப்பாடாகும். அது ஒரு பெண்ணிடம் ஆண் எதிர்பார்க்கும் சமுதாயக்குரலேயாகும். இந்நிலையில் திருமடல்களில் வெளிப்படும் பெண்பேச்சுக்களை ஆணின் மொழி வெளிப்பாடு எனக்கருதுதல் பொருந்தும்.

ஆனால் திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும் பெண் படைத்த படைப்புக்களாகும். ஆண்டாள் தன் காம உணர்வுகளை இறைமீது கொண்ட இறைக்காமத்தை, தன் ஆழ்மன உள்ளத்துக் காம உணர்வுகளையே தம் படைப்புக்களில் வெளிப்படுத்தியுள்ளார்.

இந்நிலையில் இறைவன் மீது கொண்டுள்ள காமம் மீக்கூர்ந்த உள்ளத்து வெளிப்பாடுகளைச் சொல்வதில் ஆண்மொழிக்கும் பெண்மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை உணர்வதற்கு ஆண்டாள்,

ஆழ்வார் பாடல்கள் இடம் தருகின்றன. மனமே மொழி; மொழியே மனம் என்பர். எனவே மனமும் மொழியும் வெளிப்படும் திறனைப் பின்வருமாறு காணலாம்.

## மரபுவழிப்பட்ட பெண்ணின் கடமை உணர்வும் மனத் தவிப்பும்: ஆண்டாள் - ஆழ்வார்

நாச்சியார் திருமொழியில், திருவரங்கத்தானின் மனத்தில், தான் புகவேண்டும்; அவனையே கணவனாக அடையவேண்டும். அவனுக்கே பணி செய்து வாழ வேண்டும் என்று தன் மன விருப்பினை ஆண்டாள் வெளிப்படுத்துகின்றாள். பெண்மையைத் தனதுடைமையாக்கும் வண்ணம்

*'கேசவநம்பியைக் கால்பிடிக்கும் நாள்*
*என்றும் இப்பேறு எனக்கருள்வாய்'*

என்று வேண்டுகிறாள். அவனை அடைவதே இப்பிறவியின் பயன் என்றும், பழுதின்றிப் பாற்கடல் வண்ணனுக்கே பணி செய்து வாழவேண்டும் என்றும், அவனையே கணவனாக அடைய வேண்டும் என்றும், கணவனுக்குப் பணிவிடை செய்வதே நல்ல மனைவியின் கடமை என்றும் தன் உள்மன விருப்பங்களை வெளிப்படுத்துகின்றாள். தான் செயயும் பணிகளின் வழி, கணவன் நெஞ்சம் புக வேண்டும் என்ற மரபுவழி வந்த பெண்ணின் மன உணர்வுகளையே இங்குக் காண முடிகிறது.

எப்பொழுதும் கோவிந்தா! கோவிந்தா! என்று அழைக்கின்றேன். இது என் மனத்துணிபு. இது உங்களுக்கு ஏச்சுக்கு இடம் கொடுக்கும். ஆதலால் என்னால் தலைப்பழி எய்தி உங்கள் நன்மை இழந்து துயர்ப்பட்டது போதும். துவராபதிக்குச் சென்று விடுங்கள். அல்லது தந்தையும் தாயும் உற்றாரும் நிற்கத் தனிவழிப் போயினாள் என்ற சொல்லும் வரும். பழிச்சொல் காப்பது அரிது; வண்ணந் திரிபும் மனங்குழைவும், மானமிலாமையும், வாய்வெளுப்பும், உள்மெலிவும் கண்ணனால் ஏற்பட்டது. ஆதலால் என் கருத்தைப் பிழைத்து நின்ற கண்ணனிடமே என்னைச் சேர்த்து விடுங்கள் என்கிறாள். ஆண்டாளின் அச்சம், நாணம், சினம், கவலை, தவிப்பு ஆகிய உணர்வுகளின் அழுத்தத்தை இங்கு உணரமுடிகிறது.

ஆண்டாள் பெண் என்ற மரபு வட்டத்தை மீறித் தன் மனத்தில் எழுந்த உடம்பில் உணர்ந்த பால் உண்வுகளை மறைக்காது, தன்அனுபவத்தை வெளிப்படையாகக் கூறுவதில் மரபை மீறியுள்ளாள் என்று பெண்ணியத் திறனாய்வுப் பார்வையில் கூறலாம். எனினும் திருமணம் என்ற நிலையில் அச்சம், மடம், நாணம், தவிப்பு, அலர், பழி ஆகிய சமூக மரபுகளுக்கும் கட்டுப்பட்டு நின்ற நிலையையும் இங்கு உணரமுடிகிறது. இவற்றையெல்லாம் கடந்து, தான் விரும்பிய திருவரங்கத்தானை அடையத் தடை வருமோ! எவ்வாறாகினும் அடைய வேண்டும் என்ற தவிப்புக்களே இவரது பாடல்களில் மிகுதியும் படிந்துள்ளன.

திருமங்கையாழ்வார் ஊரார் பழித்தாலும், தூற்றினாலும், சீரானை, செங்கண் நெடியானை, தாமரை போல் கண்ணானை,

*'பேர் ஆயிரம் பிதற்றி-பெருந்தெருவே*
*ஊரார் இகழினும் ஊராது ஒழியேன் நான்*
*வார் ஆர் பூம் பெண்ணை மடல்'*

என்கிறார். இங்கு தலைவி, திருவரங்கத்தான் மீது பற்றுக் கொண்டு பிதற்றும் நிலையினைக் கூறுகிறார். ஊரார் தூற்றினாலும் பழிக்கு அஞ்சாது அவனைக்காணும் பொருட்டு மடலேறுவேன் என்கிறாள்.

மேலும் தன் மனத் தவிப்பை இன்னும் வெளிப்படுத்தும் போது, இறைவனைக் காணும் பொருட்டு திருநிறையூரில் திருக்கதவைத் தாண்டிச் சென்று அவனை

*'என் கண்களிப்ப நோக்கினேன் நோக்குதலும்*
*மன்னன் திருமார்பும் வாயும் அடி இணையும்'*

தான் என் கண்ணுக்குத் தெரிந்தது. ஆனால், மன்றுமரகதக் குன்றின் அருகில், ஓர் வஞ்சிக்கொடியாகிய திருமகள் நின்றதை அறியவில்லை. என் நெஞ்சம் என் அன்பும் அவனிடம் செல்ல என் கைவளை, மேகலை கழன்றது என்று தன் மனத்தவிப்பினை இங்குத் திருமங்கையாழ்வார் தலைவி குரலில் வெளிப்படுத்துகின்றார்.

## மனத்தவிப்பும் தன் நிலைக்குத் தான் இரங்கலும்: ஆண்டாள் - ஆழ்வார்

தான் எண்ணியதை அடையவேண்டும் என்ற நினைப்பின் வழி எழுந்த அச்சம், கவலை, மனத்தவிப்பு ஆகிய உணர்வுகளை நாச்சியார், பின்வருமாறு வெளிப்படுத்துகின்றார்.

திருவரங்கத்தானைப் பார்த்து, 'உன்பேச்சும் செய்கையும் எங்களை மையல் ஏற்றி மயக்குகிறதே; அவ்வாறு மயக்கும் உன் திருமுகம் மாயமந்திரம் தான் என்ன என்று கேட்கிறாள். ''தென்றலும் திங்களும் ஊடறுத்து என்னை நலியும் முறை அறியாயோ''(553) என்கிறாள். ''உன்னையே கதியென்று நினைக்கின்றேனே; அவ்வாறு கதியென்றும் தானாவான் கருதாது, ஓர் பெண்கொடியை வதை செய்தல் எனும் சொல் வையகத்தார் மதியாரோ'' என்று தன் நிலைக்குத் தானே வருந்துகிறாள். மனத் தவிப்பும் தன்னிரக்கமும் எல்லை கடந்த நிலையில், தான் அடைந்த அகவயப்பட்ட மெய் உணர்வுகளை வெளிப்படையாக இங்கு ஆண்டாள் விளம்புகின்றாள்.

திருமங்கையாழ்வார் திருமாலைக் காணவேண்டும்; அவனைத் தனக்குத் தலைவனாக அடையவேண்டும்; போன்ற மனத் தவிப்புக்களைத் தலைவி அடக்க முடியா நிலையில்,

*'கடல் ஒலி துன்பம் தருகிறது,*
*சந்திரன் ஒலி வெப்பம் தருகிறது*
*தென்றல் வாட்டுகிறது*
*அன்றில் பறவை ஓசையோ நெஞ்சைப் பிளக்கிறது;*
*மன்மதன் அம்பு எய்கின்றான்; என்னைக்*
*காப்பவர் யாருமில்லை;'*

என்று புலம்புகின்றாள்.

*'மன்னும் வறுநிலத்து வாளாங்கு உகுத்தது போல்*
*என்னுடைய பெண்மையும் என் நலனும் என் முலையும்*
*மன்னும் மலர் மங்கை மைந்தன் கணபுரத்து*
*பொன்மலை போல் நின்றவன் தன் பொன் அகலம்*
*தோயாவேல்'*

என்று எனது உடம்பு அவன் மார்பைச் சேராவிட்டால், இவ்வுடம்பு இருந்து பயன் என்ன? உடம்பே எனக்குப் பாரமாக உள்ளது. மூப்பு வேறு வருகிறது; மூப்பைத் தடுக்க மருந்து கண்டறிவார் இல்லையே! என்ற மனத் தவிப்புகள் இங்குத் தலைவி கூற்றில் வெளிப்படுகின்றன.

## மெய்ப்பாட்டுணர்வும் மொழிவெளிப்பாடும் ஆண்டாள் - ஆழ்வார்

திருமண உறவின் வழி எழும் சிற்றின்ப உணர்வுகள் எல்லாம் ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவாகும். தான் உணர்ந்ததை அவ்வாறே எழுதுவது படைப்புச் சுதந்திரமாகும். ஆனால் சங்க இலக்கியப் பெண்பாற்புலவர்கள் தனது வேட்கையை வெளிப்படுத்தினாலும், அவர்களது அகவய உணர்வுகளையும் மரபு வழிப்பட்ட வட்டத்திற்குள் அடக்கி விடுகிறார்கள். ஆனால் இங்கு வெளிப்படையாகப் பேசும் மரபு மீறலைத்தான் ஆண்டாளின் உடல், உணர்வு வெளிப்பாடு குறித்த மொழித்தளங்களில் பார்க்க முடிகிறது.

*'மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும்*
*விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே'*

என்றும்,

*'கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிவரச் சோர்வேனை*
*பெண்ணீர்மை யீடழிக்கும் இதுவும் ஓர் பெருமையோ'*

என்றும்,

*'காமத்தீயுள் கதுவப்பட்டு இடைக்கங்குல் ஏமத்தோர்*
*தென்றலுக்கு இலக்காய் நானிருப்பேனே'*

என்றும், தன் வருத்தம் மீக்கூர்ந்தவுடன் எழும் நிலையில் தான் அனுபவித்த மெய்பாட்டு உணர்வுகளை ஆண்டாள் இங்கு வெளிப்படுத்துகின்றாள். 'காமத்தீயுள் கதுவப்பட்டு' என்ற குறிப்பின் வழி, அவள் மனம் ஓர் எல்லையைக் கடக்க இங்கு மரபுமீறல் இயல்பாக நிகழ்ந்துள்ளது. 'உள்ளத்தின் வழி உடம்பில் எழும் பூரிப்பும், வேட்கை கலந்த மெய்பாட்டுணர்வும் இணைந்த நிலையில் ஆண்டாளின் மொழித்தளம் அமைகிறது. ஆண்டாளின் மொழிகளைக் 'காமம் மிக்க கழிபடர் கிளவிகள்' எனக் கொள்ளத்தகும். அத்துடன் ஆண்டாளின்

மொழி வெளிப்பாட்டில் படிமப் பயன்பாடுகள் அதிகம் உள்ளன. தான் வாழும் இல்லம் வாழ்க்கை முறை,நட்பு, பருவ வயது வட்டத்தில் அறிந்த அனுவங்கள் முதலியவற்றை உவமைகளாகப் பயன்படுத்தியுள்ளார்.

திருமங்கையாழ்வாரும் இறைவன் மீது கொண்ட வேட்கையினால் எழும் மெய்ப்பாட்டுணர்வினை வெளிப்படுத்து கின்றார். ஆனால் இது ஆண்டாளின் வேட்கை உணர்விலிருந்து வேறுபட்ட தளத்தில் செயல்படுகிறது.

நான் அவனது கார் ஆர் திருமேனியைக் கண்டது முதல் என்னை அறியேன். அவனது பேரைப் பிதற்றித் திரிகின்றேன். பழிக்கு அஞ்சி மடநெஞ்சை மட்டும் தூதுவிட்டேன். அதுவும் அவனிடமே தங்கி விட்டது.

'மற்று எனக்கு இங்கு

*ஆராய்வார் இல்லை! அழல்வாய் மெழுகுபோல்*
*நீராய் உருகும் என் ஆவி- நெடுங்கண்கள்*
*ஊரார் உறங்கினும் தான் உறங்கா, உத்தமன்தான்*
*பேராயினவே பிதற்றுவேன்- பின்னையும்*
*கார் ஆர் கடல் போலும் காமத்தார்'*

ஆயினேன்; என் நிலைக்கு இரங்குவார் யாருமில்லை; என் நெஞ்சை அறிபவரும் யாரும் இல்லை; யான் என் செய்வேன்; காமத்தீயில் கவலுகின்றேன் என்று தன் காமத்தின் மிகுதியால் வருந்தும் நிலையைத் திருமங்கையாழ்வார் தலைவி கூற்றில் வெளிப்படுத்துகின்றார்.

**காமம் மீக்கூர்ந்த கழிபடர்கிளவிகள் ஒப்பீடு:**

தன்னுறு வேட்கை முற்படக்கிளத்தல் தலைவிக்கு இல்லை, என்ற நிலையில் ஆண்டாள் பாடல்களில் மரபுமீறல் நிகழ்ந்துள்ளது.

ஆண்டாள் பாடல்களில் ''ஊனிடையாழ் சங்கு உத்தமர்க்கென்று எழுந்த என் தடமுலைகள்'' என்று நனவிலி மன உணர்வும், அவ்வுணர்வுகளின் வழி உடம்பில் எழும் மெய்ப்பாட்டு உணர்வும் இணைந்து வெளிப்படுகின்றன. உடல் பற்றிய வர்ணனையைவிட, தன் உடம்பைத் துவரைப் பிரானுக்கே சங்கற்பித்து வாழ்ந்தேன், இன்று

''கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிவரச்சோர்வேன்'' என்ற இடத்தில் ஆண்டாளின் உள்மனவருத்தம் மீக்கூர்ந்த நிலையே மிகுதியாக வெளிப்பட்டுள்ளது.

ஆனால் திருமங்கையாழ்வார் தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கொண்டு சொன்னாலும், அப்படைப்பில் வெளிப்படும் மொழி, பெண்ணின் குரலில் வெளிப்படும் ஆணின் மொழியாகும். பெண்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பண்புகளுக் குரியவர்கள் இப்பண்புகளை மீறும்போதுதான் மடலேறும் நிலை ஏற்படுகிறது. ஆதலால் காமம் மீக்கூர்ந்த பெண்களின் நிலையைச் சொல்லும் விதத்தில் இங்கு மரபுமீறல் இடம் பெற்றுள்ளது.

திருமடல்களில் தென்றல், மணியோசை முதலியவை தலைவிக்குத் துன்பம் தருவனவாக மடலேறும் தலைவியின் நிலை சொல்லப்பட்டுள்ளது. என் தடமுலைகள் தலைவனாகிய இறை மார்பைத் தோய வேண்டும் என்ற விருப்ப உணர்வு வெளிப்படுத்தப் படுகிறது. மேலும் அவ்வுணர்வும் (வாசவதத்தை உதயணன் போன்று) ஒரு பெண் ஆணின் மீது கொண்ட காதல் உணர்வுகளின் வழிச் சான்றுகள் காட்டிச் சொல்லப்பட்டிருக்கின்றன.

திருமங்கையாழ்வார் பாடல்களில் தனிப்பட்ட மன உணர்வுகளின் அழுத்தத்தை விட, ஆண் தெய்வங்களின் செயல்பாட்டுத்திறன், பெண் உறுப்புக்களின் வருணனை, மரபு வழிப்பட்ட பெண்கள் பின்பற்றும் பண்புகள், மரபு மீறிய (காமம் மீக்கூர்ந்த நிலை) பெண்களின் நிலை என்று பெண்களின் பண்பாட்டுப் படிநிலைகள் வருணிக்கப்படுகின்றன.

ஆண்டாள் பாடல்கள் நனவிலி மன உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். அந்நனவிலி மன உணர்வே பெண்ணின் மொழியாக இங்கு வெளிப்பட்டுள்ளது. உறுப்புப் பற்றிய தனிப்பட்ட வருணனை, உறுப்புக்களைச் சொல்லி விளித்தல் முறை இங்கு இல்லை.

திருமங்கையாழ்வார் பாடல்களில் தலைவனை எவ்வாறாகினும் அடைய வேண்டும் என்ற விருப்ப உணர்வு, அதனால் எழும் காமம் மீதுற்ற நிலை, பல அல்லல்பட்டுக் காதலி, காதலனைத் தேடிச் சென்று அடையும் நிலை (இலக்கியக் காதலர்கள்) புலப்படுத்தப் பட்டுள்ளன.

நனவிலி மன உணர்வுகளின் இழையோட்டம் ஆண்டாள் மொழிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, திருமங்கையாழ்வார் பாடல்களில் குறைவான மன அழுத்தத்தை உணரமுடிகிறது. ஆண்டாளின் மொழி ஆழ்மன உணர்வின் மொழி; நனவிலி உணர்வின் மொழியாகும். பாடல்களின் இடையில் சமுதாய மரபிற்குட்பட்டு வருந்தும் பெண்ணின் மன அழுத்தங்களையும் உணரமுடிகிறது. இன்னும் இந்த மாதிரி ஆய்வு தொடரும்பொழுது ஆண்மொழி வெளிப்பாடு பெண் மொழி வெளிப்பாடு ஆகியவற்றிற்கிடையே உள்ள வேறுபாடுகளைத் துல்லியமாக உணரமுடியும்.

## குறிப்புகள்

1. தி. முருகரத்தினம் (ப.ஆ.) தமிழிலக்கியத்தில் பெண்ணியமும் தலித்தியமும், ப.29
2. சு. வேங்கடராமன், ஆண்டாள் – பெண்ணிய நோக்கு, வியாழ வட்டக் கருத்தரங்கக் கட்டுரைகள் (அச்சில் வராதது)

# 7. தாய்மைத்துவம் - பெண்ணியத் திறனாய்வு நோக்கு

'பெண்ணியம்' (Feminism) என்பது ஆணிற்கு எதிரான இயக்கமன்று. பெண் விடுதலை என்ற பெயரில் வாழ்க்கை வரம்புகளை மீறுவதும், திருமண உறவுகளை நிராகரிப்பதும் தாய்மையின் தெய்வீகத் தன்மையை மறுப்பதும் இதன் நோக்கங்கள் அன்று.

இதற்கு மறுதலையாகப் பெண் என்பவள் போகப் பொருள் மட்டுமன்று; தனித்துவம் வாய்ந்தவள்; சில அர்த்தமில்லா அடக்குமுறை, ஒடுக்குமுறைச் சக்திகளினால் பெண்களின் மதிப்புக்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் நசுக்கப்படும் பொழுது அதற்கு எதிராகக் குரல் கொடுத்துப் பெண்ணின் தனித்துவத்தை மகத்துவத்தை ஆணாதிக்கச் சமுதாயத்திற்கு உணர வைப்பதும், பெண்களின் மதிப்புக்கள் பற்றிய விழிப்புணர்வை வளரச் செய்வதும் இதன் நோக்கங்களாகும்.

1950-களில் 'பெண்ணிய இயக்கம்' பெண் என்பவள் மனைவி, தாய் என்ற நிலைகளில் மட்டும் பார்க்கப்படுகிறாள் என்பதை எதிர்த்துக் குரல் கொடுத்தது. இதைத் தொடர்ந்து பெண் ஏன் தாயாக்கப்பட்டாள்? என்ற வினா எழுந்தது. இதற்குக் காரணம் 1) அவளுடைய உடலியற்கை பொருத்தமாக அமைந்தது, 2) சமூகப் பாரம்பரியப் பெண்ணிய மரபறிவு பெண்களைப் பாலியல் பாங்கில் ஒரே மாதிரி இருப்பதாகக் காட்டியதுடன் பெண்கள் தாய்மை அடைதலே சிறப்பு எனக் கருதியது.

மேலும் பெண்ணுக்கும் ஆணுக்குமுரிய அடிப்படை வேறுபாடுகள் 1. தாய்மைக்குரிய இனப்பெருக்க முறை, 2. பாலூட்டும் உயிர்கள் என்ற அடிப்படை நிலைகளில் பாகுபடுத்திக் காட்டப்பட்டன. இவ்வேறுபாடுகளும், பெண்ணைத் தாயாக மாற்றிய கருத்துருவும், பெண்ணுக்குச் சுதந்திரமில்லா வாழ்வைக் கொடுத்ததுடன் சில

அடக்குமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் விதித்தன. பெண்மையும் தாய்மையும் அதற்கு என்று ஒதுக்கப்பட்ட அடிவழக்குகள் சார்ந்தவை என்று கருத வைத்தன. எனவே தாய்மை, பெண்மை இவ்விரண்டிற்குரிய வேறுபாடுகளை நுணுகியறிவதற்காகவும், தாய்மை என்பதிலுள்ள அனுபவங்களைக் கண்டறியவும், அவ்வனுபவங்களை வெளிக் கொணரவும் தாய்மைத்துவம் (Motherhood) என்ற அமைப்பு பெண்ணிய வாதிகளால் மறுபரிசீலனை செய்யப்பட்டது.

புதிய பெண்ணியத் திறனாய்வு தாய்மைத்துவத்தை ஒரு நிறுவனம் அல்லது அமைப்பாகக் கண்டது. இதில் இனப்பெருக்கமும் தாய்மைத்துவமும் (Reproduction and Motherhood) ஓரினச் சேர்க்கை-தாய்மைத்துவம் (Lesbian - Motherhood), தாய் மகள் உறவு (Relations between Mother & daughter) முதலியன முக்கிய களங்களாகப் பேசப்பட்டன. இனப்பெருக்கம் தொடர்பான நிலையில் 'தாய்மைத்துவம்' என்பதற்கு ஒரு நிறுவனம் என்ற அமைப்பிலும் பண்பாட்டு ரீதியிலும், பாலின அமைப்பிலும் பல பொருளமைதிகள் திறனாய்வாளர்களால் வரையறுக்கப்பட்டன.

## அட்ரின் ரிச்

ஆங்கிலோ அமெரிக்கத் திறனாய்வில் 'பெண் மையவாதத்' திறனாய்வு மிகுந்த எழுச்சி பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து 'அட்ரின் ரிச்' என்ற பெண்ணியவாதியால் 'மறுபார்வை' என்ற பெயரில் பெண்ணியத் திறனாய்வுப் போக்கு திசைதிருப்பப்பட்டது. இத்திறனாய்வு பழைய இலக்கியக் கருத்துக்களை பெண்ணியப் பார்வையில் புதிய நோக்கில் வினாவுக்குட்படுத்தின.

இவர் தாய்மைத்துவம் (Motherhood) என்ற கட்டுரையில் தாய்மை என்ற பண்பை ஒரு நிறுவனம் அல்லது அமைப்பு என்ற நிலையில் சுட்டுகின்றார். இத்துடன் ராஜம் கிருஷ்ணரின் 'வீடு' என்ற நாவலில் வரும் தாய்ப் பாத்திரத்தில் வெளிப்படும் தாய்மைப் பண்பும் நோக்கமும் இங்கு பொருத்திக் காட்டப்படுகின்றன.

## தாய்மைத்துவம் பற்றிய கருத்து விளக்கங்கள்

பெண் என்பவள் குழந்தைப் பேற்றிற்குரியவள்; அக்குழந்தைகளைப் பேணிப் பாதுகாப்பவள்; குடும்பப்

பொறுப்புடையவள்; உணர்வு ரீதியானவள், எதற்கும் எந்நிலையிலும் ஒத்துப்போகும் தன்மையுடையவள்; குடும்பம் என்ற அமைப்பிற்குக் கட்டுப்பட்டவள் என்ற அனைத்துப் பண்புகளின் இருப்பிடம் தான் தாய்மைத்துவம் ஆகும்.

'தாய்மைத்துவம்' என்பது பொதுவாகப் பெண்களுக்குரிய அடிப்படைப் பண்பாகும். பெண்கள் உணர்வு ரீதியாக அடக்கு முறைக்குட்படுத்தப்பட்டு, அதே நேரம் பெருமையாகவும் பேசப்படுகிறார்கள். தாய்மை உணர்வு தொடர்பான இவ்வகைக் கருத்துக்களை வெளிப்படுத்தும் களமாகத் தாய்மைத்துவம் திகழ்கிறது.

ஜுலி (Julie) என்பவர் பெண்மை என்பதைத் 'தாயைப் பற்றியது; தாய் என்ற நிலையில் பெண்களின் மனப்பான்மையையே திரும்பக் குறிக்கிறது; தாய்மைத்துவத்திலுள்ள, கொடிய முறையில் அடக்கியாளப்படும் ஒடுக்கும் பாங்குகளையுடைய பல பார்வைத் தளங்களை வெளியிடும் தன்மையுடையது' 'தாய்மைத்துவம்' என்கிறார்.

'பெண்மையும் தாய்மையும்' என்ற இரண்டும் ஒரே வட்டத்திலுள்ள இரண்டு வேறுபட்ட துருவங்களாகும். இவை ஏறக்குறைய தொன்றுதொட்டு வரும் எல்லோருக்கும் வெளிப்படையாகத் தெரிகிற தன்மையுமாகும் என்கிறார் ஐன்ஸ்டீன்.

எம்.ரிஸ்கா என்பவர் உண்மையில் மரபு தழுவிய பெண்கள் குழந்தைகளைப் பேணி வளர்த்தல், ஒத்துப் போதல், உணர்ச்சிகளுக்குக் கட்டுப்படுதல் முதலியவற்றைத் தனக்கே உரிய தளமாக்கிக் கொள்கிறார்கள். எனவே தாய்மைக்குரிய செயற்பாடுகளும் பெண்ணியமும் வேறுபட்டிருக்கவில்லை என்கிறார்.

ஆணாதிக்கச் சமுதாயத்தில் தாய் என்ற பெயரில் அவளைக் கண்டித்தற்கும், தண்டித்தற்கும் உரிய களமாகத் தாய்மைத்துவம் திகழ்கிறது என்றும் கூறுவர்.

பெண்ணியத் திறனாய்வாளர்கள் குழந்தைகளைச் சுமப்பதும், அவர்களை வளர்த்துருவாக்குவதும் தாய்க்குரிய ஒரு கடுந்தொழில் என்று கருதுகிறார்கள். ஏனெனில் இத்தன்மை பெண்களை வீட்டிற்கு மட்டும் உரியவர்களாகப் பிள்ளை பெறும் இயந்திரச் சின்னமாகக் கட்டுப்படுத்துகிறது. இதுவே ஆண் ஆதிக்கத்

தன்மையில் பெண்களைக் கீழ்நிலையில் இயங்கச் செய்யும் தன்மையை நிலைபேறுடையதாக்குகிறது. அத்துடன் பெண்களை அரசியல் போராட்டம், பொது அலுவல்கள் முதலியவற்றில் கலந்து கொள்ளும் சுதந்திரத் தன்மையைத் தடுக்கிறது என்றும் விரித்துரைக்கின்றனர்.

தாய்மை என்பது ஒரு பெண்ணுக்கு மகப்பேறு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. அதே நேரத்தில் சமுதாயத்தில் இம்மகப்பேறு பெண்ணுக்கு ஒரு மதிப்பிழந்த தன்மையையும் பயமுறுத்தல் நிலையையும் உருவாக்குகிறது என்கிறார் கிறிஸ்துவா.

சமுதாயம் தாய்மையை உள்ளார்ந்த பாலியல் உறவுடைய பெண்ணாகவும் பார்க்கிறது. அதே நேரம் தந்தைவழிச் சமுதாயத்தினால் ஆணுக்கும் பெண்ணுக்குமுள்ள அடிப்படை வேறுபாடு தாய்மை வழிதான் கற்பிக்கப்படுகிறது. இதை மையமாகக்கொண்டு சமுதாயத்தில் தாய்மையற்ற பெண்கள் சில சமுதாயப் புறக்கணிப்பு களையும் வெறுப்புக்களையும் சந்திக்கிறார்கள். இவ்வாறு சமுதாயத்தில் தாய்மை என்பதை மையமாக வைத்துப் பெண்களைக் கீழ்நிலைக்கு ஒதுக்கிப் புறக்கணிப்பதையும், வேறுபடுத்துவதையும் இகழ்வதையும் பெண்ணியத் திறனாய்வாளர்கள் கண்டிக்கிறார்கள்.

தாய்மைத்துவம் என்ற பண்பிற்கு அளிக்கப்படும் உயர்ந்த நிலையானது ஒரே மாதிரி வகைப் பெண்களை (Stereotyped Women) உருவாக்குகிறது.

பெண் குழந்தைகளை உருவாக்கி வளர்ப்பவள்; ஆணாதிக்கச் சமுதாயம் இத்தன்மையினால் பெண்களை முதன்மைப்படுத்த உடன்படுகிறது. பெண்ணைத் தம் செல்வாக்கிற்குட்படுத்தவும் தம் காரியங்களை அதன் மூலம் சாதித்துக் கொள்ளவும் அவளை அடக்கியாளவும் இத்தன்மையையே ஒரு சின்னமாகப் பயன்படுத்திக் கொள்கிறது.

### தாய்மைத்துவம் பற்றிய அட்ரின் ரிச் (Adrinne Rich) கருத்துக்கள்:

அட்ரின் ரிச் தாய்மைத்துவத்தை 1. அனுபவம் (Experience) 2. நிறுவனம் அல்லது அமைப்பு (Institution) என்ற இரண்டு தன்மைகளில் வைத்துக் காண்கிறார்.

தாய் என்பவள் பல உணர்வு அனுபவங்களைக் கொண்டவள். அவ் அனுபவங்களின் ஒட்டு மொத்தக் குவியல்களும், அவற்றின் வழி எழும் உடன்பாட்டு எதிர்மறைக் கருத்துக்களும் தான், அவளைத் 'தாய்மை' என்ற அமைப்பாகத் திகழச் செய்கின்றன. அனுபவ உணர்வுகளே தாய்மை என்ற மொத்த அமைப்பை உருவாக்குவதால், இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பது இவண் குறிப்பிடத்தக்கது. ரிச் விவாதிக்கும் தாய்மைத்துவம் பற்றிய கருத்துக்கள்

1. தாய்மை அல்லது தாய்மைத்துவத்தைப் பெண்களின் உயர்தனிச் சிறப்பாகப் பார்ப்பதற்குரிய காரணங்கள்

2. அனுபவங்களும் அடிமைத்தனங்களும்

3. நிறுவனம் அல்லது அமைப்பு(Institution) க்குரிய கூறுகள்.

4. அடிமைத்தனப் படுத்தும் தந்தைவழிச் சமுதாயப் பண்புகள்.

5. அடிமைத்தனத்திலிருந்தும் தாய்மைத்துவத்திலிருந்தும் விடுபடுவதற்குரிய (Free from Motherhood) வழிமுறைகள் என்ற நிலைகளில் அமைகின்றன. அவை பின்வருமாறு:

## தாய்மைத்துவத்தை உயர்தனிச் சிறப்பாகப் பார்ப்பதற்குரிய காரணங்கள்:

தாய்மைத்துவமானது, தாய்மையின் இனப்பெருக்கத்தன்மை யானது (Reproduction of Motherhood) அவளுக்கும் குழந்தைக்கும், குடும்பம் என்ற அமைப்பிற்கும் தீவிர ஆற்றல் வாய்ந்த உறவுமுறைகளை அளிக்கிறது.

இனப்பெருக்கம் அல்லது குழந்தைப்பேறு என்ற ஆற்றலே பெண்களை, ஆண்களுக்குக் கட்டுப்பட்டவர்களாக ஆக்குகிறது. எனினும் இவை இரண்டும் தாய்மைத்துவத்திற்குரிய தனிச் சிறப்புக்களாகக் கருதப்படுதற்குரியன.

பெண்களின் தாய்மை அனுபவத்தையே தந்தைவழிச் சமுதாயம் பின்னர் ஒரு நிறுவனமாக வேறுபடுத்திக் காட்டுகிறது.

பெண்களின் இனப்பெருக்கத்திற்குரிய திறமைகளையே தாய்மை என்ற நிலையில் காரணம் காட்டித் தந்தை வழிச் சமுதாயம்

அவளை அடக்குமுறைக்கு உட்படுத்தியிருப்பதைப் புலப்படுத்திக் காட்டுகிறது தாய்மைத்துவம்.

## அனுபவங்களும் அடிமைத்தனங்களும்:

தாய்மை அல்லது தாய்மைத்துவம் என்ற பண்பமைப்பில் உருவாகும் அனுபவங்களைப் பெண்கள் தமக்கே உரியதாக நினைக்கும் உடைமைத்தன்மையும் அம்முயற்சியும் அடிமைத் தனத்திற்கு வழிவகுக்கின்றன.

'தாய்மை' என்ற பெயரில் ஆணாதிக்கத்தின் கீழ் இன்பத்திலும் துன்பத்திலும் தான் அதிகப் பெண்கள் மூழ்கியிருக்கிறார்கள். அதே நேரம் 'தாய்' என்பவள் குழந்தைகளைப் பெறுவதிலும் பேணுவதிலும், வளர்த்துருவாக்குவதிலும் தன்னிறைவும், உள்ளார்ந்த மகிழ்வும் பெறுவதைச் சில பெண்கள் ஒத்துக் கொள்ளுகிறார்கள். இம்மகிழ்ச்சி ஒன்றைக் கருதியே தாயாக இருப்பது தண்டனைக்குரிய வேலை; இவ் ஒடுக்கப்பட்ட நிலையிலிருப்பது தாய்க்குத் தேவை இல்லை. அதைவிடத் தாம் எந்நிலையிலிருக்கிறோம் என்பதை ஒவ்வொரு தாயும் உணர வேண்டும் என்கிறார் ரிச்.

மகப்பேறு (Maternity) என்பதும் தந்தைவழிச் சமுதாய ஆட்சிமுறை அமைப்பிற்கும், பல்வேறு சமூக இனங்களுக்கும் உள்ள உயிர்நாடி அல்லது மூலாதாரக்கூறு ஆகும்.

பெண்களின் இனப்பெருக்கத் திறமையே அவர்களைச் சமுதாயம் அடிமைப்படுத்துவதற்குரிய அடிப்படைக் காரணமாகும்.

## தாய்மை என்ற நிறுவனம் அல்லது அமைப்பில் பார்க்கப்படும் முக்கியக் கூறுகள்:

தாய்மைத்துவம் என்ற அடிப்படையில் பார்க்கப்படும் நிறுவனம் அல்லது அமைப்பு என்பது ஓர்அரசியல் , அமைப்பன்று; தாய்மைக்குரிய உணர்வுக்குவியல்களையும், விளைவுகளையும் ஒன்றாகக் குவித்துப் பார்க்கக்கூடிய ஒரு தளமே நிறுவனம் என்ற அமைப்பாகும்.

நிறுவனம் அல்லது அமைப்பு தாய்மையின் அனுபவங்களையே அடித்தளமாகக் கொண்டுள்ளது. ஆனால் சமுதாயத்தில் அவ்

அனுபவங்களுக்கு அளிக்கப்படும் வன்மை, மென்மைகளை இந் நிறுவனம் என்ற அமைப்பு வழிப் பெண்ணியத் திறனாய்வு அலசி ஆராய்கிறது. நிறுவனம் என்ற அமைப்பால் தாய்மைத்துவத்திற்குரிய அனுபவங்கள் கட்டுப்படுத்தப்படவில்லை; தாய்மைத்துவப் பண்பை நீக்கவுமில்லை; மறுக்கவுமில்லை; மாறாகத் தாய்மைத்துவப் பண்பமைப்பிலுள்ள அனுபவங்களையும் திறமைகளையும் சமுதாய நோக்கில் நன்முறையில் வலுப்படுத்தவும், வெளிக் கொணரவும் விரும்புகிறது.

'ரிச்' தாய்மை என்ற அனுபவங்களிலிருந்தும்அதைப் பற்றிய சமுதாய நோக்கிலிருந்தும் பெறப்படும் சில கருத்துக்களைத் தாய்மை என்ற அமைப்பிற்குரிய இன்றியமையாக் கூறுகளாகப் பின்வருமாறு காட்டுகிறார்:

1. கற்பழிப்பு அல்லது பாலுறவு வன்முறையும் அதன் விளைவுகளும்.

2. திருமணம் என்ற அமைப்பானது பொருளாதாரம் சார்ந்தது; அவனுடைய குழந்தைக்கு அவனே முழுக்க முழுக்க பொறுப்பு அல்லது உத்தரவாதம் என்பதையும் உணர்த்துதல்.

3. பெண்கள் தொடர்ந்து அன்புக் கட்டுப்பாடுகளிலும் தாழ்வு மனப்பான்மையிலும் இருத்தல்.

4. சமூகப் பயன்களை முழுதும் பெறாதிருத்தல்.

5. தினக்கூலி என்ற நிலையில் பெண்கள் அங்கு முழு வேலை செய்தாலும் ஆண்களுக்கு இணையான சம்பளத்தைப் பெறாதிருத்தல்.

6. பெண்கள் எப்பொழுதும் ஆணையே சார்ந்திருக்க வேண்டும் என வற்புறுத்தல்.

7. கூட்டுப் பொறுப்புணர்வின் கட்டுப்பாடுகளும் வரையறைகளும் முழுநேரத் தாயாக இருக்க வைத்தல்

8. குடும்பத்தில் குழந்தைகளைக் கவனிப்பதில் ஆண்கள் குறைந்த அளவு பொறுப்பைப் பெற்றிருந்தாலும் அவர்களுக்கே தந்தை

என்ற முழு உரிமையையும் (Totally fatherhood and Privilege) சலுகையையும் அளித்தல்.

9. பெண்கள் எப்பொழுதும் வலிமையிலும், அறிவிலும் குறைந்தவள்; அறியாமை நிறைந்தவள் என்று வழிவழியாகக் கற்பிக்கப்படும் ஊகம்.

10. குடும்பத்தில் பெண்களுக்கு என வரையறுக்கப்பட்ட தீவிர உணர்ச்சிச் சுமைகள் போன்றவை 'தாய்மை' என்ற அமைப்பிற்குரிய கூறுகளாகும்.

இக்கருத்துக் கூறுகள் பெண்களை மொத்தத்தில் குடும்பம் என்ற அமைப்பில் திறமையற்றவர்களாகவும், உணர்வுகளில் ஆட்பட்ட வர்களாகவும் காட்டுகின்றன.

இந்நிலையை மாற்றியமைக்க வேண்டும். இதற்குப் பெண்கள் எப்பொழுதும் பாதுகாப்பற்றவர்கள் என்ற கருத்துடையவர்கள்; தீவிர உணர்வுத்திறமுடையவர்கள்; பிறரைச் சார்ந்திருப்பவர்கள் என்று அவர்களையறியாது உள்மனத்தில் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை முழுமையாக உணரச் பெறச் செய்ய வேண்டும்.

மேலும் ஆணின் அதிகாரப் பிடிக்குள் இருக்கும் தன்மையைத் தடுக்க அதற்குரிய ஆற்றலைப் பெருக்குவதுடன், அவ்வாற்றலை உறுதியாகத் தம்முள் தக்க வைத்துக் கொள்ளவேண்டும். திறமையையும், விழிப்புணர்வையும் வளர்ப்பதுடன், குடும்பத்தில் எதையும் தானே நிர்வாகம் செய்யும் தகுதியைத் தாய்மைத்துவம் என்ற பண்பின் வழி வளர்க்க வேண்டும்.

## அடிமைத்தனப்படுத்தும் தந்தை வழிச் சமுதாயத் தோற்றமும், பண்புகளும்:

தாய்மைத்துவம் என்ற அமைப்பாக்கப் பண்பிற்கு, தந்தை வழிச் சமுதாயத்தின் அடக்குமுறைகளே அடிப்படைக் காரணங்கள் என்பதால், தந்தைவழிச் சமுதாயத்தின் தோற்றப் பண்புகளைப் பின்வருமாறு ரிச் விவாதிக்கிறார்.

தந்தைவழிச் சமுதாயம் என்பது திறமைகளைப் பற்றிய ஓர் அமைப்பே. தந்தைவழிச் சமுதாயத்தில் பெண்களின் சிறப்புத்

தன்மைகளை அவள் வலிமைகளைக் குறைவுபடுத்துவதும், தாழ்த்துவதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதற்குக் குலத் தலைவியிடம் சமுதாயத்திற்கிருந்த நம்பிக்கையே அடிப்படைக் காரணம் என்கிறார்.

முற்காலத்தில் 'கைனோ சென்ட்டிரிக் பண்பு' (Gyno Centric Culture) இருந்தது. இது பெண்களை நம்பிக்கைகளின் அடிப்படையிலும் சமூக அமைப்பிலும் மையப்படுத்தப் பட்டிருப்பதைக் காட்டும் ஓர் அமைப்பாகும். முந்தைய பெண் தெய்வ வழிபாட்டில், பெண்களுக்கே உரிய, மகப்பேற்றுத் திறன் (Capacity of give birth) போற்றப்பட்டது. அது மதிப்பையும், மலைப்பையும் (அதிர்ச்சியையும்) கொண்டதாகக் கருதப் பட்டது. அத்துடன் பெண்மைத் தன்மையே வளமையையும் செழுமையையும் அளிக்கும் குறியீடாகவும் எண்ணப்பட்டது. பெண்கள் மூலசக்தியாகவும் கருதப்பட்டனர். ஆனால் இம்முறைகள் தந்தைவழிச் சமுதாய விதிகளால் (Patriorchial Rule) குழிதோண்டிப் புதைக்கப்பட்டன.

உளவியல் ரீதியில் தந்தைவழிச் சமுதாயம் பெண்களைத் துணை வகையாகவே (Subgroup) கருதுகிறது. தந்தைவழிச் சமுதாயத் தன்மை பண்பட்ட அறிவுநிலைக்குச் (Intellectual Culture) சமமானது. இதுவே உண்மையான உலகம் என்றனர். ஆண்களைப் பல நிலைகளில் பொதுமைப்படுத்திக் காட்டியது. ஆனால், பெண்களைத் தாய், சகோதரி, பேணிப் பாதுகாப்பவள் என்று ஆங்காங்குக் குறிப்பாகச் சுட்டியது. இப்பகுப்புகள் எல்லாம் பெண்ணுக்கு ஒரு புறச் சார்வுத் தன்மையை அளித்தலையே காட்டுகிறது. எனவே பெண்களைப் பற்றி இரண்டாம் நிலையிலோ அல்லது துணைமை வகையாகவோ சுட்டும் தன்மை மாற்றப்பட வேண்டும். பெண்களுக்கு முதன்மைத் தன்மை கொடுப்பதுடன், பெண்கள் சிறப்புக்குரியவர்கள் என்று அதிகாரப் பூர்வமாகப் பெண்களைப் பற்றி முழுமையாக எடுத்துக்காட்ட வேண்டும்.

மேலும் சமுதாயம் பண்பாடு பற்றிய பொருள் வேறுபாடுகளும் விவாதங்களும், ஆண்,பெண் என்ற இரு இனத்திற்குரியதாகச் சொல்லப்பட்டிருந்தாலும், சமுதாயத்தில் ஆண்தான் முதன்மைப் படுத்தப்படுகிறான். நமது எழுத்து ஒழுக்க வரலாறுகளில் ஆண்களின் ஊகம்தான் முதலில் உருப்படுத்தப்பட்டுள்ளது.

உலக மனித அனுபவங்களிலிருந்து ஆணியப் பார்வையாளர்கள் அவர்களுக்குச் சாதகமான கூறுகளை மட்டும் எடுத்துக் கொண்டனர். பெண்களைப் பற்றிய பார்வை குறுகலாகவும், தற்சார்பில்லாப் பார்வையற்றதாகவும் இருந்தாலும், பெண்களைப் பற்றிக் குறைவாகவோ சிறுபான்மை நிறைவாகவோ எண்ணுவதில் மேலாதிக்கம் பெற்றிருந்தனர்.

எனவே தந்தைவழிச் சமுதாய விதிகளைத் (Patriorctial rules) தூக்கி எறிய மறுபடியும் இலக்கியத்தில் கைனோசென்டிரிக் முறை வரவேண்டும் என்று ரிச் வலியுறுத்துகிறார்.

## தாய்மைத்துவ அமைப்பிலிருந்து விடுபடுவதற்குரிய விதிமுறைகள் (Free from Mother hood):

ஆண்களின் அதிகாரபலமே ஆதிக்கமாக மாறி இருக்கிறது. அவ்வதிகாரப் பலத்திற்கு முன் பெண்கள் குறிப்பிட்ட இடத்தை வகித்துத் தம் பலத்தை, தம் திறனை நிர்ணயம் செய்ய வேண்டும். சமுதாயத்தில் தம் திறன்களை, தம் இடங்களை நாடியறிந்து உணர்வுகளைப் பண்படுத்த வேண்டும்.

பெண்கள் பற்றிய வரலாற்று மூலங்களை, பண்பாட்டு வரலாறுகளை நாமே எழுதியளிக்க வேண்டும். அதில் பெண்களைத் துணை நிலையாக (Subgroup) ஆண்கள் காட்டிய தன்மைகளைத் தவிர்க்க வேண்டும்.

பெண்கள் சமுதாயத் தர நிலைகள் அனைத்திலும் ஈடு இணையற்ற நிலைக்கு உயரவேண்டும். அதற்கு அனைத்துத் துறைகளிலும் (குழந்தைக் கட்டுப்பாடு, குழந்தையை உருவாக்குவது போன்றவற்றிலும் கூட) புதிய முறைகளை, தொழில் நுட்பங்களைச் சுதந்திரமாகக் கட்டுப்பாடுகளில்லாது பின்பற்ற வேண்டும் என்கிறார்.

பெண்கள், தாய்மைத்துவம் என்ற உணர்வுக் குவியலில் அடிமைப்படுத்தப்பட்ட அமைப்பை அழிக்க வேண்டும்.

பெண்களைப் பற்றிய முழுமையான உளவியல் அமைப்பை உருவாக்கவேண்டும். அதில் தனது உடலியல் அமைப்பை முழுமையாக- உணர்ச்சிப்பூர்வமாகத் தானே அறிதல் வேண்டும்.

உளவியலமைப்பு பெண்களின் இனப்பெருக்க முறைகளுடன் தொடர்புபட்டிருப்பதை உணர்த்துதலும் அவசியமானது.

இனப்பெருக்க அமைப்பிருந்தாலும், பெண்களுக்கு அவர்களுடைய உடம்பின் மீது அவர்களுக்குரிய உரிமையை அவ்வர்கள் நிலைநாட்டிக் கொள்ளவேண்டும். இது மனித சமுதாயத்தை மாற்றுவதற்கு முக்கியமான ஒன்றாகும்.

உலகத்திற்குரிய புதிய கொள்கைகளைப் படைத்து அறிவுறுத்தும் படைப்பாளராகவும் ஆக வேண்டும். பெண்கள் படைப்பு ரீதியாகச் சிந்திப்பது மட்டுமின்றிப் பாலியல், அரசியல், புலனறிவு, சக்தி, தாய்மை, வேலை அல்லது பணி, சமுதாயம், நெருக்க உறவு (Intimacy) சமுதாயத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ளுதல் முதலியன இன்றியமையாதவை.

ஆணாதிக்கச் சமுதாயம் வரையறுத்த எல்லைகளிலிருந்தும், தாய்மைத்துவத்திற்குரிய தீவிர மன உணர்வுகளிலிருந்தும், தாய்மையற்ற நிலை, பொருளாதாரத்தில் ஆணுக்குச் சமமில்லாத நிலை போன்ற தாழ்வு மனப்பான்மை உணர்வுகளிலிருந்தும் தீவிர மாற்றமும் விழிப்புணர்வும் பெறுதலும் இன்றியமையாத ஒன்றாகும்.

படைப்புக்களில் பெண்களின் உணர்வுகள் மையப் படுத்தப் படுவதுடன் அந்த உணர்வுகளைப் பெண்களுக்கு (வாசகர்களுக்கு) வலியுறுத்த வேண்டும். அத்துடன் அவ்வுணர்வுகளை அறியச் செய்வதில் ஆர்வத்தையும் படைப்புக்களில் தூண்ட வேண்டும் என்று விரித்துரைக்கிறார் ரிச்.

இவ் அணுகுமுறைகள் படைப்பாளர் - வாசகர்- பெண்கள் முதலியோர் கடைப்பிடிக்கும் முக்கோண நிலைகளில் அமைகின்றன.

இம்முறைகள் விழைவுக் கற்பனை மாற்றமாகச் (Utopian change) சிலருக்குத் தோன்றலாம். எனினும் இன்றைய அடக்குமுறைச் சமுதாயத்தில் புதிய சமுதாயப் பண்பாட்டு விழிப்புணர்வை உண்டாக்க இம்முறைகள் தேவைப்படும். இதன்வழிப் பெண்மைக்குரிய அனைத்துப் பண்புகளிலிருந்தும் விடுபடுவதோ, தீய அடக்குமுறை விளைவுகளை உண்டாக்குவதோ இதன் நோக்கமன்று; தாய்மைத்துவம், பெண்ணடிமை என்ற அடக்குமுறை உணர்விலிருந்து

மீண்டு நல்ல விளைவுகளை உண்டாக்கவே பயன்பட வேண்டும் என்பதில் கவனமாக இருத்தல் அவசியம் என்கிறார்.

## தாய்மைத்துவத் தொகுப்புரையும் 'வீடு' நாவலில் தாய் பாத்திரம் படைப்பும்:

'தாய்மை' என்ற நிலையில் பெண்களும் தாயும், தந்தை வழிச் சமுதாயத்தில் அடிமைப்படுத்தப்படுதல், கீழ்நிலையாக்குதல், துணைநிலையாகப் பயன்படுத்தப்படுதல் பாலியல் உணர்வுகளுக் குட்படுத்தப்படுதல், பிள்ளை பெறும் சாதனமாகவும் போகப் பொருளாகவும் கருதப்படுதல் என்ற பல நிலைகளில் காட்டப் படுகிறார்கள். மேலும், ஆணுக்கிணையான பொருளாதாரமின்மை, வலுவின்மை,செயல்பாடுகளில் பின்னடைந்திருத்தல் தாய்மை என்ற நிலையில் பெண்களை அடிமைத்தனத்திற்குட் படுத்துகின்றன. இவ்வடிமைத்தனம் மாற, முதலில் பெண்கள் தாய்மை என்ற முதன்மைத்துவக் கற்பனைகளிலிருந்து, தீவிர உணர்வுப் பந்தங்களிலிருந்து விடுபடவேண்டும்.

'தாய்மை' என்ற உணர்வுதான் அவளைத் 'தாய்மைத்துவம்' என்ற நிறுவனமாகக் காட்டுகிறது. எனினும் தீவிர உணர்வுப் பந்தங்களுக்கு ஆட்படாதிருந்தால் தான் அத்தாய்மைத்துவம், அடிமைத்தனத்திற்கு உட்படுத்தப்படாத நிறுவனமாக இருக்க முடியும் என்பார் ரிச்.

'ரிச்சின்' விவாதங்கள் தாய்மைத்துவப் பண்புகளையோ, குழந்தைப் பேற்றையோ அழிக்க வற்புறுத்தவில்லை. இதற்கு மாறாக அவர் அத்தாய் புதுவிடுதலை உணர்வுகளைப் பெற வேண்டும்; விழிப்புணர்வுடன் சிந்திக்க வேண்டும்; அப்பொழுதுதான் அடிமைத்தன உணர்வின்றி, எதிர்காலத்தில் வாழ முடியும் என்கிறார்.

ராஜம் கிருஷ்ணன் 'வீடு' என்ற நாவலில் வரும் தேவி என்ற தாய்ப்பாத்திரப் பண்பு இவண் குறிப்பிடத்தக்கது.

'தேவி' குடும்பப் பொறுப்பில் உழலும் தாயாக, மனைவியாகக் காட்டப்படுவதுடன், குடும்பம் என்ற அமைப்பை விட்டு விழிப்புணர்வு கொண்ட சமுதாய மாற்றம் விரும்பும் பெண்ணாகவும் படைத்துக் காட்டப்படுகிறாள்.

**தாயாக:**

தேவியின் மகள் நளினி தன் தாயின் உணர்வுகளை மதிக்காதிருந்தாலும், தேவி தாய் என்ற நிலையில் அவளுக்கு ஒரு குறையும் வைக்காது கவனிக்கிறாள்.

இதுபோலத் தன் மகன் துரையைத் தன் கணவன் வெறுத்தாலும், தாய் என்ற நிலையில் அவன் மீது குறைவிலா அன்பு செலுத்துகிறாள். அவன் தன் உணர்வுகளுக்குத் தன் பேச்சுக்களுக்கு மதிப்பு கொடுக்கும் மகனாக இருப்பான் என்று நம்புகிறாள்.

**மனைவியாக:**

குடும்பம் என்ற அமைப்பில் மரபு தழுவிய பெண்ணாக, கணவனுக்குக் கட்டுப்பட்ட மனைவியாக இருக்கிறாள். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற ஆன பிறகு, தன்னை யாரும் கவனிக்க மாட்டார்கள் என்ற தாழ்வு மனப்பான்மை உள்ள தன் கணவனுக்கும் அவனுடைய கடுஞ் சொற்களையும் பொருட்படுத்தாது அவனுடைய மன உணர்வுகளை உணர்ந்து உணர்ந்து பணிவிடை செய்கிறாள்.

இவ்வாறு குடும்ப அமைப்பில் கட்டுப்பட்ட பெண்ணாக இருக்கிறாள். கணவன் நிராகரிக்கிறான்; உதாசீனப்படுத்துகிறான். கணவனின் குத்தலான பேச்சுகள் அவள் மனத்தில் மிகுந்த கசப்பை ஏற்படுத்துகின்றன. அத்துடன் தன் பிள்ளைகள் கூட அவள் உணர்ச்சிகளை மதிக்காதத் தன்மையும் அவளைத் 'தாய்மை' என்ற நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, வீட்டை விட்டு வெளியேற அவளை நிர்ப்பந்திக்கின்றன.

'தேவி' தாய் என்ற நிலையிலிருந்து, பிள்ளைகளைக் கவனிக்கவும், தன் கணவன் வேலையிலிருந்து நின்ற பின்பு, வீட்டில் தையல் கற்றுக்கொடுத்தும், வெளியில் தையல் வேலைக்குச் சென்றும் பொருளாதாரப் பற்றாக்குறையை ஈடுசெய்கிறாள்.

ஆனால், அதுவே அவள் கணவனை, தேவி எல்லாவற்றிலும் தலைமைத்துவம் பெற்றுத் தன்னை நிராகரிக்கிறாள் என்று எண்ண வைக்கிறது. வேலைக்குச் சென்று அவள் சம்பாதிப்பதால் தான் இந்நிலை என்று அவளிடம் அவள் கணவன் பலமுறை சொல்லியும்

காட்டுகிறான். தன் கணவனை வேறுபாடின்றி மதிக்கும் பொழுதும் தன்னை, தன் தனிப்பட்ட உணர்வை அவன் ஒருக்காலும் மதிக்காதது அவள் மனத்தில் தீராத வருத்தமாகவே இருக்கிறது.

இந்நிலையில் தன் தங்கை கடிதத்தைப் பார்த்தவுடன் அவளின் உடைமைப் பொருளை, தையல் இயந்திரத்தை உடைப்பது தேவியின் மனத்தை மிகவும் நோக வைக்கிறது. அந்நிலையிலும் பக்கத்து வீட்டிற்கு எதுவும் தெரியவிடாமல் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றும் தாயாக, மனைவியாக அக் குடும்ப உறவில் பின்னிப் பிணைந்து நிற்கிறாள்.

ஆனால், வேலையின் பொருட்டு வெளியில் செல்வதும் ரமணியம்மாள் போன்ற சமூகச் சேவகியின் பழக்கமும், தேவியின் மனத்திற்கு இதமளிக்கின்றன. ''பொதுவாகப் பெண்ணின் சிறப்பியல்பு, மக்களைப் பேணி, அரவணைத்து, அன்பு செய்யும் பாங்காக இருக்கிறது. பொறுமையும், திறமையும் தேவையற்ற அதிகார ஆணைக்கு ஒடுங்கும் வரையறைகளிலும் தான் விரையமாக்க வேண்டுமா? குடும்ப வரையறைகள் சமுதாயம் என்று அகலட்டுமே'' (வீடு ப,11) என்ற ரமணியம்மாளின் சமுதாய விழிப்பு உணர்வு குறித்த பேச்சுகளும் அவளை உணர்வு பூர்வமாகப் பெண்களின் நிலையைச் சிந்திக்க வைக்கின்றன.

அதே சமயம் தனது தோழி திரிவேணியின் மகள் ரஞ்சனியின் உறவும், தனித்துவம் விரும்பும் அவளது கொள்கைப் பிடிப்பும், தேவியின் மனத்தை ஈர்க்கின்றன. இந்தச் சமுதாயம் ''ஒரு ஆணுக்குச் சொந்தமாக, சொத்தாக இருப்பதைத் தான் அவளுக்கு உகந்ததாக விதித்திருக்கிறது. அவளுக்குத் தனித்துவம் எங்கே இருக்கிறது'' என்ற அவளது பேச்சுக்களும் தேவிக்குத் தன்னையே ரஞ்சனி தன் உரையாடலில் நினைவூட்டுவதாக எண்ணுகிறாள். அவளது தனித்துவ நோக்கு தேவிக்கு மிகுந்த விழிப்புணர்வை அளிப்பதுடன் தன் உணர்வுகளின் வெளிப்பாட்டிற்கு ஒரு வடிகாலாகவும் அமைகிறது.

தேவியின் உணர்வுகளை மதித்த ரஞ்சனியும் வீட்டை விட்டுச் செல்லுகிறாள். அப்பிரிவு வருத்தமும், தன் வீட்டாரின் புறக்கணிப்புக்களும், அவளை ரஞ்சனியிடம் ''நானும் உன்கூட ஹாஸ்டலுக்கோ, எங்கோ வரட்டுமா'' (வீடு ப.202) என்று கேட்க

வைக்கிறது. அதற்கு ரஞ்சனி ''கொஞ்சம் பொறுத்துக் கோங்கோ ஆண்ட்டீ... காலம் காலமான அமைப்பை அது இடிஞ்சு விடும் நிலையில் புரையோடிப் போயிருந்தாலும் நீங்க இப்படி முன்னேற் பாடில்லாத நெகிழ்ச்சியிலே மாற்றிவிட முடியாது. எங்கம்மா உணர்ச்சிவசப்பட்டாள். நீங்க அப்படி இல்ல. இது உயிரில்லா கட்டிடம் இல்ல; உயிருள்ள ஸ்தாபனம் மாதிரி'' (வீடு ப.203) என்று மொழிகிறாள். இதன் வழி ஆசிரியர், ஸ்தாபனம் மிகவும் பலமானது. அதை ஒரு பெண் அத்துணைச் சுலபமாக உடைக்க முடியாது என்பதையும் உணர்த்துகிறார். ஆனால் அதே நேரம் வீடு.... வீடு என்ற ஸ்தாபனத்தை எதிர்த்துப் போராடும் தாயையே இங்குக் காட்டுகிறார்.

மேலும் தன் மகன் துரை, ரஞ்சனிக்கு வாழ்வு கொடுப்பான் என்று சம்மதம் கேட்டபொழுது அவன் மறுப்புணர்வு அவள் மனத்தை ஆழப் பாதிக்கிறது. அப்பொழுது ''ஆயிசு முழுக்க அப்ப நான் கல்லாய் உணர்ச்சியில்லாத அடிமையாக இருக்கணுமா? எனக்கும் எத்தனையோ; ஆசையிருக்கு. வாயிருந்தும் வரவில்லை. அதனால் தான் மனசு வெறுத்து வெளியில் போனேன்'' என்கிறாள். இப் பேச்சுக்கள் குடும்பத்தில் தன் உணர்வுகள் மதிக்கப்படாது, தனித்துவம் இழந்த தாய், மனைவி என்ற நிலைகளில் அடிமைப் படுத்தப்பட்ட தன்மைகளையே எடுத்துக்காட்டுகின்றன.

தேவி தான் விரும்பிய தன் உணர்வுகளில் ஐக்கியமான வீட்டைத் திருமணத்தின் பொருட்டு விற்க வேண்டாம் என்று வாதாடுகிறாள். எனினும் அவள் பேச்சைக் கணவன் சிறிதும் மதிக்கவில்லை. தன் சம்மதத்தைப் பெறாது வீட்டை விலை பேசுகிறான். தன் மகளின் திருமணச் செயல்பாடுகளில் தன்னை மூன்றாமவளாக வீட்டிலுள்ள எல்லோரும் நடத்துவதும் இவள் மனத்தில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்துவதுடன் அவை மாறாத வடுக்களாகத் தங்கி விடுகின்றன.

தேவிக்கு அவளது நண்பர்கள் பாராட்டுவிழா நடத்துகின்றனர். அப்பொழுது தன் மகளைப் பெண் பார்க்க வருவார்கள் என்று தெரிந்தும் அதற்குரிய வேலைகளைச் செய்துவிட்டுத் தன் நட்புரிமையின் நிமித்தம் விழாவிற்குச் சென்று வீட்டிற்கு அன்று தாமதமாகத் வருகிறாள். மரபு தழுவிய தாய்க்கு இச்செய்கை நம்ப முடியாததாகத் தோன்றலாம். இவளும் குடும்ப அமைப்பில் உழலும் உணர்வுப் பந்தத்திற்குக்

கட்டுப்பட்ட தாய்தான். இருந்தாலும் அவளது வீட்டிலுள்ளவரின் புறக்கணிப்புக்களும், அவள் தனி உணர்வுகளை மதிக்காது நசுக்கும் தன்மையும், அவளை ஏதாவது பொது நிகழ்ச்சியில் பங்கு கொள்ள உந்தித் தள்ளுகின்றன. மேலும் அவள் பெற்ற தன்னைப் பற்றிய விழிப்புணர்வும், வெளி உலக உறவும் அவளை அவ்வாறு செய்ய வைக்கின்றன.

அவள் கணவன் அவனது தங்கையின் மகள் வீட்டிற்கு எப்பொழுதும் உரிமையாகச் செல்கிறான். அவளுக்கு மட்டும் வீட்டில் நடக்கும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் முக்கியத்துவம் கொடுக்கிறான். ஆனால் அதே நேரம் தன்னைத் திருமணம் செய்த நாளிலிருந்து தன் குடும்பத்தினரை மதிக்காததும், தன் மகள் திருமணத்திற்குக் கூட தன் தங்கை கல்யாணியை முறைப்படி முழு மனத்துடன் அழைக்காததும் அவளுக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றன. அவளையும் அவள் குடும்பத்தினரையும் தன் கணவன் தொடர்ந்து அவமதிப்பதாக வருந்துகிறாள் தேவி. இந்நிலையும் அவள் தங்கை மீது அவளுக்கு அனுதாபத்தையும் பாச உணர்ச்சியையும் மிகுவிக்கிறது. இறுதியில், குடும்பத்தில் அனைவரும் தன்னை மதிக்காத தன் தனித்துவத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்காத நிலையில், தன் மகளின் திருமணத்தன்று தன் மகளைக் குறித்துக் கவலைப்படாது தாய்மை என்ற பந்தத்தை, குடும்பப் பந்தத்தைத் துறந்து, வெறுத்துத் தனிமை, தனித்துவம் நாடி வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

## முடிவுரை

'வீடு' என்ற தலைப்பே தாய்-மனைவி என்ற நிலையில் குடும்பத் தலைவி என்பவள் அனைத்திலும் கட்டுப்பட்டவள்; எந்நிலையிலும் எப்பொழுதும் தன் உணர்வுகளை வெளியிட வாய்ப்பில்லாதவள் என்பதையே குறியீடாக உணர்த்துகிறது.

பெண்ணியத் திறனாய்வாளர்கள் தாய்மைத்துவம் பற்றிக் கூறுவது போலக் குடும்பம் என்ற அமைப்பில் தாய், மனைவி என்ற நிலைகளின் தேவி என்ற கதைத் தலைவியின் தனித்துவ உணர்வுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. அவளுடைய உள்ளுணர்வுகளைத் தாய் என்ற நிலையில் பிள்ளைகள்கூட மதிக்கவில்லை. தன் குடும்பத்தில் உள்ளவர்களுக்குத் தாய், மனைவி என்ற நிலைகளில் மாறாது

பணிவிடை செய்தும், நேசித்தும் அவர்களிடமிருந்து அவளுக்கு எந்தவிதப் பிரதிபலிப்பும் கிடைக்காதது பேரதிர்ச்சியாக இருக்கிறது. எனவே அவ் அடிமைப்படுத்தப்பட்ட நிலையிலிருந்து மீற வீட்டை விட்டு வெளியேறுகிறாள். இவ்வாறு வெளியேறும் நிலையானது, தன் தனித்துவத்தை, தன்னை, தன் உள்மன உணர்வுகளைப் பாதுகாக்கவும் உணர்வுச் சுமை அழுத்தங்களிலிருந்து மீளவும் விரும்பும் ஒரு பெண்ணின் நிலைமையே வெளிப்படுத்துகிறது. பெண்ணியச் சிந்தனைகள் தன் தனித்துவத்தைப் பாதுகாக்கப் பெண் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தவில்லை; ஆனால் அவை சமுதாயம் பெண்ணைப் பெண்ணாக, தாயாக, மனைவியாக மதிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. தேவி என்ற தாய்ப் பாத்திரம் முடிவில் பெறும் மாற்றங்கள் வழி மேற்கூறிய உண்மைகளை எடுத்துக்காட்டுகிறார் ஆசிரியர். ஒட்டுமொத்தமாகப் பெண்களிடம் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த விழைகிறார் ஆசிரியர்.

தேவியைக் குடும்பம் என்ற கட்டமைப்பை உடைத்துக் கொண்டு செல்ல வைத்திருப்பதினால் இவரைத் தீவிரவாதப் பெண்ணியவாதி என்று கூறுவாருமுண்டு. எவ்வாறாகினும் இராஜம் கிருஷ்ணனிடம் தீவிரப் பெண்ணியவாதியின் சிந்தனைத் தடம் படிந்திருப்பதை உணரமுடிகிறது. இன்னும் இவரது நாவல்கள் இந்நோக்கில் விரிவாக ஆராயப்பட வேண்டும்.

# 8. பெண் எழுத்தும் - பெண்ணிய உளப்பகுப்பாய்வும்

இன்றைய திறனாய்வுச் சூழலில், பெண்ணிய உளப்பகுப்புத் திறனாய்வின் அடிப்படையில் பெண் எழுத்துக்களைப் பார்க்க வேண்டிய தேவை உள்ளது. பெண்ணிய நோக்குடைய எழுத்துக்களில் ‘வாஸந்தியின்’ படைப்புக்கள் குறிப்பிடத்தக்கவை:

‘‘நான் சில விஷயங்களைப் பற்றித் தீவிரமாகச் சிந்திக்கின்றேன். சமூகம் அவளுக்கு இழைக்கும் அநீதிகள் மிகுந்த கோபத்தை ஏற்படுத்துகின்றன. ஏன் இந்த மனநிலை! சொந்த வாழ்வில் ஏமாற்றமோ என்று சிலர் கேட்கின்றனர். இது அபத்தமாகப் படுகிறது. சிந்திக்கத் தெரிந்த எந்தப் பெண்ணும் கவலைப்பட வேண்டிய விஷயங்கள் அல்லவா! சிந்திக்கப் பழைய பாதையில் போவதால் தானே சமூகம் நம்மை உபயோகித்துக் கொள்கிறது. பெண்ணுக்கு இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றிய பிரச்சினை ஒவ்வொரு பெண்ணுக்கும் இருக்கவேண்டும். இதை எனது எழுத்துலகில் தெளிவுபடுத்தப் பார்க்கிறேன். பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது எழுத்துலக லட்சியம்’’[1] என்ற வாஸந்தியின் கூற்று அவரை ஒரு பெண்ணியவாதியாக இனம் காட்டுகிறது; அவரது படைப்பு நோக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

தந்தை வழிச் சமுதாய அமைப்பில், பெண்ணின் அடையாளம் என்பது, ஆணால் புனையப்பட்ட ஒன்றுதான். இந்நிலையில் தான் ஆண், பெண் உறவு நிலையில் ஆணின் அதிகாரம் பெண் உலகிற்குள் புகுந்தது. இதை வெளிப்படுத்தத் துணை புரிகின்ற, பெரியகளம் படைப்புக்களாகும். அதுவும் பெண் படைப்புக்களின் வழிதான், பெண் பற்றி ஆண் கற்பித்த அடையாள ஒடுக்கல்களுக்கு மறுபரிசீலனை காணமுடியும்.

பெண்ணிய உளப்பகுப்பாய்வில், பெண்ணியத் திறனாய்வாளர்கள், பெண்ணின் பேச்சுக்கும் நனவிலி மனத்திற்கும் இடையிலுள்ள உறவுகளை ஆராய்ந்து விளக்கியுள்ளனர். பெண்ணின் பாலியல் அனுபவம், அமுக்கப்பட்டதாகவும் நனவிலித் தன்மை உடையதாகவும் பெண்ணிய உளப்பகுப்பாய்வு சுட்டியது. சுருதிபேதங்கள் (1981) நிழலாட்டம் (1992) கடைசி வரை (1996) யுகசந்தி (2000) போன்ற தம் படைப்புக்களில் பெண்ணின் பாலியல் அனுபவங்கள் அமுக்கப்பட்டிருப்பதால் ஏற்படுவதின் விளைவுகளையும் அதை மாற்றப் பெண்களிடம் ஒரு விழிப்புணர்வு ஏற்படுத்த முயலும் தன்மையினையும் உணரமுடிகிறது.

மேற்குறிப்பிட்ட கருத்துக்களின் பின்னணியில், இவரது எழுத்துக்களில் புலப்படும் நனவிலி மனத்திற்கும் பெண் பேச்சுக்கும் இடையிலுள்ள உறவுகளை 1) அடையாளச் சிக்கல், 2) பாதுகாப்பின்மை என்ற பயமும் நனவிலி மனச் செயல்பாடும், 3) தாய் -தந்தை என்ற மையம், 4) ஹிஸ்டீரியா மன உணர்வும் பெண்களும், 5) தந்தை மகள் செயல்பாடும் எதிர்ப்புத்திறனும், 6) தாய் மகள் என்ற உறவும் உணர்வுச் செயல்பாடும் என்ற நிலைகளில் பாகுபடுத்தி உணர முடிகின்றது.

## அடையாளச் சிக்கல்

வாஸந்தி 'யுகசந்தி' என்ற நாவலில் அடையாளச் சிக்கல் என்ற தொடரை நேரடியாகப் பயன்படுத்தவில்லை. ஆனால் பெண்களுக்குரிய பண்பாட்டுச் சிக்கல், பண்பாட்டு இடைவெளியை வாஸந்தியின் எழுத்துக்கள் அடையாளப்படுத்திக் காட்டுகின்றன. எனவே பெண்களுக்குரிய பண்பாட்டுச் சிக்கல், பண்பாட்டு இடைவெளி என்ற பொருட்களில் அடையாளச் சிக்கல் என்ற தொடர் இங்குப் பயன்படுத்தப்படுகிறது. கதைத் தலைவன் கணேசன் சோசலிஸ்டு; தனக்குச் சமூக அந்தஸ்து கிடைக்கும் என்ற நிலையில் வெள்ளைத்தோலைக் கண்டு மோஹித்து, க்ளாரா என்ற வெளிநாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். 'தான் இந்திய ஆணாகவே இருக்கப் பெண் சதி சாவித்ரியாக மாறிப் போனது தான் இங்கு வினோதம்' (ப.83) என்ற வரிகள் பெண்தான் குடும்ப வாழ்க்கையில் தன் தனிப்பட்ட இலட்சிய உணர்வுகளுக்கு இடம் கொடுக்காது. விட்டுக் கொடுப்பவளாக இருக்கவேண்டும் என்ற சமூக எதிர்பார்ப்பை உணர்த்துகின்றன.

அப்படி இருந்தும் இங்கு க்ளாராவின் மாமியாகிய மீனாட்சிக்கு க்ளாராவிடம் ஒட்ட முடியவில்லை. அவளது அடிமனம் அவளை வெள்ளைக்காரியாச்சே என்றே எண்ணுகிறது. இங்கு ஒரு பெண் தம் குடும்பத்தில் நல்ல மனைவியாய் இருந்து, இரண்டு பிள்ளைகளைப் பெறுகிறாள். ஆனால் வேற்றுக் கலாச்சாரத்தைச் சார்ந்த பெண் என்பதாலேயே, மாமிக்கு க்ளாராவை மருமகளாக மனநிறைவுடன் ஏற்றுக் கொள்ள இயலா நிலையை உணரமுடிகிறது. அவளுடன் பேசுவதும் இல்லை; இறுதியில் தனது மகன் தன்னுடன் வேலை பார்க்கும் சியாமளாவை இரண்டாவதாகத் திருமணம் செய்து கொள்கிறான். அவள் ஏற்கெனவே திருமணமானவள். ஒரு குழந்தைக்கும் தாய்; இந்நிலையிலும் மீனாட்சி தன் மகனை ஏன் என்று கேட்க முன்வரவில்லை. அவள் உள்மனம் க்ளாரா நல்ல பெண் என்று நினைத்தாலும் பண்பாட்டுச் சிக்கல் க்ளாராவுடன் ஒட்ட மறுப்பதுடன் அவளுக்குச் சார்பாகப் பேசவும் மறுக்கிறது. சியாமளா தமிழ்நாட்டுப் பெண் என்பது மட்டும் இங்குக் காரணமில்லை. அடுத்த நிலையில் பெண்ணுக்குப் பெண் எதிரி என்பதைவிடக் கலாச்சார இடைவெளி தலைமுறை இடைவெளி முதலியவை இங்குக் காரணங்களாக அமைகின்றன என்று உய்த்துணர முடிகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேல் வயதான காலத்தில், தான் யாரைச் சார்ந்திருப்பது என்ற உரிமைச் செயல்பாடும் இங்கு மற்றொரு காரணமாகிறது.

சார்ந்துவாழ வேண்டிய தன்மையும் பொருளாதார எதிர்பார்ப்பும் இருப்பதால், மீனாட்சியும் தன் மகன் கணேசனுடன் வெளியேறிச் செல்கிறாள். பெண்களைப் பெண்கள் ஏற்றுக் கொள்வதற்கும் மறுப்பதற்கும் பண்பாட்டுச் சிக்கல் என்பதுடன், ஆணின் தலைமைத்துவமும், யாரையும் சாராது தனித்து வாழ முடியாத முதிய தாயின் நிலைப்பாட்டினையும் இங்கு ஆசிரியர் உணர்த்துகிறார்.

இத்துடன் இந்த மீனாட்சி என்ற தாயின் பண்பாட்டுச் சிக்கல் பற்றிய உணர்வுகளுக்கு முற்றுப்புள்ளி இட்டிருந்தால், பெண்ணிய உளப்பகுப்பாய்வு அணுகுமுறைக்கு இங்கு இடமில்லாமல் போயிருக்கும். இச்சிக்கல் பற்றிய விலக்கு உணர்வினை முதிய தாய்க்குரிய தற்சார்பு என்ற மரபு வழிப்பட்ட பயத்தின்வழி நீக்குகிறார். அத்துடன் பெண்களின் அடிமனத்தில் ஒரு விழிப்புணர்வைச் சிந்திக்க வைக்கிற பொழுது வாஸந்தி 'புதிய பெண்ணியத் திறனாய்வுக்குத்' தடம் பதித்துள்ளார் என்று கருத இடமுள்ளது.

## பாதுகாப்பின்மை என்ற பயமும் நனவிலி மனச் செயல்பாடும்

வாழ்க்கை கணவனுக்குப் பின் அர்த்தமற்றுப் போய் விடுமோ என்ற பயம் பெண்களின் நனவிலி மனத்தில் உறைந்து கிடப்பதை ஆசிரியர் தம் நாவல்களில் சுட்டுகிறார். தந்தையின் ஆளுகைக்கு உட்பட்ட குடும்பத்தில் குடும்பத்தில் தலைவன் இறந்த பின் அந்தத் தாயின் அடிமனத்தில் தனக்கு யார் பாதுகாப்பு? தான் எங்கே எப்படி வாழ்வது? என்ற பயம் எழுவதை **'நிழலாட்டம்'** **'யுகசந்தி'** ஆகிய நாவல்களில் வாஸந்தி காட்டுகிறார்.

இந்த தனிமைப் பயம் தான் மீனாட்சி, கணேசன் இரண்டாவது திருமணம் செய்து வீட்டை விட்டுத் தனியே வரும்போது, தானும் அவனுடன் புதிய வீட்டிற்குச் செல்வதற்குக் காரணமாகிறது.

''இங்கு முதியோர் இல்லத்திற்குச் சென்றேன். பாட்டி ஞாபகம் வந்தது. அவர் செய்தது ஒன்றும் தப்பில்லை. அந்த வயதில் பாதுகாப்பின்மை பற்றின பயம் தான் பிரதானமானது. நீ அதைப் புரிந்துகொள்ள வேண்டும்'' (யுகசந்தி ப.124) என்று க்ளாரா தன் மகள் காயத்ரிக்கு எழுதும் கடிதம் மூலம் பாட்டியின் பயத்தை ஆசிரியர் நியாயப்படுத்துகிறார்.

ஆனால் இந்த முதிர்வயதில் ஏற்படும் பயம் தற்சார்பின்மை என்ற மரபின் அழுத்தம் தன்னைப் போன்ற பெண்களைப் பாதிக்கக் கூடாது. மருமகளானாலும் பெண்களின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் என்ற விழிப்புணர்வையும் இந்த மீனாட்சியின் மனத்தில் ஆசிரியர் கதைப்போக்கில் உணரச் செய்கிறார். அவளது மனத்தைக் குறுகிய பார்வையிலிருந்து மனிதாபிமானம் என்ற அகலமான பார்வைக்கு நாவலின் பிற்பகுதியில் ஆசிரியர் இழுத்துச் செல்கிறார்.

க்ளாரா ஆசார அனுஷ்டானங்களுக்கு எல்லாம் மதிப்பு கொடுத்தும் மன உணர்வுகளால் ஒட்ட முடியாத நிலையில் சியாமளா வீட்டிற்குச் செல்கிறார். இங்கு அவள் தன் இனத்தைச் சார்ந்தவளாக இருந்தும், தனது ஆச்சார அனுஷ்டானங்களுக்குத் தடையாக இருப்பதாலும் இங்கும் மீனாட்சியால் ஒட்ட முடியவில்லை.

சியாமளாவின் குழந்தை, வேறு ஒருவனுக்குப் பிறந்தவள். தன் சொந்த இரத்தமின்மை காரணமாக அப்பேத்தியிடமும் மீனாட்சிக்கு ஒட்ட முடியவில்லை. தன் மூத்த பேத்தி காயத்ரியும் தன்னைவிட்டுப் பிரிந்து விட்ட நிலையில் மனம் இருப்புக் கொள்ளாது தவிக்கிறது. சியாமளாவின் பணமும் பகட்டும் எதையும் மதிக்காத குணமும் அவளை மனம் வருந்தச் செய்கின்றன. எனவே தன் பேத்தி காயத்ரியின் வற்புறுத்தலுக்கிணங்கி இரண்டாவது மகன் குமாரின் வீட்டிற்குச் செல்கிறாள்.

குமாரின் மனைவி ஷகிலா முகமதியப் பெண். ஆனாலும், அவளின் அன்பும் அரவணைப்பும் மீனாட்சிக்கு மனநிறைவைத் தருகின்றன. ஆனால் குமார் ஷகிலாவை நடத்துகிற முறையும் அவளுக்குப் பேரிரக்கத்தைத் தருவதுடன், தான் க்ளாராவுக்குச் செய்த உதாசீனத்திற்கு அவள் மனம் பிராயச்சித்தத்தை நாடுவது போலச் செயல்படுகிறது. ஷகிலாவைக் குமார் பாகிஸ்தான் போரைக் காரணம் காட்டி வெளியே சொல்லாது வெறுத்து ஒதுக்கும்போது மீனாட்சி ஷகிலாவிற்காகக் கரைந்து போகிறாள். கோவிலுக்குச் சென்று அவர்கள் இருவரும் நன்றாக வாழவேண்டும் என்று வேண்டுகிறாள். தான் விருப்பமில்லாது செய்த திருமணத்தில் வந்த மருமகள் ஷகிலா என்ற நிலையே அவளுக்கு அடியோடு மறந்து போய்விடுகிறது.

''நிம்மதியாய் போயிண்டிருந்தது என் வாழ்க்கை; திடும்னு கணேசன் எவளோ ஒருத்தியை அழைச்சிண்டு வந்தான். புள்ளை தானே நமக்குக் கடைசியில் கொள்ளி போடுவான்னு, பைத்தியம் பிடிச்சு அவன்கிட்ட போனேன். ஒருநாள் கூட நிம்மதியா இருக்க முடியலே. என்னமோ தப்பு வாட்டி யெடுக்குது; எனக்குத் தைரியமாக சொல்லத் தெரியல எனக்குப் போக்கிடமில்ல'' (ப.182) **நான் என்ன செய்வேன்! ஷகிலா நல்ல பொண்ணு; ஆனால் இந்த பிள்ளை என்ன பண்ணப் போறான்னு தெரியலை, எல்லாம் சரியாகணும் என்ற பேச்சு, மீனாட்சியின் மனப் பயம், க்ளாராவிற்குச் செய்த உதாசீனத்தை நினைத்து வருந்துதல், அனைவரின் மனநிலைகளையும் புரிந்து பேசும் தன்மை போன்ற செயல்பாடுகள் ஒரு விழிப்புணர்வு மனநிலையை அந்த முதிய தலைமுறைத் தாய் பெற்றதை உணர்த்துகின்றன.**

க்ளாரா திரும்பி வர்ராங்களாம் என்று ஷகிலா சொன்னவுடன் மாமியின் முகத்தில் தெரிந்த சந்தோசம் அவர்களுக்கு வியப்பை அளித்தது. எனக்குப் பெரிய நிம்மதி. அந்தப் பெண் தனியா இருக்கேன்னு நான் கவலைப்படாத நாள் இல்லை என்று மாமி திடீர் என்று சிரித்தார். மாமியின் இந்த மனமாற்றத்தின் வழி **'பெண்களைப் பண்பாட்டுச் சிக்கலின் அடிப்படையில் பெண்களே பார்க்காத நிலை வரவேண்டும்'** என்ற **விழிப்புணர்வை** வாஸந்தி முதிய தலைமுறையினரிடமிருந்து ஆரம்பிக்கிறார்.

இதுபோன்று 'நிழலாட்டம்' என்ற குறுநாவலில் வரும் காமுப் பாட்டியின் தனிமைப் பயமும் குறிப்பிடத்தக்கது. காமுப் பாட்டியின் கணவர் கோயிலில் வேலை செய்பவர். ஒருநாள் திடீரென்று கண்ணை மூடியபோதுதான், ஆகாயம் காலுக்கடியில் சரிந்து விட்டது போல அவள் விழித்தாள். ''ஏமாற்றி விட்டாரே'' என்ற கோபம் வந்தது. அறுபது வருடம் கூட வாழ்ந்தேன். என் நிலை என்ன ஆகுமென்று யோசித்துப் பார்த்தாரா. நா போயிட்டேன்னா இந்தப் பொம்மனாட்டி தனியா என்ன பண்ணுவா என்று அவர் எண்ணிப் பார்த்திருப்பாரா! நாளைச் சாப்பாட்டுக்கு என்ன வழி என்ற கேள்வி எழும் போதெல்லாம் காமுப் -பாட்டிக்குப் பயம் துருதுருக்கும்!! என்று காமுப்பாட்டியின் இறுதிவாழ்வின் பயத்தின் மன உணர்வுகளை ஆசிரியர் இங்குக் கண்முன் நிறுத்துகிறார். இவ்வாறு மேற்சுட்டிய நான்கு நாவல்களிலும் தனிமைப் பயமும், வாழ்க்கை இழந்த துயரும், எதிர்பார்த்து ஏமாந்த சோகமும், தன்னையாரும் ஆதரிப்பார் அற்ற தன்னிரக்கம் போன்ற சூழல்கள் அடிக்கடி காட்டப்படுகின்றன. **வாழ்க்கை பற்றிய பயம் என்ற நனவிலி உணர்வு பெண்களின் மனத்தில் ஏற்படுவதற்குக் காரணம் பொருளாதாரச் சார்பும் பிறரைச் சாராது வாழ முடியாது** என்ற சமூக மரபழுத்தத்தின் தடம்தான் என ஆசிரியர் நாவல்களில் ஒவ்வொரு பாத்திரப் படைப்பிலும் ஏதாவது ஒரு சூழலில் காட்டுகின்றார். இதற்குத் தீர்வு முதிய தாய்க்கு ஏற்படும் மனமாற்றத்தைச் சொல்வது என்பதில் மட்டும் அமைதியடைய முடியாது. ஷகிலா போன்ற **'பெண்கள் வாழ்க்கை வட்டத்தில் தனித்து நிற்க இயலாது கணவனே ஆதாரம் என்று சார்ந்து இருக்க வேண்டிய மரபின் தடத்திலேயே'** ஆசிரியர் யுகசந்தி நாவலில் நிற்கிறார் என்றுதான் கூற வேண்டும்.

## ஹிஸ்டீரியா என்ற மன உணர்வும் பெண்களும்

பெண்களின் எழுத்தைப் பொறுத்தவரை பெண்களுக்குப் பைத்தியம்,பயம் என்ற நிலை பேசப்பட்டால், அது பெண் எழுத்தாக இருக்கும் என்ற கருத்து திறனாய்வாளர்களிடையே உள்ளது. இது ஏளனமாகச் சொல்வதா என்று தெரியவில்லை. ஆண்கள் படைப்புக் களிலும் பைத்தியங்கள் வருகின்றனர். எனினும் இத்தகைய பார்வை பெண் எழுத்துக்களை ஒரு வரையறைச் சட்டகத்தில் அடக்க விரும்பும் ஆணின் திறனாய்வுப் பார்வை என்று அமைதியுறலாம். எனினும் இந்நிலை இன்னும் ஒப்பிட்டு ஆராயத்தக்கது.

ஆனால் வாஸந்தியின் மேற்சுட்டிய நான்கு படைப்புக்களுள் 'நிழலாட்டம்' என்ற குறுநாவல் பைத்தியங்கள் பற்றிய நாவலாகும். இதில் மனிதர்களின் மன நிழலாட்டங்களை ஆசிரியர் காட்ட முயலுகிறார்.

'சுருதிபேதங்கள்' நாவலில் கதைத் தலைவி ராதாவின் தோழி ஜெயாவை நன்கு படித்தவளாகச் சிந்திக்கும் திறனுள்ளவளாக நாவலின் தொடக்கத்தில் ஆசிரியர் படைக்கின்றார். கணவனிடம் கண்ட போலித்தனம் ஒரு குழந்தை பிறந்த பிறகு அவளை அவனிடம் ஒட்டவிடவில்லை, வீட்டை விட்டு வெளியேறி வந்து விடுகிறாள். அவள் தன் கணவரிடமிருந்து விவாகரத்து வாங்கும் வரை நல்ல மனோதிடம் உள்ளவளாக ஜெயாவைச் சித்திரிக்கின்றார். விவாகரத்து வாங்கியவுடன் அந்த மனம் உடைந்து போகிறது. 'எப்படியாவது ஏதாவது ஒன்றில் நாட்டம் செலுத்தும்போது மனிதனுள் இருக்கும் உள்மனம் உடைந்து போவதில்லை! அதுபோல ஜெயாவுக்கு ஒரே நோக்கம் எப்படியாவது விவாகரத்து வாங்குவது தான்; விவாகரத்து வாங்கும் வெறியில் நினைத்ததை அடையும் நிலையில் துணிந்து செயல்படுகிறாள்.

அது கிடைத்தவுடன் படிப்பைத் தொடர்கிறாள். பெற் றோருக்குப் பாரம் என்று எண்ணுதல்; ஆதரவின்மை, தனிமை, ஒரு குழந்தையை வளர்க்கப் பொருளாதாரப் பற்றாக்குறை போன்ற நிலைகளை உள்மனம் உணர்ந்து அனுபவிக்கும்போது மனம் பேதலிக் கிறது. இறுதியில் அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிடுகிறது. இந்த மாற் றம் கதைப்போக்கில் படைப்பாளரின் பெண்ணியப் பார்வையில் சிறு

நெருடலை ஏற்படுத்துகிறது. தனித்து நின்று போராட வேண்டும் என்ற நோக்குடையவர், தனித்து நிற்கும் போது ஏன் மன தைரியத்தை இழக்க வைக்கிறார்? ஏன் இவ்வாறு படைத்துள்ளார் என்பது கேள்விக்குறி.

விவாகரத்து கேட்டு வெளியே வரும் மனத்துணிவுள்ள பெண், தனித்து நின்று வாழ்வதற்கும் துணிவு பெற்றிருக்கவேண்டும்; எதார்த்த வாழ்வில் இத்தகைய பெண்கள் காணாமல் போகிறார்கள் என்பதை உணர்த்துகிறாரா? ஒரு முரண்பட்ட போக்கினை இங்கு உணரமுடிகிறது. இதற்குக் காரணம் சமுதாயமா? பொருளாதாரமா? கல்வியிருந்தும் செயல்படும் திறனில்லையா? என்ற கேள்விகள் எழுகின்றன.

தக்க முறையில் வாழ்வில் செயல்பட முடியும் என்ற எதிர்காலக் களமின்றிப் பெண்கள் குடும்ப வட்டத்தை உடைத்துக் கொண்டுவரக்கூடாது என்ற நிலையை எதார்த்தத்தை இங்குஆசிரியர் உணர்த்துகிறாரோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. எவ்வாறாகினும் பெண் திருமணம், குடும்பம் என்ற கட்டமைப்பை உடைத்து விட்டு வெளியே வர வேண்டும் என்று தீவிரப் பெண்ணிய நோக்கு இவரிடமில்லை. மாறாக மரபு என்ற வட்டத்தை விட்டு வெளியே வ ரமுடியாத சமூகச் சூழலை ஆசிரியர் ஒத்துக் கொள்கிறார்.

## தாய் - தந்தை என்ற மையம்

வாஸந்தி, நிழலாட்டம், கடைசி வரை, யுகசந்தி என்ற மூன்று நாவல்களிலும் தாய், தந்தை என்ற இருவரையும் பக்கம், பக்கமாக வைத்து இடைப்பட்ட மையத்தில் மகளை நிறுத்தியுள்ளார். மகளின் வழி பெண்களின் (தாய், மகள்) பிரச்சினைகளை நனவிலி மன உணர்வுகளை வெளிப்படுத்தும் போக்கு காணமுடிகிறது.

யுகசந்தியில், க்ளாரா வெளிநாட்டுப்பெண்ணாக இருந்தாலும் தன்னுடைய கலாச்சாரத்தைப் பிள்ளைகள் மேல் திணிக்கக் கூடாது; கணவன் மகிழ்வு தான், தன் மகிழ்வு என்ற உறுதியான மனப்பான்மையுடன் வாழ்கிறாள். அவள் புகுந்த குடும்பத்திற்காகத் தன்னைத் தன் மன உணர்வுகளை எல்லாம் தியாகம் செய்தவளாய் இருந்தும், அக்குடும்பத்தில் கலாச்சாரச் சிக்கலால் தொடர்ந்து வாழமுடியவில்லை. தன் கணவன் தன் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சியாமளாவைத் திருமணம் செய்து கொள்கிறான்.

இந்நிலையில் இரு குழந்தைகள் பெற்று 28 வருடங்கள் வாழ்ந்த வாழ்க்கை அர்த்தமற்றுப் போனதாகக் க்ளாரா உணர்கிறாள். கணவனின் புறக்கணிப்பும், மாமியாரின் கலாச்சாரச் சிக்கலும் அவளை வீட்டை விட்டு வெளியேறச் செய்கின்றன.

''உன் அப்பாவுக்குத் தேவையற்றுப் போனேன் என்று உணர்ந்த போது, எனக்கு வாழ்வே அர்த்தமற்றுப் போனது உண்மைதான். ஆனால் யோசிக்க யோசிக்க அது அசட்டுத்தனம்; அபத்தம்; என்று தோன்றுகிறது. தனி நபரின் பங்குதான் மாறிவரும் உலகில் முக்கியத்துவம் பெறுகிறது. நாம் சமூகத்திற்கு எத்தனை உபயோகமாக இருக்கிறோம் என்பதில்தான் அர்த்தம் உள்ளது. அங்கு மீனவ நண்பர்களுக்கு ஒரு திட்டம் வைத்திருந்தேன். அதை ஆரம்பிப்பேன் (ப.118 ) என்ற க்ளாராவின் செயல்பாட்டு உணர்வு வேகம் இங்குக் குறிப்பிடத்தக்கது. **ஆண் தன்னைப் புறக்கணிக்கிறான் என்பதற்கு முன்பே அவனைப் புறக்கணித்து, அவனுக்கு நாம் யார் என்பதைப் புரியவைத்து, அடையாளம் காட்டி வாழ்க்கையை ஓர் அர்த்தமுள்ளதாகக் காட்ட வேண்டும்** என்ற மனச் செயல்திறன், யாரையும் சாராது வாழும் நிலை, தன் வாழ்விற்குத் தானே முடிவெடுக்கும் திறன் என்பதை இங்கு ஆசிரியர் இப்பாத்திரத்தில் வழிக் காட்டுகிறார். இங்குக் குடும்பத்தை விட்டுச் செல்லும் நிலை, குடும்ப உடைப்பு என்ற தீவிரவாதத்திற்கு இடம் அளிக்கவில்லை. மாறாகப் **புறக்கணிப்பைத் தனித்து எதிர்நோக்கி, மனம் தளராது செயல்படும் திறனுள்ளவளாகப் பெண் வாழ வேண்டும் என்ற உணர்வைப் பெண்கள் மனத்தில் ஏற்படுத்துகிறது.**

இந்த இருவருக்குமிடையில் மகள் காயத்ரியை நிறுத்தி வைத்து, தன் அம்மாவின் வேதனை உணர்வுகளுக்கு வடிகால் தேடவைக்கிறார் ஆசிரியர். தன் அப்பாவின் ஆதிக்க உணர்விற்குப் பதிலடி கொடுக்க வைக்கிறார்.

அப்பாவே, அம்மாவிடம் வாழ்ந்தது போலி வாழ்க்கை என்கிறார்.28 வருடங்கள் போலி வாழ்க்கை வாழ முடியுமா? ஒருவரால்! என்று காயத்ரி மனம் அப்பாவின் போலி வாழ்க்கையை வெறுக்கிறது. காயத்ரியும் வீட்டை விட்டு வெளியேறி, தன் தோழி வீட்டில் தங்குகிறார். வீட்டை விட்டு மகள் போய்விட்டாள் என்று கேள்விப்பட்டதும், அவ போயிட்டாளா? யார் அவள்! அவள்

உடம்பில் ஓடுவது வெள்ளைக்காரி ரத்தம் தானே என்று அவர் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தமில்லாது பேசும் செயல், ஆணாதிக்க அதிகார வெறியையே உணர்த்துகிறது.

இந்நிலையில் காயத்ரியைப் பார்க்க வரும் கணேசனை ஒரு குடும்பத்தை நிர்மூலமாக்கியதற்கு அப்பாவின் சுயநலம் தான் காரணம்; கடைசிவரை உங்கள் வேஷத்தை நம்பிய அம்மாவை நீங்கள் துச்சமாக மதித்தீர்கள் என்று வாதாடுகிறார். தீக்குளிக்க வேண்டிய குற்றவாளி அப்பா; அவர் பின்னால் வரிசையாகப் பாட்டி என்று அவள் மனம் அம்மாவை நினைத்துக் குமைகிறது.

ஒருமுறை அம்மா, பூணூல் திருமணம் முடிந்து காரில் ஏறப் போனபோது, இனிமேல் பேசுவதற்கு ஒன்றுமில்லை கெட் அவுட், கெட் அவுட் என்று கத்தியது காயத்ரியின் நெஞ்சின் அடித்தளத்தில் நெருப்பாக ஜுவாலை விட்டெரிந்து கொண்டே இருந்தது. ஒருமுறை அப்பா அவளைப் பார்க்க வந்தபோது கெட் அவுட், கெட் அவுட் என்று விரட்டுகிறாள். நான் உன்அப்பா என்று சொல்லி அவர் பேச முயன்ற போதும் பார்க்கவே மறுத்துவிடுகிறாள். இப்பொழுது அம்மா சந்தோசப் படுவாள்; அம்மாவும் சாதாரணப் பெண்தானே! என்று அவள் உள் மனம்,அம்மா பட்ட மனவேதனை களுக்கெல்லாம் சவுக்கடி கொடுத்தது போல உணர்கிறது. அம்மாவின் மன வேதனைகளுக்கு மகள் என்ற நிலையில் ஓர் ஆறுதல் தேடித் தந்துவிட்டோம் என்று அவள் மனம் அமைதியடைகிறது.

தந்தை - தாய் என்ற இருவரின் செயல்பாட்டிற்கும் இடைப் பட்ட மையத்தில் மகளை நிறுத்தி இங்கு ஆணின் அதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்குவதும், அவர் செய்த புறக்கணிப்புக்களை அவருக்கே அவர் பாணியிலேயே திருப்பிக் கொடுத்து, பெண் தான் யார் என்பதை நிலை நிறுத்தும் முயற்சியும் வெளிப்படுகிறது.

## தந்தை மகள் செயல்பாடும் - எதிர்ப்புத் திறனும்

பொதுவாகப் ஃபிராய்டின் உளப்பகுப்புக் கோட்பாட்டின்படி, தந்தை மகள் உறவு எலெக்ட்ரா சிக்கலாகக் காட்டப்படும் பொழுது, அங்கு அவர்களது உறவு நெருக்கம் உடையதாகக் காட்டப்படும்.

ஃபிராய்டின் பிறப்புறவுச் சிக்கலின் அடிப்படையில் பெண்களின் குணங்களை வரையறுத்த ஃபிராய்டைப்

பெண்ணியவாதிகள் மறுத்தனர். இதுபோன்ற ஒரு மறுப்பின் தொனியை வாஸந்தியின் நாவல்களில் தந்தை-மகள் என்ற உறவுச் சிக்கலின் அடிப் படையில் பகுத்துப்பார்க்கும்போது உணரமுடிகிறது. அதே நேரம் எத்தனை வயதானாலும் தந்தையிடமோ அல்லது ஓர் ஆணிடமோ உள்ள பாலியல் உணர்வின் வக்கிர வெளிப்பாடும் அதிகாரச் செயல் திறனும் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளன.

'சுருதிபேதங்களில்' வரும் தந்தை ஓர் எழுத்தாளர். அவர் கதைகளை இளம்பெண்கள் விரும்பிப் படிக்கின்றனர். அவரது வருணனையில் மயங்கும் பெண்கள் ஏண்டி அவர் இளவயதினர் அல்ல; ஐம்பது வயதைக் கடந்தவராம் என்று பெண்கள் பேசும் உரையாடல் அவர் மனத்தில் தனி ஓர் இன்பத்தை எழுப்புகிறது. ஆனால் அதே நேரம் அவரது மகள் ராதாவிற்குத் தன் கல்லூரித் தோழிகள் பேசும்பேச்சு 'அப்பாவுக்கு ஏன் இந்த வேஷம்; சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருக்கிறார்' என்ற வெறுப்பை ஏற்படுத்துகிறது.

மேலும் ஆண் ரசிகர்கள் அவர்களது கதைகளில் இத்தனை வயதாகியும் எப்படி எழுதுகிறீர்கள் என்று கேட்கும் பொழுது நானும் இளவயதைக் கடந்து வந்தவன், பெண்ணுடன் வாழ்ந்தவன் என்ற பேச்சுக்கள் எல்லாம் அம்மாவை இழந்தபின், தன் உணர்வுகளின் வடிகாலாக இலக்கியத்தைக் கொள்கிறார். இலக்கிய வருணனை மூலம் தன் இழப்புக்களை ஈடுசெய்து கொள்கிறார் எனறு உளவியல் படிக்கும் ராதா கணித்துக் கொள்கிறாள்.

இவ்வாறு உணர்வு ரீதியாக விளங்கும் சாமிநாதன் தன் மகளின் வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக இருப்பதுடன், அவளது உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயல்படுபவராகவும் திகழ்கிறார். இதற்குக் காரணம் தந்தையின் விருப்பத்திற்கு மாறாகத் திருமணம்செய்து கொண்டதாகும். இது தந்தையின் அதிகாரம் என்ற அமைப்பை மீறுவதாக அமைந்ததாகும்.

## தந்தையின் அதிகார அமைப்பும் மீறலும்

தந்தையின் அதிகாரத்திற்குட்பட்டுத்தான் இந்தியக் குடும்பம் இயங்கும். ஒரு குடும்பத்தில் எவ்வளவு தான் முன்னேற்றச் சிந்தனை வாதியாக தந்தை இருந்தாலும் தன் குடும்பத்தில் தன் மகள் விருப்பத்திற்குத் திருமணம் என்ற நிலையை முழுதும் ஏற்றுக்

கொள்ளாத தன்மைகளும் தடைகளும் இந்தியக் குடும்பங்களில் இன்னும் தொடரத்தான் செய்கின்றன.

இங்கு ராதாவின் தந்தை சாமிநாதன் முற்போக்கு எழுத்தாளராக இருந்தாலும் தன் மகளின் காதல் திருமணத்தை அவர் மனம் ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. மாறாக மகளின் அந்தப் போக்கை வெறுக்கவும் செய்கிறார். திருமணம் செய்த சில நாட்களிலேயே ராதாவின் கணவன் விபத்தில் இறந்து விடுகின்றான். ஆதரிப்பார் யாரும் இல்லாத நிலையில் தந்தையிடமே அடைக்கலம் புகுகிறாள் ராதா. 'தாய் இல்லாத நிலையில் தன் பேச்சைக் கேட்காது ஓடியவள் தானே' என்ற அடிமன நெருடலிலேயேதான் தந்தையின் கவனம் தன்மீது படிந்துள்ளதை ராதா உணர்கிறாள். எம்.ஏ. படிக்கிறேன் என்று சொன்னபோது ஏன் இன்னும் யாரையாவது இழுத்துக் கொண்டு போகவா? என்ற தந்தையின் கேள்வி அவளின் தன்மான உணர்வைப் பாதிக்கிறது.''மௌனமாக அழுவது பலவீனத்தைத் தான் அதிகப்படுத்தும் இந்த பலவீனத்துக்கு இடம் கொடுத்தால் தனக்கு விமோசனமும் இல்லை'' (ப.12) என்ற அவளது மனப் போராட்டம் **பெண்கள் தன் பலவீனத்திற்கோ தன்னிரக்கத்திற்கோ இடம் கொடுக்கக் கூடாது என்ற நனவிலி மனச் செயற்பாட்டை உணர்த்துகிறது.**

'அப்பாவின் நிழலில் ஒண்டிக் கொண்டு ஒரு ஜடப் பொருளாக வாழ்வது கொலைக்குச் சமானம். அப்பா, இது இருபதாம் நூற்றாண்டப்பா! அதைத் தவிர உங்களுடைய போக்குதான் என்னை அப்படியே விரட்டியிருக்க வேண்டும் என்றால் உங்களுக்குப் புரியுமா! உங்கள் அலட்சியத்தால் உலர்ந்து போயிருந்த என் நெஞ்சுக்கு' - (ப.31) என்று அவள் செய்கைகளுக்கெல்லாம் காரணம் அப்பாவின் அலட்சியம் தான் என்று சொல்ல அவள் உள்மனம் ஓலமிடுகிறது. இருபது வயதுப் பெண் விதவையானால், **இரவில் சுலோகங்களைச் சொல்லித் தூங்கிப் போவாள் என்று எண்ணுவது எவ்வளவு மடத்தனம் என்று அவள் உள்மனம் குமைகிறது. எனினும் மரபின் அழுத்தமும் ஆணின் அதிகாரச் செயல்பாட்டிற்கு முன், தான் அவரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையில் அவளால் எதையும் பேச முடியாத மௌனப் போராட்டம் தொடர்கிறது. ஆனால்** கல்லூரிக்குச் சென்று உளவியல் கற்றபின், ஒரு பெண் தான் யார்

என்பதையும் தன் இருப்பிடத்தைத் தக்கவைக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தூண்டும் திறனை உணர்கிறாள். அதைச் செயல்படுத்திட மனஉறுதியுடனும் செயல்பட ஆரம்பிக்கிறாள். வரும் பிரச்சினைகளை எல்லாம் கலக்கமில்லாது யோசித்துப் பார்த்தால், பிரச்சினைகள் இருக்காது என்று தோன்றும். எந்த ஒரு தயக்கத்திற்கும் காரணம் பத்தாம்பசலித்தனமாக ஒரே கோணத்திலேயே சிந்திப்பது வழக்கமாய்ப் போச்சு என்ற ஜெயா ராதாவின் உரையாடல் பல கோணங்களில் சிந்திக்கும் திறனுடையவர்களாகப் பெண்கள் திகழ வேண்டும்; என்ற ஆசிரியர் நோக்கினைச் சுட்டுகிறது.

மேலும் இந்நாவலில் அப்பா-மகள் உறவுப் போராட்டம் எதிர்மறை நிலையிலேயே தொடங்குகிறது. தன் உணர்வுகளுக்கு முட்டுக் கட்டை போட்டுவிட்டு, தன் சமையல்காரப் பெண்ணிடம் அப்பா உறவு வைத்துக் கொள்வதைப் பார்க்கும்போது, இது என்ன போலித்தனம்; வேஷம், சொல் ஒன்று, செயல் ஒன்று என்று அவள் உள்மனம் அப்பாவை அடியோடு வெறுக்கிறது. ஆதலால் வீட்டை விட்டு வெளியேறி விடுகிறாள். இங்கு ராதாவிற்குத் தனித்து நிற்கக் கல்வியும் அதன் வழி வந்த பொருளாதாரச் சுதந்திரமும் மனவலிமையைக் கொடுக்கின்றன. அத்துடன் **‘பெண்கள் தன் சுயகௌரவத்திற்கு இழுக்கு வரும்போது அல்லது தன்னைச் சமுதாய வாழ்வில் நிலைநிறுத்திக் கொள்ள மரபு வழிப்பட்டுத்தான், பெண் இயங்க வேண்டும் என்ற கற்பிதங்களை உடைத்தெறிவது தவறில்லை; தன் எதிர்கால வாழ்வினை வடிவமைக்கப் பெண்கள் எப்போதும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்’** என்ற தன் முன்னேற்றச் சிந்தனைகள் இங்கு முன் வைக்கப்படுகின்றன.

தனது தன்னிலை என்ற மன உணர்வுகளுக்கு முரண்பாடு வரும்போது, வீட்டிற்குள் இருக்கவேண்டும் என்ற சமுதாய மரபை மீறிப் பெண் என்பவள் தானாக இயங்கும் திறனுடையவள் என்ற கற்பிதங்களைப் புதுப்பிக்கும்படி ஆசிரியர் படைத்திருக்கிறார். எனினும் இந்நாவலில் மோஹன் ராதாவைத் திருமணம் செய்து கொள்ள அவள் விருப்பத்தைக் கேட்கிறான். இங்கு ராதாவிற்கு ஓர் ஆண் துணை தேவையிருந்தும் அத்திருமணத்தை மறுக்கிறாள். அப்பா இறந்தபிறகு அந்த ஊரிலேயே, தங்கித் திருமணத்தைத் துறந்து தனித்து வாழ்கிறாள். இங்கு ராதா மறுமணத்திற்குச் செவி சாய்க்காத நிலை; மரபு என்ற

வட்டத்தை மீற முடியாத நிலையா? அல்லது திருமணம் என்ற உறவை வெறுப்பதினாலா? தீவிரவாத உணர்வு என்று எண்ண இங்கு இடமில்லை; வாழ்வில் தனித்து நின்றுபோராடி வெற்றி பெற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. எனினும், ''அந்தப் பழைய நினைவுகள் தான் தனக்கு ஆஸ்தி என்று அவள் உள்மனம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது'' என்று ராதாவின் நினைவு வீச்சுக்கள் ராதாவை மரபு வழிப்பட்ட வட்டத்திற்குள்ளேயே இயங்க வைக்கிறது என்று கருத இடமிருக்கிறது.

பெண்கள் ஆண்கள் படைத்த கற்பிதங்களை உடைத்துக் கொண்டு வெளியே வரவேண்டும்; முற்போக்கு உடையவர்களாகத் திகழ வேண்டும்; பிரச்சினைகளை எதிர்கொள்ளும் திறன் வேண்டும் என்று புதிய கற்பிதங்களை வாஸந்தி வகுத்துள்ளார். எனினும் நாவிலின் போக்கு மரபிற்கும், புதுக் கற்பிதங்களுக்கும் இடையில் ஒரு விளிம்பு நிலையில் நிற்கும் பெண்ணியப் பார்வையாகத்தான் அமைகிறது.

## தாய் மகள் உணர்வும் மனச் செயல்பாடும்

'கடைசி வரை' நாவலில், தாய் விட்ட இடத்தை மகள் மனோகரி தொடரும்உணர்வுப் போராட்டம் பெண்களுக்கான விழிப்புணர்வு உந்துதலைத் தொட்டுக் காட்டுகிறது.

மனோகரி வளமான சூழ்நிலையில் வளர்க்கப்பட்டதால், பெண்ணின் முழுப் பரிமாணத்தையும் அறிந்து கொள்ள அவளது வீட்டுச் சூழல் இடம் கொடுக்கவில்லை. எனினும் அவளது மருத்துவத் தொழில் பெண்களின் பல பிரச்சினைகளை, ஆணாதிக்கச் செயல்பாட்டு மரபுகளில் பெண்கள் பெற்றிருக்கும் அவலத்தின் இடத்தை அறியத் துணைபுரிகிறது.

பெண்பிள்ளை வேண்டாம்; பெண் பிறந்தால் வீட்டில் சேர்க்க மாட்டார்கள் என்று வாழ்க்கை ஆதாரத்திற்குப் பயந்து கருவைக் கலைக்கும் பெண்கள்;

கொள்ளி வைக்க ஆண் வேண்டும் என்ற ஆண்களின் ஆசை வற்புறுத்தலுக்குப் பெண் இணங்குதல். அதனால் உடம்பில் தெம்பு இல்லாவிடினும் மறுக்காது குழந்தைப்பேறு அடைதல்; போகத்தின் இருப்பிடமாகத் திகழும் பெண்கள்;

கணவன் இறந்தபின் ஆதரிப்பாரின்றித் துன்பத்தில் உழல்பவர்கள்; சொந்த உறவினர்களோ அவளா! சுமை என்று வெறுத்து ஒதுக்கும் நிலைக்கு ஆளாகும் பெண்கள்.

பெண்களுக்குக் காவலாகப் பணிபுரியும் காவல்நிலையப் பணியாளர்களே, தனிமையில் இருக்கும் பெண்ணை, பாலியல் கொடுமைக்கு ஆளாக்குதல்; இந்நிலையில் பாலியல் பலாத்காரத்தால் சீரழிந்த பெண்கள்; என்று பலதரப்பட்ட அவலங்களுக்கு ஆளாகின பெண்களை நினைந்து, மனத்தளவில் குமைந்து, அப்பெண்களின் அவலங்களுக்கு எல்லாம் முற்றுப் புள்ளி வைக்கும் வடிகாலாகத் திகழ எண்ணுகிறாள் மனோகரி.

இத்துடன் அவளுடைய தாய் தன் தந்தையிடம் படும் வேதனையும், எதையும் வெளியில் சொல்ல முடியாத தாயின் மௌனப் போராட்டமும் தாயின் இறப்பும் இவளுக்கு ஓர் ஊக்கத்தை தருகின்றன.

மனோகரியின் தாய் படிப்பறிவு இல்லாதவள்; வெளி உலக நடப்பு அறியாதவள்; மரபு மீறாத பெண்; கணவன் மகிழ்வே தன் மகிழ்வாக எண்ணி வாழ்பவள்.

தனக்கு ஆண் வாரிசு இல்லை என்பதற்காக இரண்டாம் திருமணம் செய்து கொள்ளக் கணவன் விரும்புகிறான். இதையறிந்தும் அந்த மரபுவழிப்பட்ட மௌனம் கணவன் விருப்பத்தைத் தடுக்க முன்வரவில்லை. இந்நிலையில் சொன்னதையே சொல்லும் ஹிஸ்டீரியா செயல்பாடு போல், ஆணின் ஆதிக்க உணர்விற்கு முன் எதுவும் பேசாது அடங்கிப் போகும் பெண்ணாக இங்கு மனோகரியின் தாய் அமைகிறாள். அந்த மௌன எதிர்ப்பின் மூலம் அங்கு ஆணாதிக்க எண்ணம் முறியடிக்கப்படுவதை ஆசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

மனோகரியின் தந்தை இரண்டாந்தரத் திருமண எண்ணத்தைக் கைவிட்ட நிலையில், அவர் ஆணாதிக்கப் பிரதிநிதியாக முதலில் சுட்டப்பட்டாலும் பின் பெண்ணின் மௌனத்தால் மாறும் அரிய மனிதராக நாவலில் உயர்ந்து நிற்கிறார்.

இங்கு மனோகரியின் தாய் மௌனமாக இருந்தாலும் ஏதோ ஒரு நிலையில் புறக்கணிக்கப்பட்டோம் என்ற உணர்வு அடிமனத்தில் இழையோட இறந்து விடுகிறார். அந்த இறப்பின் போது அந்தக்

கண்டத்தைத் தாண்டிய பிறகு அம்மா அதிலிருந்து மீண்டு விட்டதாக அப்பா சமாதானமானார். ஆனால் மீளவில்லை என்பது எனக்குத் தெரியும். ''**நான் படிக்காதவ! எதையும் சொல்லத் தெரியல; உன் உரிமையை நீ நிலைநாட்டிக் கொள்**'' என்று அம்மா விதைத்த வித்து என் இரத்தத்தில கலந்துள்ளது. ''**அவள் விட்டுச் சென்ற விடுகதைக்கு விடையைக் காணும் தவிப்பு என்னுள் எரிகிறது. அச்சுமையை நான் இழுத்தே ஆக வேண்டும்**'' என்ற உணர்வை, உரிமைப் போராட்டத்தை மனோகரியின் மனத்தில் ஆசிரியர் விதைத்து விடுகின்றார்.

தாய்- மகள் உறவில், தாய் பட்ட வேதனைகள், வாழ்க்கைத் தோல்விகள் மகள் மனத்தில் ஆழமான வடுவை ஏற்படுத்தி விடுகின்றன. பெண் பிள்ளைகள் அவ்வடுவைத் தொடர்ந்து இழுத்துச் சென்று வாழ்க்கைத் தடைகளை ஒடுக்கல்களை உடைத்து எறிந்து வெற்றிபெற முயல வைக்கிறார் வாஸந்தி.

''அவந்த் கார்டின் இலக்கியத்தில் ஆண், பெண் பிள்ளைகள் தாயை எதிர்ப்பர்; ஆனால் தாயின் நனவிலி மனத்திற்குள் ஊடுருவி ஒட்டிக் கொள்வர்'' என்று திறனாய்வாளர்கள் சுட்டுவர். அதுபோல் இங்கும் மனோகரியின் மனநிலை தாயின் இதயத்தைச் சுற்றிச் சுற்றி வருகிறது.

தந்தையை மனோகரி வெறுக்கவில்லை; தனக்குக் கல்வி கொடுக்க வாய்ப்பளித்தவர் என்ற நிலையில் முதன்மை கொடுக்கிறாள். தந்தையைக் கவனிக்கிறாள். ஆனால் தாய் விதைத்த உணர்வுப் போராட்டம் நனவிலி மனத்தில் ஆக்கிரமித்துக் கொண்டே இருக்கிறது. தன் தந்தையின்பாற் செயல்படும் ஒவ்வொரு செயலும் தன் நனவிலி மனச்செயற்பாட்டை நிறைவேற்றும் தேடலாகவே உள்ளது. தந்தை உடல்நோய்வாய்ப்பட்ட நிலையிலும் தானாக முடிவெடுக்கும் திறனிலும், ஆணுக்கே உரியது என்று சமூகம் விதித்த (தகப்பனுக்குக் கொள்ளி வைப்பது போன்றவை) வரையறைகளை யாவையும் மனோகரி பெற்று ஓர் ''ஆண்ட்ரோகைனி' போலச் செயல்படுகிறாள். இத்தகைய செயல்பாடு அவளது வாழ்க்கைக்கும் தன்னை யார் என்று சமுதாயத்தில் இனம் காட்டுவதற்கும் துணை புரிகிறது.

''ஆண்கள் பெண்களை அடக்கியாளும் மேலாண்மை நிலையிலும் காலம் காலமாக இருந்தாலும், இது பற்றிய விழிப்புணர்வு

இப்பொழுது அதிகரித்துள்ளது. இந்த அடக்கப் பட்ட நிலையையே பெண்கள் தம் வலிமைக்கும் அதிகாரத்திற்கும் ஆதாரமாகக் கொள்ளமுடியும்'' என்ற மில்லரின் கருத்தை வாஸந்தியின் தாய் - தந்தை - மகள் என்கிற முக்கோணச் செயல்பாடுகளில் உணர முடிகிறது. சுருங்கச் சொன்னால் ஆண்கள் பெண்களின் மீது செலுத்தும் ஆணாதிக்கச் செயல்திறனும் அதை எதிர்த்து மௌனமாகப் போராடித் தன் மனவலிமையை நிலை நாட்டும் பெண்ணின் உளத்திறனும் இங்கு உயிரோட்டமாகத் திகழ்கின்றன.

## முடிபுகள்:

வாஸந்தியின் படைப்புக்களை பெண்ணியமும் உளப்பகுப் பாய்வும் என்ற பார்வைக்கு உட்படுத்தும்போது தாய்- மகள்- தந்தை என்ற மும்முனை உணர்வுப் போராட்டம் இவரது நாவல்களில் அடிப்படை உணர்வழுத்தங்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ள திறனை உணரமுடிகிறது.

தந்தை - மகள் - உறவு நிலையில் உள்ள முரண் அமைப்பு லிங்க மைய வாதத்தை உடைத்து எறியும் உத்தி எனக் கொள்ளவும் இடமுண்டு.

அதே நேரம் ஆணின் அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்தும் திறனும் அமைந்துள்ள நிலையும் இங்குப் புலப்படுகிறது.

தாய் மகள் உணர்வுப் போராட்டத்தின் வழி, தாய்விட்ட இடத்தை மகள் தொடர்ந்து, தாய் அனுபவங்களுக்குக் காரணமாக இருந்த தந்தைவழிச் சமுதாய அமைப்பிற்குப் பதிலடி கொடுப்பது போலுமுள்ளது.

பெண்ணுக்குப் பெண் குடும்ப வட்டத்தில் எதிரி அன்று. ஆணின் தலைமைத்துவம் தான் அந்த மனப்பான்மைக்கும் காரணம் என்பதும் இவரது எழுத்துக்களில் புலனாகின்றது.

வாஸந்தி தந்தைவழிச் சமுதாய அமைப்பில் வந்த ஆணாதிக்க மரபுகளை எதிர்க்கிறார். பெண் பற்றிய கற்பிதங்களைத் தகர்க்க எண்ணுகிறார். எனவே பெண்பாலியல் ரீதியான அடக்கு முறைகளுக்குப் போய், உயிரியல் ரீதியான நிலையில், தான் யார் என்பதை நிலை நிறுத்த வேண்டும் என்று முயலுகிறார். இவை

எல்லாவற்றிற்கும் மேல் பெண் தற்சார்பின்றி இயங்கும் திறனுடையவளாகவும் திகழ வேண்டும் என்ற விழிப்புணர்வைத் தன் எழுத்துக்களில் வற்புறுத்துகின்றார்.

எனினும் இவரது எழுத்துக்களில் 'பெண்களும் வாழ்க்கை பாதுகாப்பின்மையும் பயமும்' என்ற நனவிலி மனப் போராட்டத்தில் பெண்கள் சிக்கித் தவிக்கின்றனர் என்ற நிலை அழுத்தமாகப் புலப்படுகிறது. அதனால் பெண்களின் மன உணர்வுகள் சிதைந்துவரும் தன்மையினையும் உணர முடிகிறது.

திருமணம் என்பது பெண்களுக்கு ஒரு சமூகத்தடை என்ற தீவிரவாதம் இவரது நாவல்களில் இல்லை. விதவை, மறுமணம் செய்யும் உணர்வின்றி, அந்த நினைவுகளே என் வாழ்வில் நிஜம் (சுருதி பேதங்கள்-1981) என்று வாழும் வாழ்க்கை நிலை மரபின் தடத்தை உணர்த்துகிறது.

பொருளாதார அடிப்படையில் திருமண உறவு நிச்சயிக்கப் படுகிற நிலையில் ஆணாதிக்கச் சமுதாய உணர்வின் தடங்களுக்கு அடிமைப்பட்டுப் போகாது விட்டு விலகிச் சுதந்திரமாய் வாழ முடியும் என்ற பெண்ணின் நிலைப்பாட்டினையும் (யுகசந்தி) உணர்த்துகிறது.

இவரது எழுத்துக்கள் மரபிற்கும் புதுக் கற்பிதங்களுக்கும் இடையில் ஒரு விளிம்பு நிலையில் நிற்கும் பெண்ணியப் பார்வையை மனத்திரையில் நிறுத்துகின்றன.

## குறிப்புகள்

1. சுசிலா, வாஸந்தி நாவல்கள் - ஓர் ஆய்வு, முன்னுரை

# 9. பெண்மொழி நோக்கில் பெண் எழுத்துக்கள்

'பெண்ணியம்' சமுதாயத்தில் பெண்களின் நிலை மாற்றத்திற்குக் குரல் கொடுக்கும் நோக்குடையது. இது பல பெண்ணியத் திறனாய்வுக் கொள்கைகளையும் வகுத்துக் கொடுத்துள்ளது. அவற்றுள் இன்று அனைவராலும் விவாதத்திற்குட்படுத்தப் பட்டிருப்பது 'பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் மொழியுமாகும்.'

## பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்மொழியும்

பெண்கள் இயல்பிலேயே பொறாமைக் குணம் கொண்டவர்கள்; ஆண்குறிப் பொறாமை உடையவர்கள் என்ற ஃபிராய்டு கருத்தைத் தூக்கி எறிந்தவர்கள் பெண்ணிய உளப்பகுப்புத் திறனாய்வாளர்கள்.

இவர்கள் ஆண்கள் தம் அதிகார மையத்திலிருந்து உருவாக்கிய பெண்பற்றிய கருத்தாக்கங்களை உடைத்தெறிதல் வேண்டும். பெண்களின் நனவிலி மன உணர்வுகளை, அமுக்கப்பட்ட அகவயப்பட்ட பெண்மை உணர்வுகளை ஒளிவு மறைவின்றி வெளிக் கொணரவேண்டும். பெண்களின் உண்மையான அனுபவங்களைப் பதிவு செய்யப் பழைய கருத்தாக்கங்களை உடைத்தெறியப் புதுமொழியை உருவாக்க வேண்டும் என்று குரல் கொடுத்தனர்.

பெண்களின் நனவிலி வயப்பட்ட உணர்வலைகளில் மண்டிக் கிடக்கும் அனுபவங்கள், பிரச்சினைகள் என்ன? அவற்றைப் பெண் எழுத்துக்கள் எவ்வாறு வெளிப்படுத்திக் காட்டுகின்றன? அவ்வாறு வெளிப்படுத்திக் காட்டுவதிலும் அகவயப்பட்ட, மரபுவழிப்பட்ட தன்மை காணப்படுகிறதா? திரும்பத்திரும்பச் சொன்னதையே சொல்லும் குரலாக உள்ளதா? ஆண் வகுத்த கருத்தாக்கம் சார்ந்த பெண் மொழியாக இல்லாது மாறி இருக்கிறதா? போன்ற அடிப்படைகளில் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளில் படிந்துள்ள பன்முகப்

பரிமாணங்களை வெளிக் கொணர்வது இன்றைய பெண் மொழித் திறனாய்வில் தேவையான ஒன்றாக உள்ளது.

பெண் எழுத்தாளர்களான வை.மு. கோதை நாயகியம்மாள் முதல் இன்றைய பெண் எழுத்தாளர்களான இராஜம் கிருஷ்ணன், வாஸந்தி, சிவசங்கரி, அம்பை, சிவகாமி, சுசிலா வரை பெண்களின் நனவிலி மன உணர்வுகளைப் பதிவு செய்துள்ளனர். இந்த உணர்வுப் பதியங்களில் அகவயப்பட்ட பிரச்சினைகள் மேலெழும்பி வந்துள்ளன. அவையே பெண் சமுதாயத்தைப் பாதிக்க வைத்த பெண்ணியப் பிரச்சினைகளாகும். அவற்றுள் கோமகள் (மனச்சந்நிதி), லஷ்மி (மன்னிப்பின் மறுபக்கம்) வாஸந்தி (காலம்) அம்பை (காட்டில் ஒரு புள்ளி மான், வீட்டில் ஒரு சமையலறை) சுசிலா (தலை ஓட்டங்கள்) ஆகியோரின் சிறுகதைகள் மட்டும் இங்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இச்சிறுகதைகளில் வெளிப்படும் நனவிலி மன உணர்வும் மொழி வெளிப்பாடுமாகிய இரண்டிற்குமிடையே உள்ள உறவு நிலைகளை 1) கணவன் மனைவி உறவு 2) திருமண உறவும் முறிவும் 3) தாய்மை உணர்வு, 4) முடிவெடுக்கும் திறனும் பெண்ணெழுத்தும், 5) பலாத்காரமும் பாலியல் பிரச்சினைகளும் 6) உடல்மொழியும் பெண் எழுத்தும் என்றவாறு பகுத்துக்காண முடிகிறது.

## கணவன் - மனைவி உறவு

குடும்ப நிலைகளில் கணவன் மனைவி உறவு- உணர்வு பூர்வமானது. இந்த உறவில் படித்த ஆண், படிக்காத ஆண் என்று பாகுபாடில்லை. யாராக இருந்தாலும், கணவன் என்ற முறையில் தந்தை வழிச் சமுதாய் அமைப்பில் வந்த சில ஆதிக்க மன உணர்வுகள் அடிமனத்தில் நிழலாட்டம் புரிந்து கொண்டுதான் இருக்கின்றன.

உண்மையான முகத்தைக் குடும்பத்தில் கணவன் மனைவியிடம் காட்டும்பொழுது மனைவியும் அந்த ஆதிக்க உணர்வில் அமுங்கித்தான் போகிறாள். கணவனுக்கு முற்றிலும் அடிமையாகிக் குடும்பப் பிரச்சினைகள் முழுவதையும் தான் ஒருத்தியே நின்று ஏற்று நடத்தி வரும் பெண்களையும் பெண் எழுத்துக்கள் காட்டுகின்றன.

''அவர் கிழிச்ச கோட்டை என்னிக்காவது தாண்டி இருக்கேனா! இல்ல தாண்டியதே இல்லே! எதுக்குத் தாண்டனும் அவர்

சொல்றது எல்லாம் எனக்குச் சரின்னு படும்போது; அவளுடைய பிறந்தநாள் அவளுக்கு நினைவுக்கு வராது; ஆனால் அவருடைய பிறந்தநாளன்று அவளுள் தாய்மை உணர்வு பொங்கும். அவருக்கு வயது ஏற ஏற அது அதிகமாகி வருகிறது. அவரை ரட்சிக்கும் பொறுப்பு தன்னுடையது என்று தோன்றுவது விசித்திரம். பார்த்துப் பார்த்துப் பரிமாறும் போதே அவர் சரியாகச் சாப்பிடலேன்னு குறையிருக்கும் எனக்கு. அவர் திருப்தியுடன் சாப்பிட்ட அன்றைக்கு மனம் கொள்ளாத சந்தோஷம் கிரீடம் வைத்தாள் போல என்று வாஸந்தி கதைகளில் கணவன்-மனைவி உறவுகளின் உள்ளார்ந்த ஆத்மபூர்வமான அனுபவங்கள், பெண் மன உணர்வுகள் தொட்டுக் காட்டப்படுகின்றன. இதுமாதிரி கோமகள், லக்ஷ்மி கதைகளும் பெண்களின் நனவிலி மன உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. ஆடவனின் ஆணாதிக்க மனஉணர்வைச் சுட்டுகின்றன. அந்நிலை மாறி மனைவி என்பவள் மதிக்கப்பட வேண்டியவள் என்ற உணர்வை ஆடவர் அடிமனத்தில் எழச் செய்யும் சுசிலாவின் ஒரு வித்தியாசமான கதை இங்குக் குறிப்பிடத்தக்கது.

'வாசலிலிருந்தபடியே ஆர்ப்பாட்டமாய்க் குரல் கொடுப்பார் அப்பா! பார்வதி என்ற முழுப்பெயர் மறைந்து 'ஏய்' என்ற விளிதான் நிற்கும்.

''த பாரு, கூட்டாளிங்க ஒரு பத்துப்பேரு வந்திருக்காங்க. இன்னும் அஞ்சு நிமிசத்திலே பருப்பு பாயாசத்துடன் இலை போட்டாகனும்.'' முகத்தைக்கூடப் பார்க்காமல் அதிகாரத் தொனியில் ஆணையிட்டு அவர் அகன்று போவார். விடிந்தது முதல் தொழுவத்திலும் வயல்காட்டிலும் அடுப்படியுமாக மாறி மாறி இடுப்பொடிந்து உழைக்கிற இயந்திரமாய் அம்மா!

தனி ஒருத்தியாக நின்று ஒரு வழியாகக் குடும்பத்தோரை அம்மா ஒரு நிலைக்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்குள் உல்லாச சல்லாபங்களில் ஓங்கியபடி நகர்ந்து கொண்டிருந்த அப்பாவின் வாழ்க்கைத்தேர் வயோதிகத்தன்மையால் நொடித்துப் போய்த் தானாய்ப் பழுதுபட்டு நிற்பதற்கும் சரியாக இருந்தது.

ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிற கிழவனுக்கு அறுபதாங் கல்யாணம் செய்ய ஆசை. டாக்டர் நோயாளியின் மனம் சரியாக

வேண்டும் என்ற எண்ணத்தில் அறுபதாம் கல்யாணத்திற்கு மருத்துவமனையிலேயே ஏற்பாடு செய்கிறார். பிள்ளைகள் இந்த வயதில் கிழவனுக்கு இருக்கும் ஆசையைப் பாரு என்று வெறுக்கிறார்கள்.

வாசலிலே வந்து கூடப் பழகாத ஒரு கிராமத்துப் பொம்பளையைக் கோமாளி வேஷம் போட்டுப் பிடிச்சவங்களுக்கு முன்னாலே நிறுத்திக் கேவலப்படுத்தனுமாக்கும்! என்று பிள்ளைகளின் குமுறல்!

அக்கூட்டத்தில் அப்பா பேசுகிறார். '' நாள் கணக்கா நிமிசக் கணக்கான்னு நிச்சயமில்லாத இந்த நிலைமையிலே மணவறையிலே உட்கார்ந்து மாலை போட்டுக்கணும்னு ஆசைப்பட்டது எனக்காக இல்லை. எனக்குக் கழுதை நீட்டின ஒரே பாவத்திற்காக நாற்பது வருஷமா! எங்க குடும்பப் பாரத்தை பொதியாய் சுமந்து கழுத்தொடிஞ்சு நிற்கிறாளே இந்தப் புண்ணியவதி; இவளுக்குப் பதில் மரியாதை பண்ணனும்னு கொஞ்ச நாளாகவே ஒரு தவிப்பு; எங்களோட வாழ்க்கைக்கு முட்டுக் கொடுத்து முட்டுக் கொடுத்தே முதுகு முறிஞ்சு போய்க் கிடக்கிற இவளைப் பலரறிய சபை கூட்டிப் பாராட்டனும்னு மனசுக்குள்ளே ஒரு பதைபதைப்பு; இத்தனை வருசத் தாம்பத்தியத்திலே எனக்குச் சமதையா அவளை நினைச்சது கூட இல்லை. ஆனா உண்மையிலேயே அவளுக்குச் சமமா நிக்கிற தகுதி கூட இல்லாதவனாய்த்தான் என்னோட வாழ்க்கையை நான் நடத்தி இருக்கேன். இப்ப கூட என் கையாலே மாலை போடறதாலே புதுசா எந்தக் கௌரவமும் அவளுக்குக் கிடைச்சுடப் போறதில்லே! கண்ணை மூடறதுக்குள்ளே ஒரு மனுசங்கிற கௌரவமாச்சும் எனக்குக் கிடைக்கும். அதுக்காகத்தான் நான் வலிந்து இச்சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்பது பெண் எழுத்து உணர்த்தும் பெண்ணிய எதிர்பார்ப்பாகும்.

இங்கு 'புதுமைப்பித்தனின்'' பொன்னகரம்' என்ற சிறுகதையும் குறிப்பிடத்தக்கது. வறுமைப்பட்ட குடும்பம். நோய்வாய்ப்பட்ட தன் கணவனுக்காகச் சோரம் போய், கணவனைக் காப்பாற்றுகிறாள் மனைவி. இக்கதையில் கற்பு, வறுமை என்று எல்லாவற்றிற்கும் மேல்நிற்பது பெண்ணின் மனவலிமையாகும். சமுதாயம் பழிக்கும்; ஏன், கொண்ட கணவனே இரக்கப்படவும் செய்யலாம்; எதிர்ப்புக் குரலும் ஒரு வேளை எழுப்பலாம். மனத்தில இத்துணை மௌனத்

தொனிகள் பொன்னகரக் கதைத் தலைவிக்கு எழுந்திருக்கலாம். அவை எல்லாவற்றையும் மீறித் தன் கணவனுக்காக எதையும் நினைக்காது, தன்னைத் தியாகம் செய்தாளே! அந்தப் பெண்ணுக்கு , ''கற்பு, கற்பு என்று எழுப்பும் சமுதாயத்தின், ஓர் ஆணின் அனுதாபக் குரல் மட்டும் போதாது; தேவையுமில்லை.

கணவனே எதிர்பார்க்காத, கணவனுக்காக ஒன்றைச் செய்யத் தூண்டுகிற, பெண் மனத்தை, பெண் குலத்தை, எந்நிலையிலும் கணவன் புரிந்து கொள்ள வேண்டும்; கொண்ட கணவனே புரிந்து கொள்ள இயலாத தாய்மை மனம் பெண் மனம்; அவளைப் புரிந்து அவளது தன்மான உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். அப்பொழுதான் பெண்களின் கண்களில் கங்கையையும் பார்க்க இயலாது. பெண் பாவத்திற்கு, நிந்திப்பிற்குள்ளான ஆணுக்குப் பழியும் வராது. இத்தகைய தீர்வுகளை இன்றையை பெண் எழுத்துக்கள் முன் வைக்கின்றன.

**திருமண உறவும் முறிவும்:-**

'இந்த
வரதட்சணை வில்லை
வளைப்பது யார்?
ராமர்களுக்கு இன்று இரத்தமில்லை
ஜனகனோ பாவம்
சாய்வு நாற்காலியில்
எங்கே
சீதைகளே
கொஞ்சம் சேருங்களேன்'

என்பார் வைரமுத்து. வில்லை வளைப்பதற்குச் சேரும்முன், வாழ்க்கையின் முதுகெலும்பே இன்று பெண்களுக்கு முறியடிக்கப்படுகிறது. இங்கு பெண், ஆடு - மாடுகள். ' மனிதனைத் தேடுகிறேன்' கதையில் படைப்புத் தொழிலில் தீவிரமாய் முனைந்திருக்கும் சர்வேஸ்வரனுக்கு ஓர் அழைப்பு. நீ படைக்கும் மனித இனம் மட்டுமே அழிந்துவிடுவதாக ஒரு செய்தி; நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தகவல் வந்திருக்கிறது. உண்மை அறிக்கை தயார் செய்ய உத்தரவிடுகிறார் ஈசுவரன். ஒரு தரகர் கூற்று. ''உங்க குடும்பத்து

டேஸ்ட் எல்லாம் எனக்கு அத்துப்படி.'' உருப்படி எல்லாமே நல்ல கலர்; அப்படியே சந்தனமாய்த் தகதகக்கிறது; கால் லகரத்துச் சொல்லிவிட்டேன்; சாமர்த்தியத்திலே ஒண்ணோடு ஒண்ணு போட்டி போடும். ஒரு உருப்படி வாய்ப்பாட்டு; ஒண்ணு வீணை; இன்னொன்று நடன அரங்கேற்றம் பண்ணியிருக்கு; மகன் சொல்கிறான் அப்பா! ப்ளீஸ் இங்கே நடக்கிறது எதுவுமே புரியவில்லை.'' அது ஒண்ணும் இல்லைடா! மாமா, தான் பார்த்திருக்கிற பெண்களோடே திறமையை இப்படி உருப்படி கணக்கில அடுக்கிக் கொண்டு போறார்.

பிரம்மனுக்கு ஒரே ஆச்சரியம். எலும்பும், நிணமும் உயிரும் உணர்வுமான மனிதப் பிரஜைகளைத்தான் என் கற்பனையில் சிருஷ்டித்தேன். ஆனால் இவர்கள் மனித இரைச்சலில் தம்மைத் தொலைத்து உருப்படி, கேஸ்கள், சரக்குகளாக, அஃறிணைப் பொருட்களாக நிறமிழந்து போயிருக்கிறார்கள். காரண விதைகளை ஊன்றிய மனிதர்கள்தான், அவற்றை அறுவடை செய்தாக வேண்டும். இதற்குப் படைப்பாளி பொறுப்பேற்க முடியாது. தனது அறிக்கையை சர்வேஸ்வரனுக்கு எழுதிவிட்டு நிமிரும் பிரம்மனின் கண்களில் ஏன் இந்த நீர்க்குளம்.

படைத்த பிரம்மனின் கண்களில் மட்டுமல்ல! பெற்றவர்களின் கண்களிலும் தான் அதைவிடப் பாதிப்பிற்கு ஆளான பெண்களின் உள்மன ஓலத்திற்கு முடிவில்லை என்பதைப் 'பிரம்மன் தயாரிக்கும் அறிக்கை' என்ற உத்திமூலம் ஆசிரியர் இங்கு எடுத்துக் காட்டுகிறார். இன்னும்பெண்களின் பணத்தைப் பார்க்காது, மனத்தைப் பார்க்கும் நல்ல மனிதர்களைத் தேடத்தான் வேண்டியி ருக்கிறது என்ற எதார்த்தம் இங்கு நினைவுகூரத்தக்கது.

திருமணம் செய்வதற்கு வரதட்சணைப் பிரச்சினை தடையாக இருப்பது மட்டுமல்ல; திருமணத்திற்குப் பின்னும் அது தொடர்கதையாகத்தான் பெண்களின் வாழ்வில் தொடர்கிறது.

தாரணி தன் கணவனை நல்லவன் என்று நம்பியிருந்தாள்; ஒரு நாள்திடீர் அதிர்ச்சி; ''ஸ்கூட்டர் வாங்கிக் தருவதாக உன் அப்பன் சொல்லி இருந்தான் இன்னும் அதைப்பத்தி பேச்சே இல்லை இந்த மாசம் ஸ்கூட்டர் வாசலில் நிக்கலை, நீ வீட்டில் நிற்பே (மன்னிப்பின் மறுபக்கம்.ப. 20) என்கிறான்.

அது நடந்து விட்டது.வயிற்றில் குழந்தையுடன் பிறந்த வீட்டிற்கு வருகிறாள் தாரணி. கணவன் , முன்னால் காதலியை மணக்க விரும்புவதால் விவகாரத்தும் ஏற்படுகிறது. எப்படியோ விட்டுப்பிடிச்சி இவனைத் திருத்தி உன் வழிக்குக் கொண்டு வர முயலும்மா என்று முதிய தலைமுறை அப்பா அலறுகிறார். சமுதாயமும் அதையே எதிர்பார்க்கிறது.

தன்னை விரும்பாத, கணவனிடம் வாழ முற்படாத ஒரு பெண்ணின் மனத்திற்கு இங்கு படைப்பாளி முதன்மை தருகிறார் விவாகம், ரத்து ஆகிறது. விவாகரத்து ஆனபிறகு தாலிகழட்டி வைக்கப்படுகிறது. சித்தப்பா பதறுகிறார். என்னம்மா புனிதமான தாலி இல்லாது ஒரு பெண்.

மனைவி என்று ஒரு புருஷன் ஒரு பெண்ணை மதிக்கும் போதுதான் அவன் கட்டின கயிற்றுக்கும் மதிப்பு ஏற்படுகிறது. இல்லாட்டி அது வெறும் வேஷந்தானே! என் வாழ்விலே நான் வேஷம் போட முடியவில்லை என்ற பெண்ணின் மனத்துணிவு முன் நிறுத்தப்படுகிறது.

இங்கு தாலி என்ற வரையறையும் மீறப்படுகிறது. அப்படி இருந்தும் மாஜி ஆள் விடவில்லை. அதற்குடன்படாது அவர்கள் இருவருக்கும் முரண்பாடுகள் அதிகமாகத் தாரணியைக் கத்தியால் குத்தி விடுகிறான் கணவன்.

தாரணி காப்பாற்றப்படுகிறாள்.எத்தனை முயன்றும் யாராலும் கொலை முயற்சிக்குரிய ஆளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. தாரணியிடமிருந்து எந்தவிதப் பதிலும் இல்லை. தாரணி உயிர் பிழைத்ததால் கொலையாளி யார் என்பது பற்றி பிரச்சினையும் தீர்கிறது. இச்சூழலில் தான், பிறந்த குழந்தையைக் கூட இதுவரை பார்க்க வராத கணவன் தாரணியைப் பார்க்க வருகிறான். தன்னைக் குத்தினது தன் கணவன்தான் என்று தாரணி இதுவரை யாரிடமும் சொல்லவில்லை. அவ்வாறு சொல்லாததற்குக்காரணம் கணவன் மீதுள்ள ஆதங்கம் என்று சுற்றம் நினைக்கிறது. கணவனும் நினைக்கிறான்.

அப்பொழுது தாரணி சொல்கிறாள். உங்கள் மீதுள்ள அன்பினால் உங்களை மன்னிக்கவில்லை. ''என் பிள்ளையின் உணர்வுகள் பாதுகாக்கப்பட வேண்டும், அவன் தலை நிமிர்ந்து

வாழவேண்டும்'' என்பதற்காக மன்னித்தேன் என்கிறாள். **'ஒரு தாய் தன் குழந்தைக்கு எந்தவிதமான தியாகமும் செய்வாள்'** என்பதையும் கொண்ட கணவனாலும் புரிந்து கொள்ள இயலாத தாய்மை உணர்வை இக்கதை சுட்டுகிறது. இது மரபுவழி வரும் தாய்மை உணர்வின் வெளிப்பாடே ஆகும் . ஆனால் பெண் எழுத்து அத்துடன் நிற்கவில்லை. அவள் உள்மனப் போராட்டத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

கத்தியால் குத்தியது யார்? வேறு யாரேனும் தொடர்புண்டா? என்று காவல் நிலையம் , சந்தேகிக்கிற மாதிரி தாரணியிடம் வினாக்களை விடுத்தன! ஏன் எப்படி? என்னை விவாகரத்து செய்த ஆடவனும் வேறொரு பெண்ணை மணந்து கொண்டு வாழ்கிறார். அதைப்பற்றி யாரும் பேசவில்லை. கணவனை விட்டுத் தனியே வாழ்கிற என்னைப் பற்றி எத்தனையோ விமர்சனங்கள், சமுதாயத்தின் கண்ணோட்டத்தில்; ஏன் இந்த வித்தியாசமான பார்வை! இந்தக் கொள்கைகளைத்தான் வெறுக்கிறேன் என்று **பெண்ணெழுத்துக்கள் சமுதாயத்தின் வக்கிரப் பார்வையில் தவிக்கும் பெண்களின் மனநிலைகளை** எடுத்துக்காட்டுகின்றன. இதற்கு முடிவு, 'தேடல் நிலையில்' தான் உள்ளது. 'மௌனத்தின் அலறல்' என்ற கதையில் ஆண் எழுத்தாளர் புரட்சிகரமான ஒரு சிந்தனையைத் தொட்டுக் காட்டி இருக்கிறார். அவளின் கணவன் உயிருடன் இருக்கும்போதே, அவன் செய்த கொடுமைகளைத் தாங்காது வெள்ளைப்புடவை உடுத்தி வாழ்கிறாள். கணவன் இருந்தும் பூ, பொட்டு வைத்தும் கலர்ப்புடவை உடுத்துகிறாள் என்று மரபு மாற்றம் செய்துள்ளார். ஆனால் அவள் குடும்பம் என்ற வட்டத்தை விட்டு வெளியே வரவில்லை. மௌனத்தின் அலறல் அவள் மன உளைச்சல்களைத் தான் தொட்டுக் காட்டுகிறது.

ஆனால் லஷ்மியின் சிறுகதை 'மன்னிப்பின் மறுபக்கம்' பெண்ணை மதிக்காத பொழுது, பெண்குடும்பம் என்ற வட்டத்தை விட்டு வெளியேறுவது தவறில்லை. மரபு சார்ந்த தாலியை வேலியாகக் கொள்வதில் அர்த்தமில்லை என்ற எண்ண ஓட்டத்தைக் காட்டுகிறது. பெண் மரபு மீறலை ஆண் எழுத்துக்களும் சுட்டுகின்றன. எனினும் ' **'பெண்மரபு மீறினால் தவறு என்று சமுதாயம் குற்றம் கூறினாலும், அவளது மன உளைச்சல் தவிர்க்கப்படுமே என்பதில் பெண் எழுத்து கவனம்'** செலுத்துகிறது.

## முடிவெடுக்கும் திறனும் பெண்ணிய எழுத்தும்

குடும்பப் பிரச்சினை, பெண்களின் தனிப்பட்ட பிரச்சினைகள் என்று எதுவானாலும் அங்கு முடிவெடுப்பது ஆணே. இந்நிலை கணவன் மனைவி என்றால் கணவன் முடிவெடுப்பது சரி. சகோதரன் சகோதரி என்றால் அங்கு சகோதரன் முடிவெடுப்பது சரி. அப்பா - மகள்வாழ்விலும் அப்பா எடுப்பதுதான் சரி. இப்போக்குகள் சமுதாயப் பாரம்பரியமாக தொடர்ந்து வருகின்றன. தப்பித் தவறி பெண்முடிவெடுத்து, அது மாறிவிட்டால் பெண் ஏச்சுக்கும் பழிக்கும் ஆளாகிறாள்.

முதலில் பெண்கள் தம் வாழ்க்கைப் பிரச்சினைகளிலிருந்து மீள முடிவெடுக்கும் திறனை, அவர்கள் தாமே எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்தைப் பெண்ணிய வாதிகள் முன் வைக்கின்றனர்.

'எங்க அனுவை ஆம்பள மாதிரி வளர்த்திருக்கேன். கராத்தாவிலே அவதான் பெஸ்ட் கேட்ட்' என்று போன வாரம் கூட தன்னைப் பற்றி பெருமை பேசிக் கொண்டிருந்த அன்பான அப்பா தொலைந்து போன சோகம்! அனுவின் மனத்தில் அடர்த்தியாகப் பரவுகிறது.

பிக்னிப் போன இடத்தில், மூன்று முரடர்கள் வேனை முடக்கி, எல்லோரையும் ஒரு ரூமில் அடைத்துப் போட்டு விடுகிறார்கள். அப்பொழுதும் அனுவும் மற்ற ஆசிரியர்களும் சேர்ந்து, அவர்களுக்கு இருக்கும் மிகுந்த பசியடங்கினால் தான் மற்ற பேச்சு என்ற யுக்தியைப் பரப்பி மூவரில் இருவரை வெளியில் சாப்பாடு வாங்க அனுப்பி விடுகின்றனர். பெண்களின் கூர்மையான புத்தி இங்குச் செயல்பட அத்துடன் கராத்தே திறமையும் சேர அந்த ஒருவனையும் அடித்து நொறுக்கி விட்டுத் தப்பித்து விடுகின்றனர்.

உண்மையில் அங்கு பலாத்காரம் எதுவும் நடக்கவில்லை. ஆனால் அடுத்த நாள்! **பலாத்கார முயற்சி; தப்பி வந்த கல்லூரி மாணவியர்னு;** கொட்டை எழுத்துக்களில் பத்திரிகைச் செய்தி.

தன்மகளின் வாழ்க்கைக்காக அப்பா பதறுகிறார். இது தனது மகளின் வாழ்க்கை பற்றிய அப்பாவின் கவலை. கல்லூரி மாணவிகளைக் காப்பாற்றிய அனுவுக்குத் தங்கப்பரிசு கொடுத்துப்

பாராட்டு செய்ய விரும்பும் கல்லூரிக்குத் தம் மகளை அனுப்ப மறுக்கிறார். இது எதார்த்தமான தகப்பனின் சமுதாய அச்சம் என்பதுண்மை. ஆனால் ஒரு தாய் தோழி போலத் தன் மகளிடம் நடந்து கொள்ள வேண்டும். கஷாயம் குடி, உடம்பு வலி போய்விடும் என்று இதமாக ஆற்றிக் கொடுத்துவிட்டு அவள் கேட்கிறாள்; அம்மா கேட்கிற கேள்வி மகளின் உயிரை உலுக்கி விடுகிறது. ஆமாம் இப்ப பீரியட்ஸ் வர்ற நாளில்ல! இதை முழுசாக் குடுச்சுடு - உடனே வந்திடும் என்ன இது! வெறிப்பார்வையுடன் நீ எனக்கு அம்மா இல்லை போய்விடு என்று தற்கொலை செய்து கொள்ளும் அளவுக்கு டிப்ரசன் (Dipression) மனநிலைக்கு அனு போய்விடுகிறாள்.

ஆசியரின் உத்தி இங்குக் குறிப்பிடத்தக்கது. படிக்காத பெண்களுக்காக நடத்திய பெண்களுக்கு எதிரான பாலியல், பலத்கார நிகழ்ச்சி கண்டு மனம் தெளிவடைகிறாள் அனு. படிக்காத பெண்மூலம் அனுவாகிய படித்த பெண்ணின் மனநிலையை ஆசிரியர் மாற்றுகிறார்.

எவனோ ஒரு கலவானிப்பய கல்யாண ஆசைச்காட்டி குலைச்சுப் போட்டுட்டு , கைவிட்டுப் போட்டான்கிறதுக்காக என்னையே சாகடிக்க இருந்தேன் . உங்க பேச்சைக் கேட்டப்புறம உடம்பெல்லாம் புதுசா ரெத்தம் பாய்ந்ததைப் போல் உணர்ந்தேன் என்ற வெள்ளையம்மாளின்பேச்சு அவளுக்கு நினைவுக்கு வர அந்நிலையில் அது , மனத்தெம்பைத் தருகிறது.

இதை வெளியில் சொன்னால் நம் வாழ்க்கைக்குப் பயம் என்ற பெண்களின் எண்ணம் , ஆண்களுக்குச் சாதகமாய் அமைகிறது. அந்தச் சூழலைப் பெண்களின் மனத்துணிவுதான் மாற்றவேண்டும் என்ற உணர்வை இக்கதை சுட்டுகிறது.

பலாத்காரத்தாலே பாதிக்கப்பட்ட பெண் தன்னை மாய்ச்சுக்கிறதினாலே அது ஆண்களுக்கு இன்னும் சாதகமாக வசதியாகத்தான் போயிடுது. இது உடம்புக்கு ஏற்பட்ட சின்ன விபத்து என்று மட்டும் நாம் புரிஞ்சுக்கிட்டா, நமக்குன்னு வேறு ஒரு வாழ்க்கையை அமைக்கிற துணிச்சல் நமக்கு வந்திட்டதுன்னா; இப்படிப்பட்ட குற்றங்கள் தன்னாலே குறைந்திடும் என்று பாலியல் பலாத்காரம் குறைவதற்குரிய வழித்தட முயற்சிகளைப் பெண் எழுத்துக்கள் சுட்டுகின்றன.

இச்சூழலில் ஜெயகாந்தனின் அக்னிப் பிரவேசம் சுட்டத்தக்கது. அக்கினிப் பிரவேசத்தில் வந்த அவளுக்கும் நடந்தது அவளையறியாது அவளுக்கு நடந்த ஒரு பலாத்கார முயற்சிதான். இங்கு பழைய மரபுகளில் ஊறிய ஒரு முதிய பிராமணப் பெண்ணை அச்சூழலைப் புரிந்து தன் மகளின் வாழ்க்கையை நல்லபடி முடிவெடுக்கும் சிந்தனைத் திறனை அளிக்கும் வகையில் படைத்திருப்பது புதுமையான முயற்சி. பாதிக்கப்பட்ட பெண் இனத்திற்காக ஆண் எழுத்து முடிவெடுப்பது புரட்சிகரமான முடிவு.

ஆனால் **'பெண் எழுத்துக்கள் இன்றைய சூழலில் பாதிக்கப்பட்ட, பெண்ணே தன் வாழ்க்கை பற்றி முடிவெடுக்க வேண்டும்'** என்ற நிலையைச் சுட்டுகிறது.

அவ்வாறு துணிவுடன் செயல் பட்டால் தற்கொலை முயற்சிகள் குறையும்; பாலியல் பலாத்காரப் பாதிப்பிலிருந்து மீள முடியும். இளைய தலைமுறையினரே சிந்தித்து முடிவெடுக்கும் திறனை வளர்த்து, டிப்ரசன் மூடை மாற்ற வேண்டும் என்ற முடிவுகள் பெண் எழுத்துக்களின் போக்கில் வலியுறுத்தப்படுகின்றன.

### தாய்மை

**'பெண்மை என்பதே தாய்மையில் தான் முழுமை யடைகிறது'**. தாய்மைப்பேறு பெண்களுக்கு மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆனால் அதே நேரத்தில் பெண் தாய்மைப் பேற்றிற்குரியவள் என்பதால் பெண்களுக்குச் சில கட்டுப்பாடுகளையும் எல்லைகளையும் சமுதாயம் வகுத்துள்ளது. உணர்வு ரீதியாகப் பெண்கள் இங்கு அடக்கப்படுகின்றனர். பெண் குழந்தைப் பேற்றிற்குரியவள்; அக்குழந்தைகளைப் பேணிப் பாதுகாப்பவள்; குடும்பப் பொறுப்புடையவள்; எந்நிலையிலும் ஒத்துப் போகும் தன்மையுடைய்வள்; குடும்பம் என்ற அமைப்பிற்குக் கட்டுப்பட்டவள் என்ற நிலைகளில் பெண்களின் தனிப்பட்ட உணர்வுகள் நசுக்கப்படுகின்றன. இவை எல்லாம் தந்தைவழிச் சமுதாய அமைப்பு பெண்ணின் மீது சுமத்திய கருத்தாக்கங்களாகும்.

தாய்மை என்ற உணர்வின் வழிக் குழந்தைகளைப் பேணும் நிலையில் மரபுவழிப்பட்ட தன்மைகளையே பெண்ணிய எழுத்துக்கள்

முன் வைக்கின்றன. இதில் குறிப்பிடத்தக்கது கோமகளின் 'மனச்சந்நிதி' ஆகும்.

அம்மாவின் முழுமனமும் பிள்ளைகளுக்குச் சமைத்துப் பரிமாறும் நிலையிலேயே படிந்துள்ளதைப் 'பெண்ணிய எழுத்துக்களில்' உணர முடிகிறது. வீட்டை அடைந்தபோது, உள்ளே அடுக்களையில் லட்சுமி அம்மாள் இன்னும் சற்று நேரத்தில் வந்து குழுமிவிடப் போகும் பிள்ளைகள், பேரன்கள், மருமகன்களுக்காகச் சிரத்தையாக அக்கார அடிசில் பண்ணிக் கொண்டிருந்தாள் (கோமகள், மனச்சந்நிதி, ப.14) என்பது கோமகளின் பார்வையாகும்.

வாஸந்தியும் இந்தப்பார்வையிலிருந்து முற்றிலும் விலகிப் போய்விடவில்லை. அம்மா! இறக்கும் தருவாயில் கூட கோபாலி (அதாவது அனுவின் அப்பா) சாப்பிடலியா, இன்னும் (வாஸந்தி, காலம் அவள் சொன்னது, ப.120) என்று சொன்ன வார்த்தைகளின் கனத்தை அவள் புரிந்து கொண்டாள் என்று தாய்மை உணர்வைத் தொட்டுக் காட்டுயிருக்கிறார் ஆசிரியர்.

'தாய்மை' என்பது குழந்தைகளின் நினைவாகவே எப்பொழுதும் இருப்பது; பசியாற உணவு கொடுப்பது; எதிர்கால நலனில் அக்கறை கொள்ளுவது; அவர்களுக்காகத் தன் விருப்ப உணர்வுகளை எல்லாம் விட்டுக் கொடுப்பது என்று பலவிதப் பரிமாணங்களைப் பெண்ணிய எழுத்தாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.ஒரு தொகுதியில் வரும் எட்டுக் கதைகளில் ஆறு கதைகளாவது தாய்மையைப் பற்றிப் பேசி விடுகின்றன.

மூன்று குழந்தைகளுக்குத் தாய்; அடுத்த குழந்தை வயிற்றில்; உடம்பில் சொல்ல முடியாத அசதி; பிள்ளைகளைக் கவனிக்கும் பொறுப்பு. வீட்டின் பொருளாதார நிலவரம் என்று அனைத்தையும் அந்தப்பெண் சீர்தூக்கிப் பார்க்கிறாள்.

கணவனுக்கு அதைப் பற்றிக் கவலை இல்லை. பிள்ளைகள் எப்படி இருக்கிறார்கள் என்பதில் அக்கறை காட்டமாட்டான், அலுவலக வேலையைத் தவிர மற்ற நினைவுகள் அவனுக்கு வருவது இல்லை.

இன்று டாக்டரிடம் சென்று வந்தேன். பணப்பற்றாக்குறை என்ற வார்த்தைகள் ராதாவின் வாயிலிருந்து வருவதற்கு முன், பணத்தைப் பற்றி உனக்கு என்ன தெரியும்

உனக்குக் குழந்தையைச் சுமக்கப் பிடிக்கவில்லையோ! என்று கேட்கிறான் கணவன். குடும்பச் சுமைகளைச் சுமப்பது அவளுக்குரியது. ஆனால் தன்னை மீறி அவள் முடிவு எடுப்பதில் அவனுக்கு ஆதங்கம். இருவரிடமும் மௌனப் போராட்டம் தொடர்கிறது.

இறுதியில் மருத்துவமனையில் ஓடோடிச் சென்று மனைவியைச் சேர்க்கிறான். அவள் பிரசவ வேதனையிலே ஓலமிடும் போது, கணவனாக இருந்தும் இந்த வேதனையைத் தான் அனுபவித்து இதம் அளிக்க முடியுமா? என்று அவன் மனம் மனைவியின் துயரத்தைப் புரிந்து கொள்கிறது. பெண்ணின் எதிர்பார்ப்பும் இங்குச் சுட்டப்படுகிறது.

இந்த மாற்றங்கள் காக்கப்பட வேண்டும் என்று பெண்ணியத்தின் தடம் இங்குத் தாய்மையின் வழிக் கோடிட்டுக் காட்டப்படுகிறது. **ஆணுக்கும் பெண்ணுக்கும் வாழ்க்கை நிலைப்பாடு ஒன்றுதான் என்பதைச் சமுதாயம் புரிந்து கொள்ளவேண்டும் என்ற வருத்தம்** பெண் எழுத்தில் தொனிக்கிறது.

குழந்தை இறந்து பிறக்க, சுந்தரம் மனைவி நன்றாக இருந்தால் போதும் என்று ஏற்றுக் கொள்கிறான். ''குழந்தை! குழந்தை அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாது போல இருக்கிறதே; நீதான் வேண்டாம் என்றாயே ராஜி; என்னை நீங்கள் புரிந்து கொண்டது இவ்வளவுதானா? நான் போதும் என்றேன். அதனால் எனக்கென்று ஏற்பட்டுவிட்ட எதனையும் இழக்கத் தயாராகி விட்டேன் என்று அர்த்தமா.'' இந்தத் துயர்நீங்க அது திரும்பவும் எனக்குக் கிடைக்கத் தான் வேண்டும் என் உயிரின் உயிரை நான் மீட்க ஆசைப்படுகிறேன் என்கிறாள்.

என்ன அதிசயமான மன அழைப்பு. என்ன விசித்திரத் தாய்மை; இத்தாய்மைத் தத்துவத்தைப் பற்றிக் கடவுள்தான் விளக்கம் தரவேண்டும் என்று முடிக்கிறார் கோமகள்.

இங்குப் பெண் எழுத்தாளர்கள் தாய்மை என்ற உணர்வு சோகமான சுகத்தைக் கொடுப்பதை ஒத்துக் கொள்கின்றனர். லக்ஷ்மி, கோமகள், வாஸந்தி போன்ற மூத்த தலைமுறையினர் அனைவரும் தாய்மைப் பண்பிற்குள் கரைந்து ஒரே கோட்டில் நிற்கின்றனர்.

அனைவரும் ஒரே தளத்தில் ஒரே பாதையில் சென்றாலும் அம்பையின் சிறுகதைகள் வேறொரு தளத்தை நோக்கிச் செல்கின்றன.

''தாய்மை
அது பெண்களுக்குரிய ஒன்றா!
இல்லை. அது பொதுவான உணர்ச்சி;
உணர்ச்சிகளில் ஆண், பெண் இல்லை. இது
ஆணுக்கு இது பெண்ணுக்கு என்று பிரித்தால்
தான் பிரச்சனையே!
உடலின் எந்த உறுப்புக்கள் அவளைப்
பௌதீக ரீதியில் தாயாக்குகின்றன
யோனி, கருப்பை, முலைகள் இவை
இருந்துவிட்டாலே அந்த உணர்ச்சி வந்துவிடுமா?''

தாய்மை உடம்பை ஒட்டிய ஒரு உணர்ச்சி இல்லை. பெண்ணுக்கு மட்டுமே இயல்பாய் உடம்பொடு வருவது இல்லை. ஆணுக்குக் குழந்தையிடம் பாசம் அவன் உடம்பின் எந்தக் குறிப்பிட்ட உறுப்பிலிருந்து வருகிறது.''

எல்லா உணர்ச்சிகளும் பொது ,இயல்புகளா! ஆமாம் அப்படித்தான் அவற்றைப் பார்க்க வேண்டும். அப்போது யார் வேண்டுமானாலும் எந்த உணர்ச்சியை வேண்டுமானாலும் இயல்பாக்கிக் கொள்ளலாம்.

அப்படியானால் எது பலம்; எது பலவீனம் என்ற பாகுபாடு போய்விடும். எது நசுக்கல்; எது அடிமைத்தனம் என்பது மாறிவிடும். எது அதிகாரம்; எது செயலுக்கு என்று பார்க்கும் நோக்கு போய்விடும் (வீட்டின் மூலையில் ஒரு சமையலறை, வாமணண் ப. 91) என்ற அம்பையின் எழுத்துக்களில் தாய்மை உணர்வைக் கேள்விக்கு உட்படுத்துகிறார்.

ஆண்களிலிருந்து இயற்கையாகவே பெண்கள் வேறுபட்ட உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த இயல்பான உடலமைப்பை வைத்துத் தந்தை வழிச் சமுதாயம் தாய்மை என்பது உடலமைப்பினால் மட்டும் வந்தது என்று பெண்களைப் பாகுபடுத்தி அதிகாரம் செலுத்துகின்றது. இத்தகைய ஆதிக்கத் தன்மையை அம்பை எதிர்க்கிறார். தாய்மை உணர்வு இருவருக்கும் பொது என்று பார்த்தால்

அங்கு அடிமைத்தனத்திற்கு அதிகாரத்திற்கு வழி இல்லை. இத்தளத்தில் தாய்மை உணர்வைப் பார்க்க வேண்டும் என்று புதுத்தளத்திற்கு இட்டுச் செல்கிறார் அம்பை. அட்ரின் ரிச் கருதுவதுபோல் தாய்மை என்ற உணர்வினால், பெண்களே அனைத்துச் சுமைகளையும் சுமத்தல் வேண்டும்; தன்னை இழந்து தியாகியாகத் திகழ வேண்டும் என்று ஆண் சமுதாயம் வரையறுத்த சட்டகத்தை அம்பையும் கேள்விக்குறியாக்குகிறார்.

## பலாத்காரமும் பாலியல் பிரச்சினைகளும்

பொதுவாகச் சமுதாயத்தில் பாலியல் பலாத்காரங்கள் இப்பொழுது மலிந்து கிடக்கின்றன. காவல் நிலையங்கள், தனித்த வீடுகள் என்று பல இடங்களில், பாலியல் பலாத்காரங்கள் நிகழ்கின்றன. முடிவாக அப்பெண்கள் தமக்கு ஏற்பட்ட பழியைத் தீர்த்துக் கொள்ளத் தற்கொலையைத் தேர்ந்து எடுக்கின்றனர். அல்லது எந்த ஒரு தீர்வும் காணாது ஒரு மரபுவழிப் பாதையிலிருந்து நின்று புலம்புகின்றனர். மயக்கமான நிலையிலிருந்து மாறித் தீர்வு காணும் தளத்திற்கு இன்றைய பெண் எழுத்தாளர்களின் (குறிப்பாக சுசிலா, அம்பை) சிறுகதைகள் சென்றிருக்கின்றன.

இந்நிலையில் 'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' என்ற சிறுகதை குறிப்பிடத்தக்கது. இக்கதையின் தலைப்பே பாலியல் பலாத்காரத்தைக் குறிக்கும் குறியீட்டுத் தலைப்பாகவே அமைகிறது. பெண்கள் கைது செய்யப்பட்டுப் பாதுகாக்கும் காவல் நிலையங்களே பலாத்கார நிலையங்களாக மாறும் நிலையை அம்பை குறிப்பிடுகிறார். நேர்மையான நீதி பெறமுடியாத அவலத்தைச் சுட்டுகிறார்.

''நீதிபதி எதிரில் கூண்டில் ஒரு பெண்
நீ கன்னியா
இல்லை
அப்படியானால் நீ பலாத்காரம் செய்யப்படவில்லை
பலாத்காரம் நடந்தபோது நீ கத்தினாயா!
இல்லை என் வாயைக் கட்டிவிட்டார்கள்
கத்த முயற்சியாவது செய்தாயா!
இல்லை நான் மயங்கிவிட்டேன்
அப்படியானால் இது பலாத்காரம் இல்லை
நீ உடன்பட்டு நடந்ததுதான்.

கேலிச் சித்திரத்தை ஒரு மிகத் தடித்த சிவப்புக் கோடு பெருக்கல் குறியால் அடித்திருந்தது. எதிரே அம்புக் குறியிட்டு அஞ்சு எழுதியிருந்தாள். இது கடந்த கால சரித்திரம் (அம்பை கறு. குதி. சது.ப.80)

இதுதான் பலாத்கார முயற்சிக்கு இன்று பெண்களுக்குக் கிடைக்கும் பதில். இப்பிரச்சினை தீரத் தன்னைப் பற்றிப் பெண் கவலைப்படக் கூடாது. மனபலத்துடன் ஜனபலமும் வேண்டும். பெண்கள் தங்கள் பிரச்சினைகளைத் தங்களுக்குள்ளேயே பூட்டி வைக்காது ஒன்று திரட்டி வெளிப்படுத்த வேண்டும். பலாத்கார எதிர்ப்பு பற்றிய ஊர்வலத்தையும் கதையில் அம்பை கட்டுகிறார். பெண்கள் ஒன்று திரள்வது மட்டும் போதாது.

''தன் உடம்பில் மெல்லிய அதிர்வுகளையும் தெரிவிக்கப் புதுமொழி உருவாக்க வேண்டும். அது எப்படி வரும். காலால் மிதித்து நசுக்கப்பட்டவர்களின் நாடியினுள் ஒரு மொழி ஊற்று இருக்கிறது. அதன் நாக்குகள் நம்மைத் தீண்டி நம் சருமத்தைக் கரகரவென்று நக்க வேண்டும்.''

ரோஸாவின் வழக்கு பற்றி தயாரித்த இந்த அறிக்கை இது வெறும் சொற்களாலான மூட்டை கட்டப்பட்ட அறிக்கை அல்ல; அந்தச் சொற்களினூடே ஓர் உயிரின் இழை தென்பட்டால் அதைப் பற்றிக் கொள். அதில் எங்காவது முழு உயிருடன் படபடத்தவாறு. அது ''எங்கள் மொழியின் முதல் குரல். அதில் ரோஸாவின் உள்மூச்சு கலந்திருக்கும்'' என்று பெண்மொழி உருவாக்கத்திற்கும் குரல் கொடுக்கிறார் அம்பை.

## உடல்மொழியும் பெண்எழுத்தும்

1. மொழி என்பது பொதுவாக இருந்தாலும், ஆண்களின் ஆளுமையும் அதிகாரமும் நிறைந்தது. மொழியைக் கையாளுவதிலும் ஆண், பெண் பாகுபாடு உள்ளது[1]

2. இன்றைய இக்காலப் பெண்ணிய இலக்கியப் படைப்பாளியும் பெண்ணித் திறனாய்வாளருமான சிவகாமி, காதல், கற்பு, திருமணம் இவற்றைப் புரிந்து கொண்டு இவற்றின் மீதான

அதிகாரம் எப்படி உடல்மீதான அதிகாரமாக மாறுபடுமோ அதுதான் உடல்மொழி [2] என்று விளக்குகிறார்.

3. உடல்மொழி என்பது பெண்ணிய இலக்கியத் திறனாய்வு நோக்கில், பெண்ணுடலை எழுதலாகும். பெண் உடலையும் பெண் வித்தியாசங்களையும் எழுத்தில் ஏற்றிக் காட்டுவது தான் பெண்ணுடலை எழுதுதல் என்று கருதப்படுகிறது. அம்பைக்கு முன்னுள்ள மூத்த தலைமுறை எழுத்தாளர்கள், உடல் உபாதைகளைக் காட்டிச் சென்றுள்ளனர். ஆனால் உடலை மறைக்காது எழுதுதல் என்பதில் தனிப்பட்ட கவனம் செலுத்த முன்வரவில்லை.

இன்றையப் பெண்ணியப் படைப்பாளிகள், அகவய அனுபவம் மட்டுமல்லாது உடலில் ஏற்படும் பெண்களுக்கே உரிய சின்னச் சின்ன வலிகளைக் கூட ஒளிவுமறைவுமின்றி வெளிப்படுத்தி யுள்ளனர். அத்துடன் நில்லாது; ஆணின் உடல் உறுப்பு வர்ணனைகளைய்யும் தான் உணர்ந்தவாறு எழுதியுள்ளனர். இத்தகைய வெளிப்பாட்டில் அம்பையின் 'வாமனன்' ( வீட்டில் ஒரு சமையலறை, பக். 91-92) என்ற சிறுகதை குறிப்பிடத்தக்கது.

இதுவரை எழுத்தாளர்கள் பெண்ணின் இயல்புகளை, காதல் நோயால் உடம்பில் ஏற்படும் மாற்றங்களைத் தம் படைப்புக்களில் காட்டிச் சென்றுள்ளனர். ஆனால் அம்பை பார்வை வித்தியாசமானது. இவர் பெண்களைப் பற்றிச் சொல்லும்போது

''ஒரு கருப்பை
இரு முலைகள்
ஒரு யோனி'' (பக்.91)

இது பெண். இது மட்டுமே பெண் என்கிறார். ஆண்கள் சமுதாயத்தில் பெண் போகப் பொருளாகப் பார்க்கும் நிலையை இந்த எழுத்து தொனிக்கிறது.

இதே மாதிரி தன் பிள்ளைக்குப் பால் ஊட்டும் ஒரு தாயின் உடலுறுப்பை ''மடக்கிய ரவிக்கையிலிருந்து வெளிப்பட்ட ஒரு முலைக் காம்பு விரைத்தது. இழுத்து அதைச் சிறு சப்பலுடன் கவ்விய சிறு உதடுக்ள்'' (அம்பை, வீட்டின் மூலையில் ஒரு சமையல் அறை, ப.1) என்று வர்ணிக்கிறார்.

'கறுப்புக் குதிரைச் சதுக்கம்' என்ற கதையில் காவல் துறையினரிடம் அடி வாங்கிச் சித்திரவதையில் அமுங்கி இருக்கும், ஓர் ஆடவனின் நிலையை, ''மார் மயிரெல்லாம் ரத்தம், ஒரு காலு மடங்கி நீலமா கிடந்திச்சு. லுங்கி விலகிச்சு. தொடையெல்லாம் நீலம். கொட்டை, பலூன் மாதிரி வீங்கி நவாப்பழக் கலர்ல பளபளன்னு இருந்துச்சு. இன்னிக்கும் கண்ணை மூடினா தெரியுது அந்த வீங்கின கொட்டைதான்'' (பக்.69-70) என்று ஆண் அடிபட்டபோது பெற்றிருக்கும் அவலநிலையை உணர்த்துகிறார்.

இதுபோல, பெண்ணுக்கு நேர்ந்த பாலியல் பலாத்காரத்தை எதிர்த்துப் பெண்கள், ஊர்வலத்தில் ஏற்படும் பெண்களின் மனநிலையை வெளிப்படுத்தும் தன்மையும் இங்கு எடுத்துக் காட்டத்தக்கது. சிரிப்பு, கேளி, கோபம், விமர்சனம், படபடப்பு, ஆரவாரம் ஆக்ரோஷம் எல்லாம்தான் இருக்கும். ''ஆணின் கொட்டையில் இரண்டு உதை விட்டாலே போதும் எங்கள் குமுறல் அடங்க'' (அம்பை ப. 60) என்று தன் மன உணர்வின் எரிச்சலை அம்பை வெளிப்படுத்திக் காட்டுகிறார். அம்பை பெண்ணியவாதி என்பதும், அவர் எழுத்துக்கள் மாறுபட்ட புதிய தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதும் உண்மைதான். எனினும் இங்கு அம்பையின் துணிச்சலும் வித்தியாசமான எழுத்துப் போக்கும் பெண் காலம் காலமாக ஒடுக்கப்பட்டிருக்கும் ஆற்றாமையைக் குறிக்கின்றன. எதையும் தணிக்கை செய்யாது எழுத வேண்டும் என்ற தளத்தை நோக்கிப் பெண்மொழி செயல்பட்டுக் கொண்டிருக்கும் திறனை இங்கு உணரமுடிகிறது.

## முடிபுகள்

1. கோமகள், லக்ஷ்மி, வாஸந்தி போன்ற மூத்த தலைமுறையினர் தாய்மை என்ற உணர்வுக்குள் கரைந்து போகின்றனர். ஆனால் இன்றையப் பெண்ணிய எழுத்துக்கள் தாய்மை என்ற உணர்வை மாறுபட்ட கோணத்தில் இருவருக்குமுரியதாகப் பொதுமைப் படுத்திப் பார்க்கின்றன.

2. குடும்பத்தில் தந்தை அல்லது குடும்பத் தலைவன் தான் குடும்பப் பிரச்சினைகள் முதல் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முடிவெடுப்பான். இன்றைய உலகில், பெண்ணியவாதிகளின்

பார்வையில் பெண்கள் தம் பிரச்சினைகளுக்கு முடிவெடுக்கும் திறனை ஏற்படுத்திக் கொள்ளும் விழிப்புணர்வைக் கதைகளில் காணமுடிகிறது.

3. 'பாலியல் பலாத்காரம்' இன்றைய எழுத்துக்களில் வெளிப்படையாகப் பேசப்படுகிறது. அதை மறைத்தால் ஆண்கள் உலகிற்குச் சலுகையாகப் போய்விடும். ஆதலால் அதை மறைக்காது வெளிக்கொணரப் பெண்கள் தயங்கக் கூடாது. ஒன்று சேர வேண்டும். ஆண்களின் முத்திரையைக் கிழிப்பதுடன் அப்பிரச்சினையைப் பெண்கள் துணிவுடன் எதிர்கொள்ள வேண்டும் என்பதில் இன்றைய எழுத்துக்கள் கவனம் செலுத்துகின்றன.

4. பாலியல் பலாத்காரத்திற்குள்ளான பெண் முன்பு மனம் பாதிக்கப்பட்டுத் தற்கொலை செய்தாள் அல்லது அவளுக்குப் பைத்தியம் பிடிக்கும். ஆனால் இன்று பாதிப்பிற்குள்ளான டிப்ரசன் மூட் மாற்றப்படுவதற்கான வழிமுறைகளைப் பெண் எழுத்துக்கள் முன் வைக்கின்றன.

5. ஆணின் அதிகாரம், தாய்மை, திருமணம், கற்பு என்ற தளத்தின் மீதும், அவளது உடம்பின் மீதும் கட்டமைக்கப் பட்டிருக்கிறது என்பதை அம்பை சுசிலா எழுத்துக்கள் தொட்டுக் காட்டுகின்றன.

6. தொடக்ககாலப் பெண் எழுத்துக்கள் பெண் பிரச்சினைகள் பெண்களின் மன உளைச்சல்களைச் சுட்டின. இன்று பெண்களின் பிரச்சினைகளுக்குரிய மூலத்தையும், தீர்வுகளையும் முன் வைக்கின்றன பெண் எழுத்துக்கள். இவை எல்லாவற்றையும் விட ஆணின் அதிகாரம் அல்லது சமூகம் பெண்ணைக் கட்டமைத்திருக்கிற பார்வை பெண்ணின் உடலின் மீது உள்ளது என்ற ஓர் உணர்வுடன் எழுத்துக்கள் திசை திரும்பி உள்ளன.

7. எதிர்கால மொழி பெண்மொழிக்குச் சிறப்பிடம் நல்கும் என்று எண்ணுதல் பெருமைதான். பெண் உடலை எழுதும் நிலையில் இன்றையப் பெண் எழுத்துக்களின் வெளிப்பாடு காலம் காலமாக ஒடுக்கப்பட்டிருக்கும் பெண் மனங்களின் கொந்தளிப்பு என்பதையும் உணரமுடிகிறது.

8. ஆண் உடலை எழுதுதல், பெண் உடலை எழுதுதல் என்ற பெண்மொழி வெளிப்பாடு ஆணின் அதிகாரத்தைச் சிதைக்கும் நோக்குடன் உள்ளது. எனினும் இன்றையப் பெண் எழுத்துக்களை

வாசிக்கும் பொழுது, முகம் சுளிக்க வைப்பதுடன், பெண் மொழி கொச்சையாகப் போய்விடுமோ என்ற மன ஆதங்கமும் திறனாய்வாளர்களிடை உள்ளது. இதற்குப் படைப்பாளர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

## குறிப்புகள்

1. சிவகாமி, புதிய கோடாங்கி, உடல்மொழி, ப.61, ஏப்.2003
2. மேலது, ப.10, மே, 2003

## துணைநூற்பட்டியல்

### தமிழ் நூல்கள்


1. ஆண்டாள் பிரயதர்ஷணி, பெண் எழுத்து, ஏகம் பதிப்பகம், சென்னை, 2003
2. சண்முக சுந்தரம், பெண்ணியம் (கட்டுரைகள்), காவ்யா, பெங்களூர்
3. செல்வி திருச்சந்திரன், தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்ணின் நோக்கு, குமரன் பதிப்பகம், சென்னை, கொழும்பு, 1997
4. தமிழண்ணல், ஔவையார், சாகித்திய அகாதெமி, புதுதில்லி, 2001
5. தேவதத்தா, கமலி, பெண்ணியக் கலைச்சொல் விளக்கக் கையேடு, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், சென்னை, 1992
6. பக்தவச்சல பாரதி & சம்பத், இரா, (ப.ஆ), பெண்ணிய ஆய்வுகள், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, 1998
7. பரிமளம், ஆ., இந்துப் பெண்ணியம், ஐடியல், மதுரை, 1994
8. பஞ்சாங்கம், க., பெண் – மொழி, புனைவு, காவ்யா, பெங்களூர், 1999
9. பாண்டியன், ஐ.கா., ஔவையின் உளவியல் & ப்ராய்டு – லெக்கானின் மன அலசல், கார்முகில் பதிப்பகம், மதுரை, 2003
10. பிரேமா, இரா., பெண்ணியம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1994

11. பிரேமா, இரா., பெண்ணியம் - அணுகுமுறைகள், தமிழ்ப்புத்தகாலாயம், சென்னை, 1998

12. மல்லிகா, அரங்க., தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி.லிட்.) சென்னை, 2002

13. மகாதேவன் கதிர், இரா. மோகன், (தொ.ஆ.), பெண்ணியம், தமிழியல் பள்ளி, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1994

14. மணவாளன், கே.ஏ., ஆண்டாள், இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்திய அகாதெமி, சென்னை, 1996

15. மணி, பெ.சு., சங்க கால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், 1997

16. முத்து சிதம்பரம், பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1995 (மு.ப.)

17. முருகரத்தினம் (தொ.ஆ.), தமிழிலக்கியத்தில் பெண்ணியமும் தலித்தியமும், ஞாலத்தமிழ்ப் பண்பாட்டு ஆய்வு மன்றம், மதுரை, 2000

## ஆங்கில நூல்கள்

1. Freud, S., Feminity Introductory Lectures on Psycho Analysis, SE22, PFC-2

2. Gallop, Jane, Feminism and Psycho Analysis: The Daughter's Seduction, Corwell Unviersity Press, Dtaca, 1982

3. Humm, Maggie, Feminist Criticism, Women as Contemporay Critics, The Marwest Press, Susser, 1986

4. Jacuss Lacon, La Psycho Analysis, Sarbon, 1957

5. Linda Kauffrecon (Ed.), Feminism and Institutions (Dialogues on Feminist Theory), Basil Blackwell Ltd., 1989 (F.P.)

6. Mary Eagleton (Ed.), Feminism Literary Theory, A Remal, Basil Blackwell, 1986 (F.P.)

7. Mitchell, J., Psycho Analysis and Feminism, Penguin, Hermonds Worka, 1975

8. Rich. Adrienne, Of Women Born: Mother as Experience and Institution, Bantan, New York, 1986.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம் | 30.00 |
| தமிழிலக்கிய வகைமையியல் - 3 தொகுதிகள் | 395.00 |
| தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம் - 2 தொகுதிகள் | 190.00 |
| மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண் | 40.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி.1851-2000 | 180.00 |
| தமிழர் கண்ட தாவரவியல் | 40.00 |
| இதழாளர் பெரியார் | 160.00 |
| திராவிட இயக்க இதழ்கள் தொகுதி 1 | 60.00 |
| சைவசித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை | 65.00 |
| பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம் | 55.00 |
| காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன் | 65.00 |
| திருவாவடுதுறைப் புராணம் | 250.00 |
| மகாவித்துவான் ரா. ராகவையங்கார் | 30.00 |
| சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார் | 25.00 |
| தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும் | 20.00 |
| திருக்குறளில் பொதுநிலை உத்திகள் | 30.00 |
| தமிழிலக்கியத்தில் மனிதநேயம் | 115.00 |
| தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் | 30.00 |
| தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும் | 25.00 |
| வ.உ.சி. பன்முகப் பார்வை | 25.00 |
| இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்தரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும் | 40.00 |
| பாரதியின் சமுதாயச் சிந்தனைகள் | 25.00 |
| சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர் | 80.00 |
| தெ.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும் | 25.00 |
| சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள் | 45.00 |
| மக்கள் நேயச் சுயமரியாதை | 30.00 |
| வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் | 130.00 |
| தமிழ் ஆய்வு இதழ்கள் | 50.00 |
| பண்டிதமணி மு. கதிரேஞ் செட்டியார் | 40.00 |

**557** பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும் **40.00**